பக்கங்கள் : 20+VIII=28

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை (03.07.2005) UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர் :219

# இராணுவ மின்சார வேலியில் சிக்குண்டு
# குருநகர் இளைஞன் துடிதுடித்துப்பலி!

## தொழில் முடிந்து திரும்புகையில் சம்பவம்
## மீனவர்கள் சீற்றம்! நாளை முழு அடைப்பு!

குருநகர், ஜூலை 3

**கடற்றொழிலுக்குச் சென்று திரும்பிய குருநகர்ப்பகுதி இளைஞர் ஒருவர், மீன்பிடி இறங்குதுறை அருகே இராணுவ மின்சாரப் பாதுகாப்பு வேலியில் சிக்குண்டு துடிதுடித்துப் பலியானார். இந்தச் சம்பவத்தினால் சீற்றமடைந்திருக்கும் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் இராணுவ நிலைகளையும் பாதுகாப்பு வேலிகளையும் அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு கோரி நாளை பெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகிவருகின்றனர்.**

குருநகர் கடற்கரையோரப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கிருந்து குடாக் கடலுக்கு தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் போகும்போதும், தொழில் முடிந்து திரும்பும் போதும் குருநகர் இறங்குதுறைப் பகுதியில் வைத்துச் சோதனையிடப்படுகின்றனர். இதற்கென மீனவர்களைச் சோதனையிடும் சோதனைச் சாவடியும் அவர்கள் இறங்குதுறைக்குச் சென்று வருவதற்கான கம்பிவேலியிடப்பட்ட பாதைக் கடவையும் அப்பகுதியில்

(20ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே சூரியகாந்தியில்

★ ஜூலை - 2005 கொதிக்கிறது தேசம்...!

★ கிழக்கைத் தனிமைப்படுத்த திரைமறைவில் வியூகம்...

★ யாழ். பொது நூலகம் பற்றிய கனவு பலிதமாகுமா?

★ தமிழ்ப்பெண்கள் மீதான மேலாண்மை (Power of Women) - *ஒரு பார்வை*

★ நவாலிப் படுகொலை!

## மல்லாகத்திலிருந்து மடுசென்ற பக்தர்கள் விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,ஜுலை3

மடுமாதா ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிய பக்தர்களை ஏற்றி வந்த மினிபஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் மாங்குளம் பகுதியில் வீதியை விட்டு விலகித் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது. அதிலிருந்த பயணிகள் பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

படுகாயங்களுக்குள்ளான நால்வர் நேற்று இரவு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

கே.விஜயரட்ணம் (வயது 30), என்.றோகினி (வயது 20), கே.இராசதுரை(வயது40), ஜி. றெலக்ஷன்(வயது 6),

இவர்கள் நால்வரும் மயிலிட்டியைச் சேர்ந்தவர்கள். தற்சமயம் மல்லாகம் நீதிவான் முகாமில் தங்கி வாழ்ந்துவருகின்றனர்.

மல்லாகத்திலிருந்து பக்தர்கள் சிலரால் வாடகைக்கு அமர்த்திச் செல்லப்பட்ட மினி பஸ்ஸே தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சிறுகாயங்களுக்கு உள்ளாகிய பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றனர். (ஐ-13)

## கல்குடாவில் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஜுலை3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா பொலீஸ் நிலையத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் வைத்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுற்பகல் 11.15 மணிளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அல்பிட்டியாவைச் சேர்ந்த சமிந்த றொசான் சிறிதுங்க(வயது 29) என்ற குடும்பஸ்தரான பொலீஸ் கான்ஸ்டபிளே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

கல்குடா பொலீஸ் நிலையத்தில் பணி புரியும் இவர், அங்கிருந்து வெளியில் சென்றுவிட்டு மீண்டும் பொலீஸ் நிலையத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் சுடப்பட்டார் என்றும் -

இரு சைக்கிள்களில் வந்த நால்வர் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3)

## மட்டக்களப்புக்கு இராணுவத் தளபதி விஜயம்

மட்டக்களப்பு,ஜுலை3

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துமாறு அங்கு நேரில் விஜயம் செய்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தின் புலனாய்வுத்துறை உத்தியோகத்தர்கள் இருவர் உட்பட மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து உருவாகியுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக இராணுவத் தளபதி நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவருடன் பிரிகேடியர் என்.மல்லவராட்சி, பிரிகேடியர் ரி.ரி.மோசஸ் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

அங்குள்ள படை அதிகாரிகளுடன் மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்த இராணுவத்தளபதி உடனடியாகப் பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி உத்தரவு பிறப்பித்தார். (ஐ-3)



சேதுசமுத்திரத் திட்டத்தின் அங்குரார்ப்பண விழா நேற்று மதுரையில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தனர். பிரதமர் மன்மோகன் சிங் திட்டப் பணிகளை ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

# கிழக்கில் ராணுவப் பகுதியூடாக கரும்புலிகள் தின ஊர்திப் பவனி

### போராளிகளும் உடன் செல்வர்; கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிப்பு

மட்டக்களப்பு,ஜுலை3

கரும்புலிகள் தினத்தை ஒட்டி மட்டக்களப்பில் கரும்புலிகளின் உருவப் படங்கள் தாங்கிய மாபெரும் ஊர்திப் பவனி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து இன்று புறப்படவுள்ள இந்த ஊர்திகளின் பவனி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாகவும் செல்லும் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

இன்று காலை 8 மணிக்கு குடும்பிமலைக் கோட்டம் கரடியனாற்றில் இருந்து ஊர்திகளின் பவனி ஆரம்ப வைபவத்துடன் தொடங்கும். அங்கிருந்து கறுத்தப்பாலத்தினூடாக செங்கலடியை சென்றடையும். பின்னர் வாழைச்சேனையை நோக்கி நகரும். பவனி அங்கிருந்து மட்டக்களப்பு நகரை நோக்கிச் செல்லும். இன்றிரவு புளியந்தீவுக் கோட்டத்தில் மட்டு நகரப் பகுதியில் ஊர்திப் பவனி தரித்து நிற்கும்.

நாளை முற்பகல் 10 மணிக்கு மீண்டும் புறப்படும் ஊர்தி பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளுக்கு சென்று பட்டிருப்புக் கோட்டப்பிரதேசத்தில் தரித்து நிற்கும்.

மறுநாள் பட்டிருப்பில் இருந்து மாவடி முன்மாரி, கோவில் போரதீவு, வெல்லாவெளி, உட்பட பல கிராமங்கள் ஊடாகச் சென்று அம்பிலாந்துறை பொது விளையாட்டு மைதானத்தை அடைந்ததும் அங்கு எழுச்சி நாள் நிகழ்ச்சி இடம்பெறும்.

ஊர்திப் பவனி செல்லும் இடங்ளில் வீரவணக்கக் கூட்டங்களும் இடம்பெறும் என்றும் -

இதேவேளை -

(20ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டிக்குழியில் உணவு விடுதியின் உரிமையாளர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜுலை03

யாழ்.சுண்டிக்குழிப் பகுதியில் விருந்தினர் விடுதி ஒன்றில் இருந்து அதன் உரிமையாளரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

'ஜெசித்தாரா' என்ற பெயரில் விருந்தினர் விடுதி ஒன்றை நடத்திவந்த ஜோ.எகட்டன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

இலங்கை வானொலியின் யாழ்.சேவை முகவராகவும், இலத்திரனியல் ஊடகங்கள் சிலவற்றின் விளம்பர முகவராகவும் இவர் செயற்பட்டு வந்தார்.

தனது விருந்தினர் விடுதியில் கடைசியாக கடந்த மாதம் 29ஆம் திகதி இவர் காணப்பட்டார் என்றும் பின்னர் சில தினங்களாக அந்த விடுதியில் எவரது நடமாட்டங்களும்

(20ஆம் பக்கம் பார்க்க)



படம் : கவிதரன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







# மாணவர் பேரவை நடத்தும் கருப்புலிகள் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை3

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தும் கரும்புலிகள் நாள் நிகழ்வும் பரிசளிப்பும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் செ.செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசியர் வி.பி. சிவநாதன், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் ந.கண்ணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி ஆகியோரும் கலந்துகொள்வர். (த-202)

## ஓட்டோ தடம்புரண்டு இருவர் காயம்

வலி.வடக்கு,ஜூலை3

ஹைஏஸ் வான் திடீரென நிறுத்தப்பட்டதா ல் பின்னால் வந்த ஓட்டோ தடம்புரண்டு அதன் சாரதியும் அதில் பயணம் செய்தவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்றுமாலை 5.30 மணியளவில் மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கையின் முன்பாக இந்த விபத்து இடம்பெற்றது.

ஜன்னல் கதவுகளுக்குப் பயன்படுத்தும் கண்ணாடிகளை வாங்கி ஓட்டோவின் உள்ளே குறுக்கே வைத்துக்கொண்டு பின்புற இருக்கையில் இருந்து பயணம் செய்த அளவெட்டியைச் சேர்ந்த கண்ணன் என்பவர் கையில் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி மயக்கமுற்ற நிலையில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஓட்டோ சாரதியும் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவை விலத்திச் சென்ற ஹைஏஸ் வாகனம் திடீரென முன்னால் பிறேக் போட்டு நின்றதால் பின்னால் வந்த ஓட்டோ தடம் புரண்டது எனக் கூறப்படுகிறது. (ஐ-86)

## மீசாலையில் யாகம்

சாவகச்சேரி,ஜூலை3

நாட்டு மக்களின் நலன்களை வேண்டி மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 7 மணியளவில் மஹாகணபதி யாகம் நடைபெறவுள்ளது.(13-31)

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் மீனவர் ஒருவர் மின் தாக்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணை நடத்துவதை முதல் படத்தில் காணலாம்.

மீனவர்களைச் சோதனை செய்யும் சோதனைச் சாவடியையும், மீனவரை மின்சாரம் தாக்கிய இடத்தையும் நீதிவான் பார்வையிடுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள் : பிரபா)*

## பரத நிருத்தியார்ப்பணம்



யாழ்ப்பாணம்,ஜூலை3

கொக்குவில் கலாபவனத்தின் கூடரும் திருமதி சாந்தினி சிவனேசனின் புதல்வியுமான செல்வி தேவந்தி சிவனேசனின் பரதநிருத்தியார்ப்பணம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள நாட்டிய விற்பன்னரும் அடையாறு பரத சூடாமணியின் இயக்குநருமான பத்மஸ்ரீ அடையார் கே.லக்ஷ்மணன் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வின் அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் - கலைஞானச்சுடர் திருமதி சாந்தினி சிவனேசன், பாட்டு - இசைக் கலைமாணி தவநாதன் றொபேட், மிருதங்கம் - சங்கீதரத்தினம் சி.மகேந்திரன், வயலின் - இசைஞானச்சுரபி அ.ஜெயராமன், புல்லாங்குழல் - வித்துவான் இ.வசந்தன் ஆகியோர் பங்குபற்றுவர். (எ-202)

## புங்குடுதீவில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

புங்குடுதீவு மக்களின் அத்தியாவசிய தேவைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தென்னிந்தியத் திருச்சபையின் புங்குடுதீவு வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு பொதுமக்களின் குறைகளைக் கேட்டறியவுள்ளார். புங்குடுதீவு மக்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (8)

## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாத்திரீகனின் 'உயிரோடிருத்தல்' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு இமையாணன் அ.த.க. பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது.

இதில் வரவேற்புரையினை ஆ.ராஜியும், தலைமையுரையினை தனா விஷ்ணுவும் வாழ்த்துரையினை அரசண்ணாவும் -

வெளியீட்டுரையினை கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தவுள்ளனர். மதிப்பீட்டுரையினை கவிஞர் ஜபார், கவிஞர் சத்தியபாலன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (3-13)

## சடலத்தை பொறுப்பேற்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை,3

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள வின்சன் குணபாலன் என்பவருடைய சடலத்தை உரியவர்கள் அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு யாழ். வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி நெல்லியடி மாலுசந்திக்கு அண்மையில் இடம்பெற்ற ஒரு விபத்தில் காயமடைந்த இவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமாகியுள்ளார்.

50 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர் என மதிப்பிடப்படும் இவர் நீல நிற கோடிட்ட சாரம் அணிந்திருந்தார். இவரது உறவினர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை அடையாளம் காட்டி பொறுப்பேற்குமாறு கோரப்பட்டுள்ளது.(ஐ-8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் மாணவர் அமைப்பு இணைந்து நடத்தவுள்ள மாபெரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க நிர்வாக உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் மற்றும் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்களின் இரு அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் எஸ்.பிரசன்னா கேட்டுள்ளார். (த-190)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் தென்மராட்சி விளையாட்டுப் பேரவை கைதடி மேற்கு விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தவுள்ள வலைபந்தாட்டப் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

மாலை 6.30 மணி - கைதடி வளர்மதி வி.க. எதிர் ஸ்ரீ மகாவிஷ்ணு வி.க.

இரவு 7.30 மணி - கதிரொளி வி.க. எதிர் பிக்பூட் வி.க. (3-203)

* * *

கைதடி,ஜூலை3

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு - மின்னொளி விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியில் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் நடைபெறும் ஆட்டத்தில் இன்று கைதடி வளர்மதி வி.கவும் நாவற்குழி அருள் வி.கவும் மோதுகின்றன. (3-75-203)

* * *

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் யாழ். மாவட்ட ரீதியில் லீக் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4 மணி - சுதுமலை நாவலர் வி.க. எதிர் இருபாலை விக்னேஸ்வரா வி.க.

மாலை 5 மணி - தாவடி காளியம்பாள் வி.க. எதிர் கைதடி துர்க்கா வி.க. (3-75-203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை3

கொக்குவில் மனோன்மணி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு மனோன்மணி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி பெ.ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் இளைப்பாறிய சிரேஷ்ட தொழில்நுட்பட அதிகாரியுமான கந்தையா இராமநாதனும் அவரது பாரியாரும் கலந்துகொள்வர். (3-203)

### யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது

# மாகாணமட்ட உதைபந்தாட்டம்; இன்று அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை3

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டிலான மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரை இறுதி ஆட்டங்கள் இன்று இடம்பெற வுள்ளன.

எட்டு மாவட்டங்களிலும் சம்பியனான அணிகள் பங்குபற்றும் இறுதியாட்டப் போட்டிகள் நேற்று யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

நேற்று நடந்த ஆட்டங்களில் -

கிளிநொச்சி மாவட்ட அணியை 2:1 கோல்கணக்கில் வென்று திருகோணமலை மாவட்ட அணியும் -

முல்லைத்தீவு மாவட்ட அணியை 6:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து மன்னார் மாவட்ட அணியும் -

அம்பாறை மாவட்ட அணியை 7:1 என்ற கோல் கணக்கில் வென்று யாழ். மாவட்ட அணியும் -

வவுனியா மாவட்ட அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வென்று மட்டக்களப்பு மாவட்ட அணியும் - அரையிறுதியாட்டங்களுக்குத் தெரிவாகியுள்ளன.

இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களிலும் வெற்றிபெறும் அணிகள் நாளை இறுதியாட்டத்தில் மோதவிருக்கின்றன.(3-190)

## மா விற்றால் காற்றடிக்கிறது உப்பு விற்றால் மழைபெய்கிறது

இந்தியாவில் வரட்சியால் மோசமாகப் பாதிக்கப்படும் மாநிலங்களில் குஜராத்தும் ஒன்று. தற்போது மழையால் படுமோசமாக இந்த மாநிலம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களில் பால் அதிகம் உற்பத்தியாவது இங்கு தான். ஆனால், இப்போது கரைபுரண் டோடும் வெள்ளத்திலும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களின்கண்ணீரிலும் இந்த மாநிலம் மிதப்பது வேதனையானது.



குஜராத்தில் வெள்ளம்

குஜராத் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருகிறது. இதனால், அந்த மாநிலத்தின் 70 சதவீத பகுதி வெள்ளத்தில் மிதக்கின்றது.

இந்த 3 மாவட்டங்களிலும் எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறது. வதோதரா, சூரத் நகரங்கள் நிலை குலைந்து போய்விட்டன. அந்த 2 நகரங்களிலும் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

வதோதரா, சூரத் நகரங்களில் மீட்புப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். குஜராத்தில் ஆழிப்பேரலை பாதிப்பு போன்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று முதலமைச்சர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத்தில் மழையால் 2 கோடிக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 2 லட்சம் பேர் வீடுகளை இழந்து விட்டனர். அவர்கள் மீட்கப்பட்டு பத்திரமான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் வெள்ளத்தில் சிக்கித்தவித்தனர். அவர்களை ஹெலிகொப்டர் மற்றும் இயந்திரப் படகுகளில் சென்று மீட்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. மழைக்கு 100இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். நூற்றுக்கணக்கான பெண்களையும் குழந்தைகளையும் காணவில்லை. அவர்கள் கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அவர்களை தேடும் பணி நடந்துவருகிறது.

ஏராளமான குக்கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அந்த கிராமங்களில் இந்திய விமானப்படை விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

மழை நீடிப்பதால் 8 ஆயிரம் கிராமங்கள் துண்டிக்கப்பட்டு தீவுகளாகக் காட்சி அளிக்கின்றன. 31 நகரங்களும் வெள்ளத்தில் மிதக்கின்றன. அங்கு விமானப்படை ஹெலிஹொப்டர்கள் தாழ்வாகப் பறந்து தவிக்கும் மக்களை மீட்டு வருகின்றன. பல நகரங்களில் வெள்ள அபாயம் நீடிக்கிறது.

## தண்ணீரில் மீன் அழுதால் கண்ணீரை யாரறிவார்?

இந்தியாவின் கடற்றொழில் வருமானத்தில் குறிப்பிடத் தகுந்த பங்கை வகிப்பது இராமேஸ்வரம். இப்பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையற்ற கடற்றொழில் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் படியும் தமக்கு மானிய விலையில் வழங்கப்படும் டீசலின் விலை உயர்த்தப்பட்டதைக் கண்டித்துமே அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

காலம் காலமாக இலங்கைக் கடற்படையினரின் கொடூரத்தாக்குதல்களுக்கு தமிழக மீனவர்கள் முகம்கொடுத்து வருகின்றார்கள். இதில் அவர்கள் பொருள்சேதங்களை மட்டுமன்றி உயிரிழப்புகளையும் சந்தித்துள்ளனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழக அரசு மத்திய அரசுக்கு கடுமையாக கடிதம் ஒன்றை அனுப்பும். மத்திய அரசும் தமிழக மீனவர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறும். ஆனால், தாக்குதல்கள் தொடர்கதையாகவே உள்ளது.

இதேவேளை, தாம் பிடிக்கும் சிங்கஇறால் போன்ற பெறுமதிமிக்க கடலுணவுகளை குறிவைத்து - அவற்றை பறிப்பதற்காக - இலங்கைக் கடற்படையினர் தம்மைத் தாக்குகின்றனர் என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. இதைப் போன்று மத்திய அரசும் மானியம் வழங்கவேண்டும் என்றும் இராமேஸ்வரம் மீனவர்கள் கோருகின்றனர். தமிழக அரசு கடற்றொழிலில் ஈடுபடும் படகுகளுக்கு மாதாந்தம் தலா ஆயிரம் லீற்றர்கள் டீசலை மானிய விலையில் வழங்கி வந்தது. இந்த டீசலின் அளவு பற்றாக்குறையாக உள்ளது என்று மீனவர்கள் கூறிவந்த சமயத்தில் மத்திய அரசு டீசலின் விலையை உயர்த்தியுள்ளது.

ஏற்கனவே எதிர்பார்த்த அளவில் மீன்கள் கிடைக்காமலும், பிடிபடும் பெறுமதிமிக்க கடலுணவு வகைகளும் இலங்கைக் கடற்படையால் பறித்துச் செல்லப்படுவதாலும் நஷ்டமடைந்த தமிழக மீனவர்கள் டீசல் விலையேற்றத்தால் அதிகளவில் பாதிப்படைந்துள்ளனர்.

இதனாலேயே, அவர்கள் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர். இப்போராட்டத்தால் நூற்றுக் கணக்கான படகுகள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால், ஆயிரக் கணக்கானவர்கள் வருமான மின்றி உள்ளனர். அதுமட்டுமன்றி, கடலுணவுத் தொழிற்சாலைகள், ஏற்றுமதி முகவர் நிலையங்கள் ஆகியவையும் வேலையின்றி மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாளை திங்கட்கிழமை தமது எதிர்ப்பை மத்திய அரசுக்கு தெரிவிக்கும் வகையில் இராமேஸ்வரம் தபால் நிலையம் முன்பாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சேவை என்ற அடிப்படையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தமிழக மீனவர்கள் அறிவித்துள்ளனர். அத்துடன், தொடர் போராட்டங்களை நடத்தவும் அவர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

## மழைவிட்ட போதும் தூவானம் விடவில்லை

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஒருவாறாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இத்திட்டம் பல வருடங்களாகக் கிடப்பில் போடப்



இராமேஸ்வரத்தில் தமிழக மீனவர்கள் படகுகளை நிறுத்தி தொழிலுக்குச் செல்லாதிருந்த வேளையில்...

பட்டிருந்தது. மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சராக தமிழகத்தின் தி.மு.கவைச் சேர்ந்த டி.ஆர். பாலு பதவியேற்றதும் மீண்டும் சேதுசமுத்திரக்கோப்பு தூசி தட்டி எடுக்கப்பட்டது. கையுடன் ஜெயலலிதாவும் அவரது அ.தி.மு.கவும் எதிர்ப்புக் கோஷமிடத் தொடங்கினர்.

கடந்த மார்ச் மாதம் சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்துக்கு மத்திய சுற்றுப் புறச் சூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. இதற்காகக் கையாளப்பட்ட முறை சரியல்ல என்று தமிழக அரசு குற்றஞ்சாட்டியது. மாநில அரசின் கருத்துக்களை புறக்கணித்து இத்திட்த்தை மத்திய அரசு கொண்டு வருவதாக குறைகூறினார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

ஆனால், தமிழக அரசின் எதிர்ப்பு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலானது என்று பதிலடி கொடுத்தனர் தி.மு.க.வினர். சூட்டோடுசூடாக சூடாக ஜூலை 2 ஆம் திகதி சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின் ஆரம்பவிழா மதுரையில் நடக்குமென்று அமைச்சர் டி.ஆர்.பாலு செய்தியாளர் களைக் கூட்டி அறிவித்துவிட்டார். இதில் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா, கருணாநிதி மத்திய அமைச்சர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவார்கள் என்றும் அமைச்சர் அப்போது தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர்பார்த்ததைப் போலவே இந்த விழாவில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார். தமிழக அரசின் தடையில்லா சான்றிதழ் இத்திட்டத்துக்குப் பெறப்படவில்லை. சுற்றுச் சூழலை இத்திட்டம் பாழாக்கும்.

இந்த விழாவை கருணாநிதி அரசியல் விழாவாக்கிவிட்டார் என்றெல்லாம் காரணங்களையும் அடுக்கினார் ஜெயலலிதா. இதனைத் தொடர்ந்து தமக்கு அழைப்பிதழ்கள் அனுப்படவில்லை என்றுகூறி அ.தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்12பேரும்ஆரம்ப விழாவில் கலந்து கொள்வதில்லை என்று அறிவித்தனர்.



அயலகம்

இந்தியாவிலிருந்து இந்திரஜித்

ஆனால், சேதுசமுத்திரத்திட்டக்குழுவின் தலைவர் ரகுபதியோ தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கட்சிப்பாகுபாடின்றி அழைப்பிதழ் அனுப்பப்பட்டன என்று கூறினார்.

இதற்கு பதிலடியாக அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் பி.ஜி.நாராயணன் கூறுகையில், ஆரம்பவிழாவை நடத்தும் மத்திய அரசின் செயல்கள் மாநில நிர்வாகத்தின் தலைவரான முதல்வர் ஜெயலலிதாவையும் அ.தி.மு.கவையும் அவமதிப்பதாக உள்ளது. ஆகவே, விழாவைப் புறக்கணிக்கிறோம் என்று கூறினார்.

அரசியல் எதிர்ப்புகள் இப்படிநடந்து கொண்டிருக்க சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும்நடந்தன. இத்திட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் கடலோர நடவடிக்கைக்கான கூட்டமைப்பு மனு ஒன்றைத்தாக்கல் செய்தது. அந்த மனுவில்-

அறிவியல்பூர்வமான ஆய்வை முழுமையாக நடத்தாமல் இத்திட்டத்தை செயற்படுத்தினால் பொருளாதார சமூக சுற்றுப் புறச் சூழல் எதிர்விளைவுகள் ஏற்படும். இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் இதன் விளைவுகள் இருக்கும். இலங்கையின் கடலோரப் பகுதியில் மீன் வளத்துக்குப் பாதிப்பு ஏற்படும் சாத்தியம் குறித்தும் முறையாக ஆராயப்பட வில்லை. ஆகவே, இத்திட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றது. அப்போது அரச சட்டத்தரணி தனது வாதத்தில் மத்திய சுற்றுப்புறச் சூழலகம் கடந்த மார்ச் மாதம் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்ததாகவும் அதனை எதிர்த்து மேன்முறையீட்டு ஆணையத்தில் 90 நாள்களுக்குள் முறையிட்டிருக்கவேண்டும் என்றும் தற்போது அதற்கான கால அவகாசம் முடிவடைந்துவிட்டதாகவும் வாதிட்டார்.

இதற்கு மனுதாரரின் சட்டத்தரணி , இரண்டாயிரமாம் ஆண்டு முதல் மேன்முயைீட்டு ஆணையத்தின் தலைவர் பதவி வெற்றிடமாகவுள்ளதாகவும் தலைவர் இல்லாத ஆணையகத்தில் எப்படி மேன்முறையீடு செய்ய முடியுமென்றும் வாதிட்டார்.

இதனையடுத்து, சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்துக்குத் தடை விதிக்க மறுத்துவிட்ட சென்னை உயர்நீதிமன்றம், தேசிய சுற்றுப் புறச்சூழல் மேன்முறையீட்டு ஆணையகத்துக்கு ஒரு மாதத்துக்குள் தலைவர் நியமிக்கப்படவேண்டும் என்றும் அதன் பின் ஒரு மாத காலத்துக்குள் ஆணையகத்தில் மனுதாரர் முறையிடலாம் என்று பிரச்சினையைத் தற்காலிகமாகத் தீர்த்துவைத்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் நேற்று சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கான எதிர்ப்புகள் அடங்கிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. தமிழகத்தில் முதல்வராக ஜெயலலிதா தொடர்ந்து பதவி வகிக்கின்றார். நாளைய அரசியலில் கூட்டணிகளும் மாறாலாம். அதிகாரமும் கைமாறலாம். பெரும் தொகை செலவில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் கிடப்பில் போடப்படுவது இந்தியாவில் ஒன்றும் புதிதல்ல. அதேவேளை, எல்லாவற்றையும் அரசியலாக்கும் தமிழகத்தில் சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்துக்கு எதிர்ப்புகளை உருவாக்குவதும் கடினமான காரியமில்லை.

இதேவேளை, சட்ட நடவடிக்கைக்கு சென்னை உயர் நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்துவிடவில்லை. முதலில் ஆணையத்திடம் முறையிடச் சொல்லி வெறும் கமாதான்போட்டுள்ளது. இந்த நிலையில் கடலை ஆழமாக்குவதைவிட எதிர்ப்புகளைச் சமாளிப்பதேகடினமாகஇருக்கப் போகின்றது.★

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying




Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No:47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு
யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

Study In India
BPT (முடநீக்குயியல்)
காலம்: 4 வருடங்கள்
தகுதி: க.பொ.த (உ/த)- சித்தி
உயிரியல், பௌதிகம், இரசாயனம்
கல்லூரி: V.M.முடநீக்குயியல் கல்லூரி
சேலம் - தமிழ்நாடு.
NN CONSULT
Telephone: 5558833 Fax: 5558844
NO: 60, (first Floor), peterson lane,
(C-43807)(29-11-15) Colombo -06
e.mail: nnconsult @ sltnet.1k

## 168 பேருக்கு அடையாள அட்டைகள்

தென்மராட்சி பிரதேசத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் 168 பேருக்கான அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன. இவை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக அடையாள அட்டைகள் பிரிவினர் தெரிவித்தனர். (எ-117)

## நன்றி நவில்லும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி சின்னம்மா நாகரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை, பருத்தித்துறை)

02.06.2005ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதமெய்திய எங்கள் பாசமிகு குலவிளக்கு திருமதி சின்னம்மா நாகரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனு தாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.
T.P.: 0212263218 (ச-48766) (89-19-84)

–மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தேவை

**வட்டுக்கோட்டையில்**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பார்மசிக்கு இத்துறையில் அனுபவமுள்ள பெண் ஊழியர் உடன் தேவை. முழு விவரங்களுடன் கூடிய சுயவிவரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு தொலைபேசி இலக்கம் உட்பட 10 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

திரு சி.இரத்தினசோதி,
“பொன்னையா சதுக்கம்”, குளிப்பன் வீதி,
வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு செல்வநாயகி



மாதனை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வநாயகி 26.06.2005 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற திரு. திருமதி கந்தசாமியின் அன்புப் புதல்வியும் காலஞ் சென்ற முருகேசுவின் (சீனி) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.07.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**“செல்வபவனம்”**
**மாதனை, பருத்தித்துறை.**
(37264) (39-19-34)

*தகவல்:*
*பிள்ளைகள்,*
*மருமக்கள்.*

### அரியகுட்டி ஜேக்கப் செல்வரத்தினம்

முதலாம் குறுக்குத்தெரு, இணுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட அரியகுட்டி ஜேக்கப் செல்வரத்தினம் நேற்று (02.07.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (04.07.2005) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் தென்னிந்திய திருச்சபை கல்லறை வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மானிப்பாய். (37265) (39-19-34)

*தகவல்:*
*பிள்ளைகள்.*


## டயலொக் டெலிகொம் ஆரம்ப பொது வழங்கல்

டயலொக் ஆரம்ப பொது வழங்கல் குறித்த அறிமுகம் இடம்பெறவுள்ளது.

காலம் : ஜுலை 4ம் திகதி 2005
நேரம் : மு.ப. 11.00 மணி
இடம் : வரையறுக்கப்பட்ட யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நீங்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பினால் தயவுசெய்து யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் உள்ள திரு.வசந்தகுமார் அவர்களுடன் தொடர்புகொண்டு அழைப்பிதழ்களைப் பெறமுடியும்.

**அழைப்பிதழ் பெறுவதன் மூலமே இதில் பங்குபற்றமுடியும்.**

**தொலைபேசி: 021 2227882, 021 2223463, 021 2222787, 0777 164966**


## முதலாம் வருட நினைவலைகள்

மலர்வு 02 - 01 - 1927



உதிர்வு 14 - 07 - 2004

### அமரர் கந்தையா பாலசிங்கம்

எழுபத்தெட்டு ஆண்டுகள் முடியுமுன்னே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச்
சென்றுவிட்ட எம்முயிர்த் தந்தையே! இன்று
நீங்கள் எம்மைவிட்டுச் சென்று
ஓராண்டும் ஆகிவிட்டதே! என் செய்வோம்?
உற்றார் உறவினரும் உம் மனைவியும்
பிள்ளைகளும் உளமுருகி அழுகின்ற காட்சி கண்டு
மீண்டும் ஒருமுறை இங்கு வருவீரா?

இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலையாழி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.


மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(37244) (39-19-34)


# வடமராட்சி மண்ணில் முதன் முதலாக

## FUJI FRONTIER DIGITAL

செய்முறை உள்ளீடுகள்




(C/4348) (52-16)

யாழ். மண்ணில் இயங்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ டிஜிற்றல் கலர்லாப் வடமராட்சி மண்ணில் எமது சேவையை விஸ்தரிக்கும் முகமாக FUJI FRONTIER DIGITAL ஆய்வுகூடத்தை பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் வைபவரீதியாக இன்று ஆரம்பிக்கின்றோம் என்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்**
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 3493

**ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்**
கார்த்திகேசு கட்டடம்,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சமூகத்தை அழகுறநெய்ய நூலோரே நீங்கள் தயாரா?

எதிரியின் ஆதிக்கப்பிடியிலிருந்து தாயகத்தை விடுவிப்பது மட்டும் தேசவிடுதலையாகிவிடாது. வெறும் மண்மீட்பு மட்டும் இன விடுதலையாகிவிடாது.

மண்மீட்போடு மனமீட்பும் அவசியமாகிறது. இதைத்தான் மண் விடுதலை பெறும்போது அங்கு வாழும் சமூகமும் விடுதலையடையவேண்டும். அப்போதுதான் மீட்கப்படும் தேசம் ஆரோக்கியமானதாக இருக்கும் - என்று புதுக்குடியிருப்பில் அண்மையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய தமிழீழத் தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் சுட்டிக்காட்டியிருந்தார்.

எமது மண்ணை மீட்கும் பணியில் எமது போராளிகள் தம்மை அர்ப்பணித்து வருகிறார்கள். அதன் மூலம் எமது மண் ஒருநாள் விடுதலைபெறும், எமது மண் விடுதலை அடையும்போது அங்குவாழும் சமூகமும் விடுதலையைப் பெற்றாக வேண்டும். இல்லாவிட்டால் மண் விடுதலை வீண் விடுதலையாகிவிடும் - என்று தெளிவுபடுத்துகின்றார் அவர்.

மண்விடுதலையோடு மனவிடுதலையும் - தேச மீட்போடு சமூக மீட்பும்- அவசியமாகின்றது. இரண்டுமே ஒத்திசைவாக நிறைவேறவேண்டியவை.

மண் விடுதலைக்காகக் குரல் எழுப்பும் அதேசமயம், சமூக விடுதலைக்காகவும், விழிப்புக்காகவும் உழைக்கும் ஒரேவர்க்கத்தினர் கலை - இலக்கியப் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், ஆக்க இலக்கியகர்த்தாக்கள் என்று நெஞ்சுநிமிர்த்திப் பெருமிதத்தோடு கூறுகின்றார் நமது தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

அவரது இந்தக் கருத்து புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தின் விடுதலை நூலில் பட்டவர்த்தனமாகத் தெறிக்கிறது. அரசியலிலும் இலக்கியத்திலும் தீவிரமாக ஈடுபட்ட - மார்க்சிச சிந்தனையாளரான - சாத்தர் பற்றிக் குறிப்பிடும் மதியுரைஞர் பாலா, சமத்துவமும் சமூக நீதியும் தளைத்தோங்கும் சமூகத்தின் தனிமனித சுதந்திரம் மேம்பாடு பெறுவது குறித்தும் ஒடுக்கப்படும் மனித விடுதலைக்கான குரல் ஓங்கி ஒலிப்பது பற்றியும் பிரஸ்தாபிக்கின்றார்.

*இலக்கியம் ஒரு சமூகக் கலை, ஒரு சமூகச் செயற்பாடு, அதற்கு ஒரு சமூகப் பங்கு இருக்கிறது. சமூக உலகத்தின் மீதும், சமூக இயக்கத்தின் மீதும் அது தாக்கத்தை விளைவிக்கின்றது. சமூக மாற்றத்துக்கு உந்துசக்தியாக விளங்குகிறது. மனிதவிழிப்புணர்வுக்கும் விடுதலைக்கும் பாதை அமைத்துக்கொடுப்பதே இலக்கியத்தின் உன்னதமான இலட்சியமாக அமையவேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில், குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் எழுத்தாளன் வாழுகிறான். தான் வாழும் சமூகத்தையும், அந்த சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும், போராட்டங்களையும் எழுத்தாளன் உதாசீனம் செய்யமுடியாது. வராற்றில் இருந்து அவன் ஒளித்துக் கொள்ளமுடியாது. அவன் எழுதவேண்டும். அவனது எழுத்து அந்த சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி நிற்கவேண்டும். சமூகத்தாரைச் சிந்திக்கத்தூண்டி, செயற்பட வைக்கவேண்டும். சமூக விடுதலையை இலக்காகக் கொண்டு இருக்கவேண்டும். இந்தவகையில் எழுத்தாளனுக்குச் சமூகப்பற்றுணர்வு அவசியம். அர்ப்பணிப்பு அவசியம். ஈடுபாடு அவசியம். எழுத்து அரசியல் ஈடுபாடு உடையதாக இருக்கவேண்டும்.*

*சொற்களுக்கு அபாரமான சக்தியுண்டு. அவை வாசகனின் ஆன்மாவைப் பற்றிக்கொள்கின்றன. அவனது இருண்ட மனக்குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டுகின்றன. மாயைகளைப் போக்கிவிடுகின்றன. கறைகளைச் சிதைத்து விடுகின்றன. எழுத்துக் கலையானது அரசியல் விழிப்புணர்வைத் தூண்டி, மனித விடுதலைக்கு வழி சமைத்துக்கொடுக்கிறது. சமூகப்பிரக்ஞையுடன் எழுதுபவன், சமூக விடுதலைக்காக எழுதுபவன் தனது இருப்பிற்கும் மற்றவர்களது வாழ்வுக்கும் அர்த்தத்தைக் கொடுக்கிறான்* - என எழுத்தாளர் சாத்தர் இயம்புவதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார் மதியுரைஞர் பாலா.

மனித இருப்புநிலைக்கு அப்பால், சமூக வாழ்நிலைக்கு அப்பால், அழகுணர்ச்சிக்காக, கலையுணர்விற்காக, நித்திய விழுமியங்களைத்தேடி எழுதுவதில் அர்த்தமில்லை.

சமூக நெறிப்படுத்தலுக்காக அல்லாமல், சமூக ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும், துணைபோகும் விதத்தில் அதிகாரவர்கத்தினரைத் திருப்திப்படுத்துவதற்காக எழுதப்படும் எழுத்துகள் சமூகத்தை அடிமைப்படுத்தவே வழிசெய்யும்; சமூகத்தை விடுதலைபெற அவை வழிகாட்டா.

மண்மீட்புப்போரை போராளிகள் முன்னெடுக்கிறார்கள். அதற்குச் சமாந்தரமாக சமூக மீட்புப்போர் நடக்கவேண்டும்.

மண் மீட்புப்போர் துப்பாக்கி முனையில் நடக்கின்றது என்றால், சமூக மீட்புப்போர் பேனா முனையில் வழிநடத்தப்படவேண்டும்.

நமது தாயக மண் ஆரோக்கிய தேசமாக ஜனனிக்க வேண்டுமானால், சமூக விடுதலையோடு அது பிறப்பெடுக்கவேண்டும். அந்தப் பாதையில் சமூகத்தை வழிப்படுத்தும்- நெறிப்படுத்தும்- பொறுப்பு ஆக்க இலக்கிய கர்த்தாக்களைச் சார்கிறது.

சமூக விடுதலை என்ற உயிர்ப்புடன் கூடிய - ஜீவனுள்ள நமது தேசத்தை நிர்மாணிப்பதற்கு எழுத்துச் சிற்பிகளே நீங்கள் தயாரா? பேனா முனையை வலிமையான குத்தூசியாகப் பயன்படுத்திச் சமூகம் என்ற சேலையை அழகுற நெய்யும் நூலோரே! உங்கள் கைவண்ணம் சமூகத்தை நேர்ப்படுத்தட்டும்.

## பொதுமக்களின் பாவனைக் குறைபாடே பஸ்நிலைய மலசலகூடம் அடிக்கடி பழுதடையக் காரணம்

### மாநகரசபைச் செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

பொதுமக்களின் பொறுப்பற்ற பாவனையே யாழ். பஸ்நிலையத்தின் பொது மலசலகூடம் அடிக்கடி பாவனைக்கு உதவாமல் மாறிவிடுவதற்குக் காரணம்.

யாழ். பஸ்நிலையத்திற்கென மின்சார நிலைய வீதியில் அமைக்கப்பட்டுள்ள பொதுமலசலகூடம் அடிக்கடி பொதுப் பாவனைக்கு உதவாததாக மாறிவிடுகின்றது. இதனால், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக மாநகரசபைச் செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி பொதுமலசலகூடங்கள் அடிக்கடி எம்மால் திருத்தவேலைக்கு உட்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் பொதுமலசலகூடத்தைப் பாவிக்கும் பொதுமக்களில் சிலர் அதனை முறைப்படி பாவிப்பதில்லை என்பதே. அது மட்டுமன்றி, மலசலகூடத்திலுள்ள கழிப்பறையின் துவாரமும் அடிக்கடி அடித்து நொறுக்கப்படுகிறது. மலசலகூடத்துக்குப் பொருத்தப்பட்ட குழாய்களையும் இவர்கள் விட்டுவைப்பதில்லை. இதனால், வாரத்தில் ஒரு தடவை புதிய குழாய்கள் பொருத்தப்படுகின்றன.

எனவே, இதுதொடர்பாகப் பொதுமக்கள் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்படவேண்டும். அதன்மூலம் இத்தகைய அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-13)

## நவாலி வீட்டில் இருந்து 16 பவுண் நகைகள் திருட்டு!

வீட்டுக்காரர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து கூரைஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த 16 தங்கப் பவுண் நகைகள், வானொலி மற்றும் இரண்டு மணிக்கூடுகள் ஆகியனவற்றைக் கொள்ளையடித்துச் சென்ற துணிகரச் சம்பவம் மானிப்பாய் மேற்கு, கட்டுடை பிரதான வீதியிலுள்ள வீடு ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 22ஆம் திகதியன்று நவாலி அட்டகிரிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நடைபெற்ற தேர்த்திருவிழாவுக்கு மேற்படி வீட்டில் வசித்துவரும் வயோதிபர்களான கணவரும் மனைவியும் சென்றுள்ளனர்.

ஆலயத்திலிருந்து பிற்பகல் வீட்டுக்குத் திரும்பிவந்து பார்த்தபோது நகைகளும் ஏனைய பொருள்களும் திருடப்பட்டிருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

வீட்டு உரிமையாளரான சு.திருஞானசம்பந்தர் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பொருள்களும் திருட்டுப்போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொலீஸார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருடர்களின் கைவிரல் அடையாளங்கள் காங்கேசன்துறைப் பொலீஸ் தலைமை அலுவலகத்திலிருந்து வந்த பொலீஸாரினால் படம்பிடிக்கப்பட்டுள்ளன. (எ-135)

### கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு

## மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டி முடிவுகள்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் நடத்தப்பட்ட கவிதைப்போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதலிடத்தை வண்ணை வடமேற்கைச் சேர்ந்த தம்பிரரசா- பரமலிங்கமும் (மெள்ளவே பிறக்கும் ஈழம்), இரண்டாமிடத்தை வெள்ளவத்தை 12,32 ஆவது ஒழுங்கையைச் சேர்ந்த எம்.சந்திரகாந்தாவும் (தனியொருவனல்ல, மூன்றாம் இடத்தினை கரணவாய் அண்ணா சிலையடியைச் சேர்ந்த சி.அகிலனும் (நாளைய விடியல் எமக்காக) பெற்றுள்ளனர்.

இவர்களுடன் பாராட்டுச் சான்றிதழ் பெறுவதற்குப் பின்வரும் கவிதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அன்பான உறவுகளுக்கு (பா.சஞ்சீவன், கனகாம்பிகைக்குளம் அ.த.க. கிளிநொச்சி), கறுப்புடை தரித்த நிழல்களால் (என்.பிறேம்சீலன், கோண்டாவில் வடக்கு), என் முற்றத்துப் பூவரசு (பா.தீபச்செல்வன், முதலாம் வருடம், கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) திசைகளில் பறக்கும் தென்றல்கள் (தமிழீழ கவிராயர், பருத்தித்துறை வீதி நல்லூர்), தமிழ்த்தேசம் படைத்திடுவோம்.

ஆ.சவரிப்பிள்ளை (மாரீசன், ஊற்றுப்புலம், கிளிநொச்சி), தேசவிடுதலைக்காக (ப.பத்மன், மல்லாகம் மகா வித்தியாலயம்), விடியலை நோக்கி விரைந்திடுவோம் (திருமதி மாலாதேவி மதிவதனன், அளவெட்டி மத்தி).

விடியலுக்காக விரைந்தவர் (ப.சந்திரகலா, உரும்பிராய்), கனக்கும் நெஞ்சு (கா.சுஜோ, போராளி பொன்னம்பலம் மருத்துவமனை, கிளிநொச்சி), எம்மண்ணை மீட்ட கரும்புலிகள் (கவிஞர் செ.பரமநாதன், தாவடி), வரலாறு உம்மை நினைக்கும் (வைஸ்ணவி ஏழுமலை, நிமலன் புகைப்படக் கலையகம், மல்லாவி), பூசிக்கப்பட வேண்டியவர்கள் (சி.விஸ்வராஜ், கோட்டைக் கல்லாறு, மட்டக்களப்பு) மீள்வோம் மீட்டெடுப்போம் (வைத்தியர் ச.முருகானந்தன்) அரசினர் வைத்தியசாலை முழங்காவில்), தேச விடுதலை (Z. அல்ஸிபாத், 35 ரதீமல்யாய, புத்தளம்), காற்றுத்தவம் (செல்வி காயத்திரி இராஜேஸ்வரன், விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்).

(த)

## சங்கிலியன் மன்றப் படிப்பகம் இன்று மாலை திறந்துவைப்பு

வலி.கிழக்கு,ஜூலை3

நல்லூர் சங்கிலியன் மன்றப் படிப்பகமும் கணனிப் பயிற்சிக்கூடத் திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நிலையத் தலைவர் ச.பிறேமதாசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் படிப்பகத்தினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனும் -

கணனிப் பயிற்சிக் கூடத்தினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணமும் திறந்துவைக்கவுள்ளனர்.

ஆசியுரையினைப் பாலகதிர்காம தர்மகர்த்தா சிவஸ்ரீ கு.குமாரக்குருக்களும் சிறப்புரையினை நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் பூமகளும் யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் நிலையப் போசகர் கே.சிவஞானம் மற்றும் டாக்டர் வை.தியாகராசா, ஓய்வுபெற்ற அதிபர் சி.தியாகராஜா, நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.ரவீந்திரசர்மா, நிலையப் போசகர் பூ.புலேந்திரராஜா ஆகியோரும் நிகழ்த்துவர்.

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்படும் பாடலுக்கேற்ற ஆடல் போட்டியும் கலை நிகழ்வும் தொடர்ந்து இடம்பெறும். (எ-180)

## மயில்வாகனம் சுவாமிகள் நினைவு பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பம்

தொல்புரம் , ஜூலை3

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம் வருடம் தோறும் நடத்திவரும் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தின பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாகப் பேச்சுப் போட்டிகள் நடைபெறும். தரம் 6, 7 வகுப்பு மாணவர்கள் பிரிவு I இலும் தரம் 8, 9 வகுப்பு மாணவர்கள் பிரிவு II இலும் தரம் 10, 11 வகுப்பு மாணவர்கள் பிரிவு III இலும் உள்வாங்கப்படுவர்.

பேச்சுப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பத்தில் கல்வி கற்கும் தரம், பிறந்த திகதி, பாடசாலை என்பவை தொடர்பான விவரங்களை அதிபர் மூலமோ அல்லது பெற்றோர் மூலமோ உறுதிப்படுத்தி குருபூசை தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும் என்றும் ஆச்சிரம இயக்குநர் அமுதகலாயோகி செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார். (எ-119)


### உதயவாக்கு

நீ பித்தனாய் இரு; உலக மாயையில் அல்ல இறைவனிடம் உள்ள அன்பில்.

-இராமகிருஷ்ணர்.

### நாளை

ஆனி 20
திங்கட்கிழமை
04.07.2005
திதி: திரயோதசி
பிற்பகல் 3.12வரை
நட்சத்திரம்: ரோகிணி
பிற்பகல் 01.11 வரை
சுபநேரம்: 11.57 - 01.27
ராகுகாலம்: 07.27 -08.57
(யாவும் பழைய நேரப்படி)



நவீன வடிவமைப்புகளில் நவீன பாணியில்
நவநாகரிக டிசைன்களில் அசல்
22 கரட்டில் அழகிய
தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

கரன் நகை வாணிபம்
HARAN JEWELLERS

ஓடர் நகைகளைக் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தந்தி 'இரத்தினம்ஸ்'

இல.50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0714 182 480
021 222 6083

எமது ஸ்தாபனத்துக்கு குடா நாட்டில் வேறு கிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்,

(36482) (56-16-18)

## சங்கானையில் முதியோர் மேம்பாட்டுத் திட்டம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் இணைந்து முதியோர் மேம்பாட்டுத்திட்டம் ஒன்றினை நடை முறைப்படுத்தி வருகின்றன.

முதற்கட்டமாக சங்கானைப் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டு அங்கிருக்கும் பாண்டவட்டை, காலவன், பொன்னாலை, வறுத்தோலை ஆகிய நான்கு கிராமங்களில் உள்ள முதியவர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார்.

(எ-7)

25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பஸ்தியாம்பிள்ளை
ஆசீர்வாதம்

மண்ணில்: 1910-06-18
விண்ணில்: 1980-07-05

"சீவியத்தில் உம்மை நேசித்தோம்
பிரிவிலும் உம்மை மறவோம்"

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஓமந்தையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் பஸ்தியாம்பிள்ளை ஆசீர்வாதம் அவர்கள் அமரத்துவம் அடைந்த 25ஆம் வருட நிறைவை இன்று நினைவு கூருகின்றோம்.

"பற்றிமா இல்லம்",
கேணியடி, கரவெட்டி
(37249)(42.14)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

abe?
the best* british business qualification

*best (adjective) of the most excellent or desirable type or quality, most enjoyable, most appropriate, advantageous, or well advised. (adverb) to the highest degree.
Oxford Dictionary. 2005

- The Fastest Pathway to a BBA or MBA
- It offers a manageable syllabus, flexible class schedules and job oriented subject streams
- ABE accepts multiple entry options - O/levels, A/levels, any local university degree or CIM,CIMA,ACCA etc..

- Business Administration
- Travel, Tourism & Hospitality
- Business Information Systems

ABE Centres:
Academy of Business Studies (ABS) - 4510101,
London Business School (LBS) - 0712 297297,
Oxford College of Business - 4718711, Univentures Institute(Jaffna) - 021 2227666
Metropolitan Business School - 2505954, Zodiac Burch International - 2501716,
Regent International (Gampaha) - 0332224559, Academy of Career Training (ACT) - 2370400

abe

Association of Business Executives (SL)
308 - 310, R.A De Mel Mawatha, Colombo - 3. Hotline 0777 517 517
Email: info@abesrilanka.com www.abeuk.com

இயந்திர மூலம்
குழாய்க்கிணறு அமைத்தல்

இயந்திர மூலம் 6" விட்டமான
குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில்
அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ந. பாலகிருஷ்ணன்
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943

(36937) (54-



உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி யின்
வாழும் கலைப் பயிற்சி

(பிராணாயாமம், பாஸ்த்ரிகா, சுதர்சன்க்ரியா முதலிய பயிற்சி உள்ளடங்கியது)

- மனஇறுக்கம், மனஉளைச்சல் நீங்கி தெளிந்த மனம், அமைதி, தன்னம்பிக்கை வளர
- இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவற்றை நீக்கி உடல் ஆரோக்கியம் பெற
- தன் சக்தி அறிந்து, உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டு செவ்வனே பணி செய்ய அனைவரும் மேற்கொள்ள வேண்டிய பயிற்சி

இலவச அறிமுக உரை

நாள்:- 03.07.2005 ஞயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி (புதிய நேரம்)
இடம்:- கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
(புகையிரத நிலைய வீதி. கோண்டாவில் மேற்கு.)

பயிற்சி நாள்கள் :- 04.07.2005 திங்கட்கிழமை முதல்
09.07.2005 சனிக்கிழமை வரை
பயிற்சி நேரம் :- காலை 6 மணிமுதல் 8 மணிவரை
அல்லது
மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!

மேலும் விவரங்களுக்கு:-
வாழும் கலைஅறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.
தொ.பே. 077 9059 549, 077 9059 544, 0776941693
www.artofliving.org

(C/43782)

## அறநெறி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை3

இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்தினரால் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-203-202)

வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

Foundation Degree Programme

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.


பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

வெளிநாட்டில் (UK,Canada) உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

COURSE STRUCTURE
- Information Technology
- English (Reading, Writing, Listening & Speaking - Leading to IELTS)
- Personality Development

CERTIFICATES TO BE AWARDED
- International Computer Driving Licence (ICDL-Asia Pacific, UK)
- First Certificate in English (UK)
- Diploma in Information Technology
- Certificate in Programming
- Certificate in Website Development
- Diploma in English Proficiency

COURSE LENGTH
- 3 Months - Full Time (Week Days)



எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்:
THE UNIVERSITY OF BUCKINGHAM
Cornwall College
St James's Park College
Carmel College of Excellence - London

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

# ஆறு மாதம் கடந்தும் அவலநிலை தொடர்கிறது
# ஆற்றுவார் எவருமின்றி அல்லற்படும் நிலை

ஆழிப்பேரலை அனர்த்தம் முடிந்து 6 மாதங்கள் கடந்த பின்பும் ஆழிப்பேரலையால் உறவுகளை, உடைமைகளை இழந்து அனாதைகளாக இடைத்தங்கல் முகாம்களில் வாழும் வடமராட்சி மக்களின் மனக்குமுறல்கள், தேவைகள் சொல்லொணாத் துயர் நிறைந்தவையாக உள்ளன.

குடிப்பதற்குச் சுத்தமான நீர் கிடையாது. குளிப்பதற்கு போதிய நீர் வசதிகள் இல்லை. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு சீருடைகள் இல்லை. வீட்டில் அவர்கள் பாடங்களைப் படிப்பதற்கு போதிய தளபாடங்கள் இல்லை. ஓட்டைகள் நிறைந்த ஓலையாலான குடிசைகளிலேயே தங்குகின்றனர்.

போக்குவரத்துக்கான வாகன வசதிகள் இல்லை. சிறந்த வீதிகள் இல்லை, அரச பொது விளையாட்டு மைதானம் இருந்தபோதும் அவை குன்றும்குழியுமாக எவ்வித பராமரிப்பும் இன்றிக்கிடக்கின்றன. பாதிப்புற்றவர்களில் அதிக எண்ணிக்கையானோர் படகு, கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமையால் மாற்று வழியாக குடும்பத்தை வழிநடத்திச் செல்ல கிடைத்த கூலிவேலைகள் எதுவானாலும் செய்தே தமது குடும்ப வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர்.

நோய் ஏதும் ஏற்படின் அங்குள்ள வைத்தியசாலையில் போதிய மருந்து வசதிகளோ, சத்திரசிகிச்சைக்கான உபகரணங்களோ விசேட வைத்தியர்களோ இல்லை. இதனால், நோயுற்றவர்கள் கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைக்கே அனுப்பிவைக்கப் படுகினர். இதனால், நோயாளியுடன் குடும்பத்திலுள்ள ஒருவரோ அல்லது இருவரோ செல்லும்போது அவர்கள் குடும்பத்தில் உள்ள ஏனையோர் பெரும் கஷ்டங்களை அடைகின்றார்கள்.

பாதிப்புற்ற மக்கள் தமது தேவைகளை வெளிக்கொணர்ந்து நிறைவேற்றுவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதாவது அரச உத்தியோகத்தர்களின் அசமந்தப்போக்கு அவர்களின் இக்கட்டுக்களும் இம்மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

குறிப்பாக, அநேக அரச உத்தியோகத்தர்கள் வெளியில் இருந்து வருபவர்கள். காலை 10 மணியளவில்தான் வந்துசேருவார்கள். மாலை கடைசி போக்குவரத்து பஸ் 3 மணிக்கு சேவையில் உள்ளதால் அதில் சென்று விடுவார்களாம்.

இவைமட்டுமா....?

இன்னும் ஏராளம். அவர்களின் துன்பங்களை அவர்களே சொல்வதைக் கேட்போம் (வாசிப்போம்).

**இராசையா இராமச்சந்திரன்**
***(வயது 40 வத்தராயன் வடக்கு, தாளையடி)***

மூன்று பிள்ளைகள் ஒரு பிள்ளை ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மரணமடைந்துள்ளது.



10 லட்சம் ரூபா பெறுமதியான எனது உடைமைகள் ஆழிப்பேரலை அலையினால் பாழாகிவிட்டது. மீண்டும் தொழில் செய்வதற்கு வசதியில்லை படகுகள், கடற்றொழில் உபகரணங்கள் இல்லை. தற்காலிகமாக இந்த ஓலைக் கொட்டிலில்தான் வாழ்கின்றேன். அரசால் வழங்கப்படும் 500 ரூபா எமக்கு இரண்டுமாதம் மட்டும்தான் கிடைத்துள்ளது. இந்தப் பணத்தினால் எமது குடும்பத்தை வழிநடத்த முடியுமா? அதனால் எமது முகாம்களில் தொண்டர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சில கூலி வேலை களைச் செய்கிறேன்.

மேலும், எமது வத்திராயன் வடக்குக் கிராமத்திற்கு 180 படகுகள் தேவை. இதுவரை 16 படகுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து குடிதண்ணீர், தண்ணீர்தாங்கிகள் மூலம் தான் நிரப்பப்பட்டு எமக்குத் தொண்டர் நிறுவனங்களால் தரப்படுகின்றன. ஆனால், ஒரே மணமும் பாசிகளும் நிறைந்த நிலையில் தான் நாம் அவைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. சிலவேளைகளில் நாம் குளித்துக் கொண்டு சவர்க்காரம் போட்ட நிலையில் தண்ணீர் இடையில்நின்றதும் உண்டு. இங்கு தண்ணீர் குறைந்தளவு ஆழத்திலேயே உள்ளதால் சிறு சிறு கிணறுகள் கட்டித்தந்தால் சுத்தம், சுகாதாரம் பேண உதவியாக இருக்கும்.

எமது நிலைப்பாடுகளை உரியநேரத்தில் சொல்வதற்கு உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சென்றால் அவரைச் சந்திப்பது கஷ்டம். சில கிராமசேவகர் எங்கள் முகாம்களுக்குவரமாட்டார்கள். நாம் அவர்களைச் சந்திக்கச் சென்றால் அபூர்வமாகச் சிலவேளைகளில் சந்திக்கலாம். முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் இடையில் தான் சந்திக்கலாம் காரணம் அவர்கள் வெளி இடங்களில் இருந்து வாகனங்களில் வந்து போவார்கள். பஸ்ஸைத் தவற விட்டால் அவர்கள் இங்கேயே தங்கவேண்டியவர்கள்தான். ஒருநாளில் ஒன்று அல்லது இரண்டு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**திருமதி தியாகராசா அற்புதமலர்**
***(வயது 55)***

இவர் மூத்த மகனுடன் தங்கியுள்ளார். இவர் ஒரு மீன் வியாபாரி.

நான் எமது தொழிலாளர் பிடித்துவரும் மீன்களை விலைக்கு வாங்கி விற்றுத்தான் சீவியம் செய்துவந்தேன். இப்படிக் கஷ்டப்பட்டு நான் சேமித்துவைத்திருந்த 4.5 லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளும் மேலதிக பணங்களும் கடலுக்கு அள்ளுண்டு போயின. எனது மூன்று பிள்ளைகளில் ஒருவரான அருந்தவராசா என்பவருடன் அவருக்குத் துணையாகவே வாழ்ந்து வருகின்றேன்.





இவருக்கு 4 பிள்ளைகள் மனைவி ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது அவ ரின் ஒரு பிள்ளையும் மனைவியும் பலியாகினார்.

மேலும், அவரது 15 லட்சம் ரூபா பெறுமதியான படகும் கடற்றொழில் உபகரணங்களும் முற்றாக சேதமடைந்துவிட்டதால் சித்தசுவாதினமற்ற நிலையில் படுத்த படுக்கையாகயுள்ளார்.

ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்து பளை மகாவித்தியாலயம், மருதங்கேணி மகா வித்தியாலயம் போன்ற இடங்களிற்கு இடம்மாறி இந்த மூன்று மாதங்களாகத்தான் இந்த வத்திராயன் இடைத்தங்கல் முகாமிற்கு வந்துள்ளோம்.

## தொண்டு நிறுவனங்கள் உதவவில்லையெனில் நமது பாடு அதோகதி தான்!

மேற்படி மகனை வவுனியா வைத்தியசாலைக்குத்தான் சிகிச்சைக்காகக் கொண்டுபோய் வரவேண்டியுள்ளது. அதுவும் ஓட்டோ வாகனங்களில்தான் கொண்டு சென்று வருகின்றேன்.

## வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம் வாழ் மக்கள் மனங்களிலிருந்து...

மேலும், குடிதண்ணீர் பிரச்சினையாகவுள்ளது. ஒரேபாசியும் வித்தியாசமான மணமுமாக உள்ளது. ஏதோ நிறுவனம் ஒன்று கடமைக்காக நீர் ஊற்றுகின்றது. இதைச்சுற்றுச் சூழல் சுகாதர உத்தியோகத்தர் கவனித்ததாகத் தெரியவில்லை. ஏதோ சோதனையுடனும் வேதனையுடனும் காலத்தைக் கழிக்கவேண்டியுள்ளது. எங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லவிடவேண்டும். அல்லது அரச காணிகளில் எமக்கு நிரந்தர வீடு அமைத்துத்தரவேண்டும் என்றார் அற்புதமலர்.

**திருமதி செபரத்தினம் சந்திரகலா**
***(தலைவி,வட -கிழக்கு உடுத்துறை மாதர் சங்கங்களின் ஒன்றியம் )***

இவரின் குடும்பத்தில் ஆழிப்பேரலை அனத்தத் தினால் 11 பேர் அ ள் ளு ண் இறந்துள்ளனர். 2 பிள்ளைகள், 15லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்துள்ளார். அவ்வேதனை துயர்களை ஓரளவு மறந்து தொண்டுப் பணியில் இறங்கி, இயங்கிவருகின்றார்.



ஆழிப்பேரலை அனர்த்தினால் கணவனை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர், குடும்பத் தலைவனை இழந்த பெண்கள் ஏராளம். இதனால் இவர்களின் தாய்மார், விதவைகள் இளம்பெண்களின் வாழ்க்கை இன்று கேள்விக் குறியாகவுள்ளது. படித்தவர், படிப்பை நிறுத்தி விட்டார்கள். குடும்பத் தலைவிகள் அரச நிவாரணம் போதாமையால் கிடைக்கும் கூலிவேலைகளைச் செய்து சீவியம் செய்யவேண்டிய நிலையிலுள்ளனர். பிள்ளைகளுக்குக் கல்வி மீட்டல் செய்வதற்கு வசதிகள், தளபாடங்கள் வீட்டில் இல்லை. அப்படி அவர்களுக்குக் கல்வி ஊட்ட விரும்பினாலும் கையிருப்பில் பணம் இல்லை.

ஒவ்வொருவர் வீடும் தென்னோலையினால் வேயப்பட்டுள்ளது. சில வீடுகளினுள் இருந்தால் வானம் தெரிகின்றது. சில வீடுகளில் பாம்பு, பூரான் போன்ற விஷப்பூச்சிகளும் கூரையினூடாக கீழே விழுகின்றன. சுகாதாரப் பிரிவினர்களைக் காணமுடிவதில்லை.

இப்படியான நிலையில் பாதிப்புற்ற பெண்கள் சுயதொழில் செய்து தமது வாழ்க்கையைக் கழிக்க விரும்புகின்றனர். பெரும் தொகையான பாதிப்புற்ற பெண்கள் இருக்கின்றனர். அண்மையில் புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் 28 தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது. இவை ஏற்கனவே தையல் பயிற்சியுள்ள பாதிப்புற்ற குடும்பப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. விதவைகளுக்கு, படித்த இளம்பெண்களுக்கு, குடும்பப் பெண்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்தால், அவர்களது வாழ்வு ஓரளவாவது வளமாகும் என்ற நம்பிக்கை உண்டு. இதை ஏதாவது தொண்டர் நிறுவனங்களோ அரசோ செய்து தந்தால் பேருதவியாக இருக்கும்.

மேலும், இங்கு கடலில் பிடிக்கப்படும் நெத்தலி, இறால் போன்றவற்றைக் காயப் போட்டுக் கருவாடாக்கி பொதிசெய்து வெளியே கடைகளுக்கு அனுப்பும் சுயதொழில் செய்தாலும் நன்மை கிடைக்கும். மேலும் அரிசிமா, பலகார வகைகள் பொதிசெய்தாலும் அதில் இருந்துவரும் லாபத்தில் ஓரளவாவது அவர்களது வாழ்வு வளமாகும்.

தற்போது யூ.என்.எச்.பி. (U.N.H.P) என்னும் நிறுவனத்திடம் சுழற்சிமுறைக்கடன் திட்ட உதவியை எதிர்பார்க்கின்றோம். அது கிடைத்தாலும் ஓரளவு உதவியாக இருக்கும். எமது கஷ்ட நிலைகளைப் பல வழிகளிலும் அரசிற்குத் தெரிவித்தும் இதுவரை எமது பாதிப்புற்ற பெண்களின் வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது.

தற்போது இந்த இல்லிடம் தற்காலிக தங்குமிடம் என்பதும் பாதிப்புற்ற இந்த மக்களுக்கு மன வேதனையாகவே உள்ளது. கடற்றொழில் செய் வதற்குக் கட்டுப்பாடு இல்லாபோதும் படகு களோ உபகரணங்களோ இல்லாததால் தொழில் செய்யமுடியவில்லை. படிக்கும் பிள்ளைகள் முதல் பெண்கள் வரை தொலை தூரம் சென்றுவர சைக்கிள் வசதியும் இன்மையால் பெரும் கஷ்டமாக உள்ளன.

தொண்டர் நிறுவனங்கள் கூட வடமராட்சி கிழக்கில் ஏனைய இடங்களைப் போல் படகுகளோ சைக்கிள்களோ தளபாடங்களோ வழங்காதது பெரும் வேதனையையும் பாதிப்புற்றவர்களின் மனங்களில் தோற்றுவித்துள்ளது.

**பாலசுப்பிரமணியம் *(வயது 42)***
**தங்கமலர் *(வயது 36) - தம்பதிகள், நாகர் கோயி லடி***

இவர்களுக்கு 2 பிள்ளைகள். கடற்றொழில் தான் நிரந்தர தொழில். இவர்கள் தங்கள் சொந்த இடங்களில் வாழ விரும்புகின்றார்கள். இடைத் தங்கல் வாழ்க்கை நிம்மதியற்ற வாழ்க்கை எனவும் தெரிவிக்கின்றார்கள்.



நாம் ஆழிப்பேரலையால் பெரும் இழப்புகளைச் சந்தித்துப் பாதிப்புற்றுள்ளோம். எமது உறவினர்களை நாம் இழந்தது இன்றும் ஆறாத மனப்புண்ணாக உள்ளது.

ஆறுமாதமாகியும் எவ்வித தொழிலும் இன்றி வேதனையுடன் அரசின் 175 ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொருள்களுடனும் கடன் பட்டும் எமது வாழ்க்கையை நடத்தி வருகின்றோம்.

மேலும், நாம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கி அனுபவித்துவரும் நரக வாழ்க்கை போதும். கடும் வெய்யிலுக்குள் நாம் இந்தத் தகரக் கொட்டகைளில் படும் வேதனை சொல்ல முடியாதவை. ஓலைக்குடிசையோ ஒட்டுக்குடிசையோ நாம் எமது சொந்த இருப்பிடங்களிலேயே வாழ விரும்புகின்றோம்.

100 மீற்றருக்குள் இராணுவம் இருக்கமுடியுமாயின் நாம் இருக்கமுடியாதா? அவர்களுக்கு ஒரு நீதி எமக்கொரு நீதியா?

5000 ரூபா இரு மாதங்கள் மட்டுமே எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் வாழ்க்கை நடத்த முடியுமா?

இதுவரை எந்த அரச உத்தியோகத்தர்களும் எமது நிரந்தர வீட்டுக்குடியிருப்புடன் எந்தவித தொடர்புகளும் கொள்ளவில்லை. மேலும் , எமது தற்போதைய தங்குமிடமான குடத்தனைப் பகுதிக்கு போக்குவரத்து வீதிகள் சீராக்கப்பட வில்லை. ஒரே குன்றும்குழியுமாக உள்ளன. நாம் 3 மைல் தூரம் நடந்து சென்றே வாகனப் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. அத்தோடு, வைத்தியசாலையும் பருத்தித்துறைப் பிரிவிலுள்ள 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மந்திகை வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது. சில ஆபத்தான நோயாளிகளை இவ்வளவு தூரம் கொண்டு செல்வதற்கு முன் உயிர் இழந்த சம்பவமும் உண்டு. இவ்வளவு துன்பத்தின் மத்தியிலும்கூட நாம் வாழ்கிறோம் என்றால் அது சில தொண்டர் நிறுவனங்களால்தான் .

**கிட்டினபிள்ளை சிவசாமி**
***(தலைவர் , நாகர்கோயில் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் )***

எமது நாகர்கோயில் கடற்றொழிலாளர்கள் 1997 ஆம் ஆண்டிலிருந்து மூன்று தடவைகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளார்கள். அவைகளில் ஆழிப்பேரலை அனர்த்தம் எமது மக்களின் உயிர், உடைமைகளை அதிகளவில் பறித்துச் சென்றுள்ளது.



இந்த அனர்த்தம் ஏற்பட்டு 6 மாதங்கள் ஆனபின்பும் இன்னும் மக்களின் நிலை தொழிலாலும் மனத்தாலும் மாறாத துயர் நிறைந்த கோலங்களாகவே உள்ளது. இதுவரை தேவையான அரச உதவிகள் கிடைக்கவில்லை.

**நேர்காணல், படங்கள்:**
***சி.சுந்தரலிங்கம்***

எமது கடற்றொழிலாளர்களுக்கு 45 படகுகளும் கடற்றொழில் உபகரணங்களும் தேவை. இதுரை 18 படகுகள் மட்டுமே தொண்டர் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. அரச கடற்றொழில் அமைப்பில் இருந்து இதுவரை எமக்கு எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை.

எமது நாகர் கோயில் பிரதேசத்தில் 147 குடும்பங்கள் இவற்றில் 127 குடும்பங்கள் புலோலி புனித நகர் குடியேற்றத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இத்தற்காலிக முகாமில் பல சுகாதாரச் சீர்கேடுகள் உள்ளன. ஓர் அறையாகக் கொண்ட தகரக் கொட்டகைகளில் மக்கள் வாழவேண்டிய நிலை. கலாசாரச் சீர்கேடுகளும் நடக்க வாய்ப்புகள் உண்டு. மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றன. இந்த முகாமில் இருந்து மாணவர்கள் 3 மையில் தூரம் சென்றே கல்வி கற்கவேண்டியுள்ளது.

எமக்கு நிரந்தரமே தற்போது கிடையாது; காரணம் எமது இருப்பிடங்கள் அனைத்தும் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், நாம் அப்பகுதிக்குச் செல்லவோ மீன்பிடிக்கவோ முடியாத நிலை. ஏனைய கடற்பிராந்தியத்தில் நாம் கடற்றொழில் மேற்கொள்வது அவ்விடத்தொழிலாளர்களுக்கு ஒரு மனக்கஷ்டத்தையும் தொழில் பாதிப்பையும் ஏற்படுத்தும். எனவே, அரசு நாம் தொழில் செய்வதற்கேனும் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது மக்கள் பெரும் இடருடன் வாழும் இந்நிலையில் உரிய நிவாரணங்களை உரிய நேரங்களில் கொடுத்தால் ஓரளவு உதவியாக இருக்கும். எம்மைக் கூடிய விரைவில் அரசு, அரச காணிகளிலாவது நிரந்தர வீடுகளை அமைத்து குடியமர்த்த ஆவன செய்யவேண்டும். இல்லையேல் பாதிப்புற்ற மக்கள் நீதி கேட்டுப் போராட வேண்டியநிலை ஏற்படும்.

**இராசலிங்கம் சோதிலிங்கம்**
***(தலைவர் , குடத்தனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் )***

எமக்கு வீடுகள் பெரிய சேதங்கள் இல்லை. கடற்றொழிலுக்கான படகுகளும் உபகரணங்களுமே அதிகளவில் சேதம். பல கோடிக்கணக்கான சேதத்தை ஆழிப்பேரலை ஏற்படுத்தியுள்ளது.



ஆறு மாதங்களாகியும் எமக்குரிய அரச உதவிகள் சரிவரக் கிடைக்கவில்லை.

எமது கடற்றொழிலாளர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே தொண்டர் நிறுவனங்களால் படகுகள் கிடைத்துள்ளன. அவை கிடைத்த போதும் அவர்கள் தொழில் செய்ய முடியாதுள்ளது. காரணம் ஆழிப்பேரலையால் இழுத்து வரப்பட்ட வெளியிடத்து பாரிய மரங்கள், பாரிய இரும்புகள் போன்றவை கடலுக்கு அடியில் இருக்கின்றன. இதனால், படகுகள் கடலில் தொழில் செய்ய இடையூறாகவுள்ளன. இதை நாம் உரிய அரச நிறுவனங்களுக்கும் கடற்றொழில் அமைச்சிற்கும் அறிவித்த போதும் இதுவரை எவ்வித உரிய நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

அரசு வழங்கும் 5000 ரூபா நிவாரணம் கூட எமக்குரிய நேரம் வந்துசேரவில்லை. 6 மாதங்களாகியும் எமது வீதிகளோ போக்குவரத்துச் சேவைகளோ சீர்ப்படுத்தப்படவில்லை.

*

## சிறந்த தேயிலை வகைகளுக்கு

- கொழும்பு வந்தும் சிறந்த ரகத் தேயிலையை எங்கே பெறுவது என்ற கவலையா உங்களுக்கு?
- எம்மை நாடுங்கள்!
- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஏ.எச்.திசநாயக்கா அன் கோ**

30, சென்.ஜோன்ஸ் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 0112327074

**A.H.DISSANAYAKE & CO.**

30, St.John's Road, Colombo - 11.



## யாத்திரை

வடஇந்தியா, காசி, கயா, ரீஷிகேஸ், ஹரித்துவார், மதுரா, ஆக்ரா, அயோத்தி, வைஸ்ணவிதேவி, அமர்நாத், பத்திரிநாத், கோதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, அலகாபாத், திரிவேணி, இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, சென்னை. 30 நாள்களில் ஆரம்பம்: 20.07.2005 இல் 10 பேர். விருப்பமுடையவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

**T.ஸ்ரீரெங்கநாதன்**
**T.P.: 0777680102.**



## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37094)(42.19.45


ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

## ஆச்சார்யாபிஷேக அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

ஸ்வஸ்த்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்களகரமான பார்த்திப வருஷம் ஆனி மாதம் 20ம் திகதி (04.07.2005) திங்கட்கிழமை காலை 5 மணி முதல் 6 மணி 37 நிமிஷம் வரையுள்ள மிதுன இலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது ஜேஷ்ட குமாரன்

**சிரஞ்சீவி சு.கணபதீஸ்வரசர்மா அவர்களுக்கு**

விசேஷ தீட்சா, நிர்வாண தீட்சா, ஆச்சார்யாபிஷேகம் நடைபெற மாயவன் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம், ஸ்ரீ வல்லிபுராழ்வார் ஆலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் தங்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இங்ஙனம்

தீட்சாகுரு சிவஸ்ரீ தா மகாதேவக்குருக்கள்.
காயத்ரீ பீடம், இணுவில்

பிரம்மஸ்ரீ ச க சுதர்சனக்குரு (jp) குடும்பம்
சிவன்கோவிலடி, ஆவரங்கால்,
பிரதமகுரு,
ஸ்ரீ வல்லிபுராழ்வார் தேவஸ்த்தானம்

வரவேற்பாளர்கள்...
திருமதி க உருக்குமணியம்மா
பிரம்மஸ்ரீ ச க இராமச்சந்திரக்குரு குடும்பம்
மலேசியா
பிரம்மஸ்ரீ ச க புருஷோத்தமக்குரு (jp) குடும்பம்
பிரதமகுரு, ஸ்ரீ வல்லிபுராழ்வார் தேவஸ்த்தானம்

சு ஜனார்த்தனசர்மா குடும்பம்
சு. கிரிதரசர்மா

நன்றி


Are you O/L Student? Are you like a Computer field?

**NLIIT WITH TRINITY COLLEGE & UNIVERSITY USA**

**B. Sc in Computer Science**
BATCH II
Specially for workers
AT WEEKENDS
TWO YEARS
NEW BATCH

**DIP IN HARDWARE ENG**

1st day Introduction of computer Disassembling of the computer
2nd day Casing and power supply
3rd day Mother Board
4th day RAM, ROM Speed, System bus
5th day Hard drive, Floppy drive, Floppy disk, CD-ROM
6th day Processor
7th day VGA card, Sound card, Network card, modem
8th day Keyboard, mouse, speaker
9th day Cables & connectors
10th day Assembling, Casing, Power Unit
11th day I/O card Memory, Floppy drive, CD drive
12th day BOIS setting
13th day Booting, Dos command
14th day Partition
15th day Operating System Installation
16th day Configuration of VGA card, Sound card &Modems
17th day About monitor & Printer
18th day Trouble shooting
19th day Safety Maintenance
20th day Software, Virus, Networking

IN ONE MONTH

**NORTH LANKA**
Main street, Chankanai. ☎ 4591647


## மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

**ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் - (இலங்கை) வரை யாழ்ப்பாணக் கிளை**

பேரன்புடையீர்!

எமது கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின்
மற்றுமொரு அபிவிருத்திக் கிளையானது

**105, கண்டி வீதி, சாவகச்சேரியில்**

*எதிர்வரும் (09.07.2005) சனிக்கிழமை காலை 8.00மணி முதல் 8.30 மணிக்குள் வரும்*

சுபமுகூர்த்த நல்வேளையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஆகவே, இந்தத் திறப்புவிழா ஆரம்ப வைபவத்துக்கு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– யாழ். கிளை முகாமையாளர்.

(37130) (54-11-17)


DIPLOMA IN QUANTITATIVE TECHNIQUES

A/L 2005 பரீட்சைக்கு அமர்ந்த மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான பயனுள்ள கற்கைநெறி (DQT) உடன் ஆரம்பமாகவுள்ளது. வகுப்புகள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும். முழுக் கிரயம் Rs. 2700/=


DIRECTOR/NBMS

விவரங்களுக்கும் பதிவுகளுக்கும் (சனி,ஞாயிறு)

**BRIGHTMANS** (37133) (42-19-45)

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கருணானந்தம் சுப்பிரமணியம்**
(மண்டைதீவு)

ஆண்டு ஒன்று ஆயிடினும் ஆறவில்லை எம்மனம்
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

101.பத்திரகாளி கோயில் வீதி.
வண்.வடமேற்கு.
யாழ்ப்பாணம்.

~ மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(37250)(42-17-14)


## 2005 G.C.E(A/L) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

## விசேட ஆங்கில பாடநெறிகள்

| DIPLOMA IN ENGLISH COMMUNICATION SKILLS | CERTIFICATE IN ENGLISH | DIPLOMA IN ENGLISH |
|---|---|---|
| காலம் ३ மாதம் | காலம் ३ மாதம் | காலம் ६ மாதம் |

மேற்கூறப்பட்ட பாட நெறிகள் மூலம் மாணவர்கள் தமது ஆங்கில பேச்சுப் பயிற்சித்திறனையும் ஆங்கில இலக்கண அறிவையும் மேம்படுத்துவார்கள்

IELTS by Top Lecturer

சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்
Pre - Foundation Lavel I,II,II,IV

**BRITISH BUSINESS SCHOOL**
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First

## வடமாகாணத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளோம்!



**Indoor - out door Large format Digital Printing**

## 6 அடி முதல் 300 அடி வரை

* சகல வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர்கள்,
* ஆலயங்களுக்கான திரைச்சீலைகள்
* CD க்களுக்கான ஸ்ரிக்கர் பிறிண்டிங்.
* வாகனங் களுக்கான அலங்காரங்கள்
* திரையரங்குகளுக்கான போஸ்ரர்கள்
* திருமணப் பந்தல்களுக்கான வர்ண அலங்கரிப்புகள்
* ஸ்ரூடியோக்களுக்கான அலங்கரிப்புகள்

**ஆகியவற்றை ஒருவருட உத்தரவாதத்துடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள யாழ். மண்ணில் ஒரே நிறுவனம்.**

Out Put media
- Sticker paper
- Flex paper
- Hoted paper
- Backlit flim
- Photo paper
- Vinyl paper

## MOORTHY LAZER DIGITAL COLOUR LAB

Jaffna Road, Manipay. T.P.: 021 222 2884

Stanley Road, Jaffna. T.P.: 0714168475



## கியுபிட் போ KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) **Capsules**



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளைச் சீர்செய்யும்.

★ ஆண் வீரியமின்மை, மலட்டுத்தன்மையைப் போக்க

★ வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு

★ சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100 % ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்கவிளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டுவாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்.




# FREE SEMINAR IN JAFFNA
## JULY 14th & 15th

**P.K. Suhanthan Education Advisor University of East London**

TO BOOK YOUR APPOINTMENTS **CALL 0777-209446**

**SEMINAR WILL BE HELD AT** INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna. Tel: 021 2222831





UeL
University of East London

**INSTANT ADMISSIONS WILL BE OFFERED**
**41 STUDENTS HAVE OBTAINED THE VISA WITHIN LAST 6 MONTHS**

**Instant Admissions will be offered for eligible students.**

Sept 2005 Intake

**(PART TIME WORK CAN BE ARRANGED)**

•BSC •MSC •MBA •PhD

FLEX Graphic

KMS **Knowledge Management Systems**
**Leading Educational Consultants and Training Providers**
**6-1st Floor 37th Lane, Wellawatte, Colombo 6. Tel: 2361565**

# NIIT

northumbria UNIVERSITY

## End of School days
## Beginning of Something better



ஆசியாவின் மிகப்பெரிய கணனிப்பயிற்சி நிறுவனமாக விளங்கும் NIIT உங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு சிறந்த கற்கைநெறிகளை வழங்குகின்றது. உலகில் 3891க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு 2.5 மில்லியன் மாணவர்களுக்கு கணனிக் கற்கைகளை வழங்கும் நாங்கள் உங்களையும் இணைத்து உங்கள் முன்னேற்றத்திற்கென கணனிக் கற்கைகளை சர்வதேச சான்றிதழ்களுடன் வழங்குகின்றோம்.

Futurz
Professional Diploma in Information Technology (DNIT)
(Direct Entry to the Final Year at B. Sc. (Hons) Degree at Northumbria

CATS
Ready for the next level?
VB.NET & ASP.NET
JAVA & J2EE
C++ & Linux
XML & DHTML

SWIFT
Certificate in MS Office XP
Certificate in Web Designing
Macromedia Flash
Macromedia Dreamweaver

NIIT
347- 2/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**NIIT** Branches

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Anuradhapura | 025 4 581003 |
| Kurunegala | 037 4 691000 | Bambalapitiya | 011 4 519111 |
| Kandy | 081 4 470900 | Trincomalee | 026 2 227767 |
| Jaffna | 021 2 227250 | Tissamaharama | 047 4 328930 |

**Most Advanced IT Curriculum Currently Available In Sri Lanka.**



# யாழ்ப்பாணத்தில் மீண்டும் ரலி சைக்கிள் !
## இதோ விற்பனைக்கு வந்துள்ளது !

RALEIGH
THE WORLD'S BEST BICYCLE




THE RALEIGH NOTTINGHAM ENGLAND

RALEIGH
World's Best Bicycle

உலகப் பிரசித்திபெற்ற
இங்கிலாந்து
தொழில்நுட்பத்தில்
தயாரிக்கப்பட்ட
ரலி சைக்கிள்
RALEIGH

ஆண், பெண் இருபாலாருக்குமான
சைக்கிள்கள் 12 வருட உத்தரவாதத்துடன்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர் :
# வெங்கடேஸ்வரா
**125A, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P/FAX - 021 222 2905.**

# வெள்ளி விழாவை ஆரம்பிக்கும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு நாவாந்துறைப் பங்குமக்களின் வாழ்த்துக்கள்

## தொடரட்டும் உம் பணி

"ஏழையரின் உள்ளத்தோய் பேறுபெற்றீர்"
எளிமையும், பணிவும் கொண்டு அடியவருக்கு அடியோராய் வாழும் எம் தந்தையே நீர் வாழி! இறைவனின் சித்தத்தை தேர்ந்து தெளிந்து மக்களை வழிநடத்தும் எம் ஆயரே வாழ்க. ஆடம்பரங்களை வெறுத்து வறுமையைச் சிநேகித்து கிறிஸ்துவின் அன்புச் சீடராய் வாழ்ந்துகாட்டும் எம் தலைவரே வாழி! மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் தளராது இரண்டு மறை மாவட்டங்களை வழிநடத்திய தலைமைச் சீடரே வாழி. ஒவ்வொரு தனி மனிதரிலும் வெளிப்படும் தேவ அழைத்தலுக்கு உற்சாகமூட்டி உரமூட்டும் நற்பணியாளரே வாழ்க. 25 ஆண்டுகள் போதாது தொடரட்டும் உம் பணி. தங்களது காலத்தில் வளர்ச்சியுற்ற எமது மறை மாவட்டம் உயர்ச்சி பெறும் வரை உழைத்திட வேண்டிய உடல், உள ஆரோக்கியத்தை இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

**அருள்திரு எம். எக்ஸ். கருணாரத்தினம் பங்குத்தந்தை - நாவாந்துறை**

## இறை திருவுளத்தின் ஆயரே

குருத்துவம் என்பது இறைவனின் கொடை. இதை யாரும் மரபுவழி மூலமாகவோ, கல்வித்தகைமைகளின் மூலமாகவோ தமதாக்கிக் கொள்வதில்லை. இறைவன் தாமே தமது அளவற்ற இரக்கத்தின் நிமித்தம் மேய்ப்பர்களை தேர்ந்தெடுத்து திருச்சபைக்குத் தந்து கொண்டிருக்கின்றார். இந்த வகையில் இறை திருவுளத்தினால் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டு 25 ஆண்டு நிறைவு கொண்டாடும் எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை மனதார வாழ்த்துவதையிட்டு பேருவகை அடைகின்றோம். குருத்துவத்தின் நிறைவாகிய ஆயர் நிலையில் மன்னார் மறைமாவட்டத்தில் 11 வருடங்கள் பணியாற்றி தற்போது யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக இருக்கும் அவர்மேல் ஆவியின் ஆற்றல் மிகுந்து தங்க இறைவரம் வேண்டுகின்றோம்.

**அருள்திரு யே. மதி இளம்பரிதி, உதவிப் பங்குத்தந்தை, நாவாந்துறை.**

## மறையாசிரியர் வாழ்த்து

தோமஸ் எனும் பெயர் கொண்ட பெருந்தகையே ஆயர் பணிதனை ஏற்று இருபத்தைந்து வருட நிறைவினிலே மகிழ்வுடன் இன்புற்று நிற்கின்றோம் யாம் தந்தையே மறையறிவு புகட்டுவது கிறிஸ்தவனின் கடமையென எடுத்துரைத்து, மறையுரையாற்றுகையில் சிறுவனாகி ஆழமான கருத்துக்களை மனதிலே பதியவைக்கும் தூதுரைப் பணியாளனே, பண்பிலே செழிப்புற்று, அரவணைப்பிலே அன்னையாகி, ஆன்மீகத்திலே ஆழமாய் வேரூன்றி அறிவிலே மாமேதையாய் விளங்கும் உங்களின் பணி தொடர்ந்து வையகம் மேலும் செழித்தோங்க நாவாய் பங்கின் மறையாசிரியர் யாம் வாழ்த்தி நிற்கின்றோம்.


## நாவாந்துறை சென் நீக்கிலார் கோவில் பங்கு சபையினரின் வாழ்த்துக்கள்

நல்லவைகளைச் செய்து மக்கள் மனதில்
இடம்பிடித்த எம் ஆண்டகையே
நலிவுற்ற எம்மக்களுக் காய் குரல் கொடுத்து
வரும் எம் ஆயரே
நிலவு போல் நின்று இறைபணியாற்றிவரும்
எம் அன்பரே
நல்லது எதுவோ அதை எவர்க்கும் எடுத்துரைக்கும்
தீரரே வாழியவே
புனித நீக்கிலார் சனசமூக நிலையம் நாவாந்துறை
வலுவிழந்து தவிக்கும் எம் நிலைபோக்க
செயல்படுபவரே
வலிமை குறைந்த வேளையிலும் இறைபணி
ஆற்றிவரும் செம்மலே
வெல்லும் வேளை வந்தது என மறைபொருளாய்
கூறியவரே
வல்லமைமிக்க இறைவன் நீடூழி நீர் வாழ ஆசீர் தந்திடுவார்

கத்தோலிக்க மந்தைகளை ஒரு குறைவின்றி மேய்த்து வந்த நல் மேய்ப்பனாக இருந்து எமது மனதில் நீங்காத இடம்பிடித்து நின்ற எமது மேய்ப்பனின் பணி சிறந்தோங்க எம் மக்களின் நல் வாழ்த்துக்கள். **புதிய புனித மரியாள் கடற்தொழில் கூட்டுறவு சங்கம் நாவாந்துறை**

## நாவாந்துறை சென் நீக்கிலஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரின் வாழ்த்து

இறைவனின் சேவையில் நீடூழி வாழ
வேண்டுகின்றோம்
ஈசன் உமக்கு ஆசீர் அளித்திடுவார்
அது உண்மை
உலகறிய எம் மக்கள் துயரங்களை
எடுத்துரைத்தவரே
ஊர்களின் திருவிழாக்களில் உம் மறை
உரையால் புனிதப்படுத்தியவரே
என்றும் நின் புகழ் மங்காதிருக்க யேசுவிடம்
வேண்டுகின்றோம்
ஏங்கித் தவிக்கும் மக்களுக்காக உம் குரல்
ஒலிக்க வேண்டுகின்றோம்



## நாவாந்துறைபுனித மரியாள் பங்குச் சபையினரின் வாழ்த்து

எந்தையோ! எம் தந்தையோ இறைவனின் மைந்தனே மனம் நோகா வள்ளலே! சகலருக்கும் சக வாழ்வு சமாதானத்தின் தந்தையே ! உம்மையே! எம் சிந்தையால் வாழ்த்தி நிற்கிறோம்.

## அஞ்சனந்தாழ்வு பங்குச்சபையினரின் வாழ்த்து

வழிமீசாமாக இருந்த எமது அஞ்சனந்தாழ்வு பங்கிலே பணியாற்றி இன்று அது ஒரு தலத்திருச்சபையாக உருவாக அடியிட்ட எம் ஆயரே, உமது பணி சிறக்கவும் ஆவியின் அருள் உம்மோடு என்றும் தங்கவும் உம் பிள்ளைகளாகிய நாங்கள் உம்முடைய யூபிலி விழாவினிலே வாழ்த்தி, செபித்து நிற்கின்றோம்.

## சென் நீக்கிலஸ் பாடகர் குழாமினரின் வாழ்த்து

நல் ஆசானாக, ஆயனாக, தந்தையாக, நண்பராக, வழிகாட்டியாக விளங்கும் யாழ் மறைமாவட்டத்தின் தந்தையே இன்னும் பல்லாண்டுகள் தங்களின் பணி செழித்தோங்கிட இறைவனை பிரார்த்தித்து மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

யூபிலி கொண்டாடும் தந்தையே தூய ஆவியின் துணையுடன் உங்கள் அரும்பணி தொடர்ந்திட எங்கள் உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்
**நல்லாலோசனை மாதா சிறுவர் பிரசீடியம், நாவாந்துறை.**

ஆயர் பணி என்றால் - அது இறைவனின் அருள் வரப்பிரசாதம் இன்று நாமும் உம்முடன் இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
**பரலோகத்திற்கு ஆரோகணமான மாதா பிரசீடியம், நாவாந்துறை**

பணி தொடர வாழ்த்துகின்றோம் என்றும் நல்ல ஆயனாக - எம் அனைவரையும் வழிநடத்த - இறை அருள் வேண்டுகின்றோம். வாழ்க உங்கள் பணி வளர்க உங்கள் சேவை **மகா அன்புக்குப் பாத்திர மானமாதா சைனியம்**

யாழ் ஆயர் அவர்களின் உடல் உள ஆரோக்கியம் பெற்று பல்வேறு சவால்கள் மத்தியிலும் அவரது இறைபணி தொடர தூய ஆவியின் வழிநடத்தலும் புனித தோமையாரின் அருள் வளமும் நிறையப் பெற்று நீடூழி காலமும் நலமுடன் வாழ வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
**புனித டோமினிக் சாவியோ பீடப் பணியாளர்கள், நாவாந்துறை.**

எம்மிதயத் தெய்வமே தலைமை ஆயராயெம் யாழ்ப்பாணத் திருச்சபைக்கு தாங்கள் ஆற்றிய அரும் பணிக்காய் இதய நன்றியினை எடுத்தியம்பும்
**வின்சென்டிபோல் சபை நீக்கிலார் பக்தி - நாவாந்துறை.**

## ஆயரின் கருத்துக்களுக்காக யூலை மாதம் முழுவதும் செபிப்போம்

**யூலை 1** - எங்கும் சாதி, சமய, இன, மொழி அடிமைத் தனங்கள் அகல **யூலை 2** - அன்னை மரியாவின் பக்தி வளர, **யூலை 3** - யாழ் மறைமாவட்டம் எங்கும் நற்செய்தி பரம்பிட, **யூலை 4** - குருக்கள், துறவியர்கள் புனிதத்தில் சிறந்தோங்க **யூலை 5** - பொதுநிலை மக்கள் கல்வியில் உயர்ந்து, உயர் பதவிகளில் பணியாற்ற, **யூலை 6** - சிறுவர் சிறுமியர் புனித வாழ்வில் பயிற்சி பெற, **யூலை 7** - பக்திச்சபைகளில் இணைந்து பொது நிலையினர் பணியாற்றிட, **யூலை 8** - கத்தோலிக்க திருச்சபையின் சுதந்திரமான வாழ்விற்காக, **யூலை 9** - தேவ அழைத்தல்கள் பெருக **யூலை 10** - மறைக்கல்விப் பணி ஓங்க, **யூலை 11** - இளைஞர் இளம் பெண்கள் திருமறைப் பொதுப்பணிகளில் ஈடுபட, **யூலை 12** - தமிழ் மக்கள் சுதந்திர வாழ்வு பெற, **யூலை 13** - நற்கருணை பக்தி வளர **யூலை 14** - பிறரன்புப் பணி சிறக்க, **யூலை 15** - நீதி, சமாதானம் செழித்தோங்க, **யூலை 16** - குடும்பங்கள் ஒன்றிப்பில் வாழ **யூலை 17** - போர் நீங்க, **யூலை 18** - வழிபாட்டுத்தலங்களை அமைக்க அவ்விடங்களுக்குச் செல்ல உரிமை, **யூலை 19** - அகதிகள் இடம் பெயர்ந்தோர் தங்கள் சொந்த இடங்கள் செல்ல, **யூலை 20** - ஆயரோடு இணைந்து குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் உழைக்க, **யூலை 21** - ஆயரின் உடல், உள ஆன்மீக பலத்திற்காக, **யூலை 22** - ஆயர் தொடங்கும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெற்றிபெற, **யூலை 23** - ஆயரின் காலஞ்சென்ற பெற்றோர், சகோதரரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, **யூலை 24** - ஆயரின் குடும்ப உறவினர்களின் நல்வாழ்விற்காக, **யூலை 25** - ஆயருக்கு உதவி செய்பவர்களுக்காக **யூலை 26** - சுனாமியினால் இறந்து போனவர்களின் ஆன்மா சாந்திபெற **யூலை 27** - சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் சுபீட்ச வாழ்விற்காக **யூலை 28** - அநாதரவான பிள்ளைகளுக்காக, இல்லங்களுக்காக **யூலை 29** - அன்பிய சமூகங்கள் கட்டப்பட, **யூலை 30** - சிறிய, பெரிய குருமடங்கள் குருமாணவர்களுக்காக, **யூலை 31** - ஆயரின் ஆலோசகர்களுக்காக

மனுக்குலம் தழைக்க, அருள்வழி சிறக்க, அறியாமை இருளகற்றி, ஆன்மீக ஒளியேற்றி, அறப்பணிதனில் தன்னை அர்ப்பணித்த இறைபணியாளரான ஆண்டகை அவர்கள் தம் பணி மேன்மேலும் சிறந்தோங்க இறையாசி வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்!
**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்**
**யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.**

**அருட்சகோதரிகள், நல்லாயன் சபை, நாவாந்துறை**
இந்த நாளில் இறைவனது அன்பும் அருளும் நிறைவாக பொழியப்படுவதாக. இனிவரும் நாட்களிலும் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்தி நற்சுகம் அளித்து காத்தருள்வாராக.

அனைத்தையும் வெறுத்து யேசு
ஆயரின் ஆயர் ஆனீர் நிறைந்தது ஐ ஐந்தாண்டு வாழ்கவே நிறைவு இனும் நூறாண்டு.
**தாவீது இராசாவின் கோபுரம் பிரசீடியம், நாவாந்துறை.**

மக்களின் தேவையை அறிந்து எமக்கு எப்போதும் நல்வழி காட்டும் தந்தையே வாழ்க எங்கள் சேவை எம் யாழ் மண்ணில் இறை அருளும், வரமும் பெற்று தொடர்ந்தும் பணி செய்ய வாழ்த்துகின்றோம்.
**சம்மனசுகளின் இராக்கினியே பிரசீடியம், நாவாந்துறை.**

இறைபணி தொடரும் இலட்சியத்தை தொடர்ந்தாற்ற வளர்ந்துள்ள ஆலமரமே மானிடநேயம் மென்மேலும் வளர என்றும் நீ பூத்து வாசம் வீசுவாய் **பாடகர் குழாம், தூயமரியாள் ஆலயம், நாவாந்துறை**

அறியாடையில் உழலும் பிரபஞ்சத்தை இறை ஒளி எனும் அறிவால் அணர வைத்த செம் மலே உனது பணிதொடர எமது வாழ்த்துக்கள் **மகளிர் மன்றம் நாவாந்துறை**

தமிழ் மக்களின் சுதந்திரத்திற் காக ஓங்கி குரல் கொடுக்கும் எம் ஆயரை நாம் நெஞ்சார வாழ்த்தி பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம். **மரியாயின் சேனை கன்னியரின் இராக்கினியே (சிறுவர் பிரசீடியம்), நாவாந்துறை.**

ஆவியின் துணையோட நல்லாயனாக ஆன்மீகம் அறப்பணிகள் அத்தனைக்கும் சோராது சுடர்பரப்பி இருபத்தைந்தாண்டு நிறையுமின்னாள் நாம் மகிழ்ந்து எம்மிதய நன்றியோடு வாழ்த்துகின்றோம்
**வின்சென்டிபோல் சபை, மரியாள் பந்தி, நாவாந்துறை.**

மிகுந்த பல்கலைவாணர், வந்தடி பணிந்து வாழ்த்துவதில், விந்தை என்னே, கனிந்த பலாக்கனி ஈக்களை வாவென்று அழைப்பதில்லை
**மரியாயின்சேனை மகா பரிசுத்த மாதா, நாவாந்துறை.**

ஆடி ஓடியாடிப் பம்பரம்போல் களைக்காது சலிக்காது நற்பணி யாற்றி பல்லாண்டு பல்லாண்டு பல் லாண்டு - வாழ்கவென நாம் ஆனந்த உளத்தினராய் அன்புடன் உவகையுடன் இறையாசியுடன் வாழ்த்துகின்றோம்.
**திருப்பாலத்துவசபை பிள்ளைகள், ஊக்குவிப்பாளர்கள் நாவாந்துறை.**

ஆண்டவர் உம்மோடு இருந்து அனுதினம் வழிநடத்தி உம் வாழ்வின் அர்த்தத்தை நீர் அகிலத்தில் நிறைவேற்றிட உமக்காய் தந்தையிடம் வேண்டி நிற்கும்
**மரியாயின் சேனை, அஞ்சனந்தாழ்வு**

(சி-43829)

# வேலை வாய்ப்பு

ISO சர்வதேச தரச் சான்றிதழ் பெற்று காப்புறுதித் துறையில் முதலாவது இடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் காப்புறுதிக் கம்பனியில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

I) **பிரதேச பிரதிநிதி**
(Area Representative)
(கணிதம், தமிழ் உட்பட G.C.E O/L சித்தியுடன் மேலதிக தகைமைகளும் எதிர்பார்க்கப்படும்.

II) **வியாபார அபிவிருத்தி உதவியாளர்**
(Business Promotion Assistant)
(கணிதம், ஆங்கிலம் உட்பட G.C.E O/L, G.C.E A/L சித்தியுடன் ஒருவருட வெளிக்கள அனுபவம் எதிர் பார்க்கப்படும்)

III) **வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்**
(Business Promotion Officer)
(கணிதம், ஆங்கிலம் உட்பட G.C.E O/L, G.C.E A/L சித்தியுடன் இரண்டு வருட வெளிக்கள அனுபவம் எதிர்பார்க்கப்படும்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

**விண்ணப்ப முடிவுதிகதி:**
**10.07.2005**

(சி/43742)(32.14.42)

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
**விளம்பர இல.2636,**
**C/O உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

2005 A/L மாணவர்கள் pending results உடன் விண்ணப்பிக்கலாம்.

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து. மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 0777-767818 / (011)4512591**
For prospectus and application forms
**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

# IDM
## Computer Studies Pvt (Ltd)
## Jaffna Branch

20 YEARS CONTRIBUTION TOWARDS e-Sri Lanka by IDM The Nation's ICT Academy

ROTARACT CLUB

நல்லூர் றோட்டறக்ட் கழக அனுசரணையுடன் IDM கணனி நிறுவனம் இணைந்து வழங்கும்

# மாபெரும் இலவசக் கணனிப் பயிற்சிக் கருத்தரங்கு

**காலம்: 03.07.2005 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: 10.00 மணி (மு.ப)**
**இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

கருத்தரங்கில் பங்குபற்றுகின்ற அனைவருக்கும் எமது நிறுவனத்தால் பெறுமதிமிக்க சான்றிதழ்களும், சலுகைகளும் வழங்கப்படும்.

**2005 A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கணனித்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறவும்.

(C/43762) (54-)

**No. 216, Navalar Road, Jaffna. T.P: 021-4591398, 0777-110862.**

# திருமலையில் தற்காலிக வீடுகள் தானும் முழு அளவில் அமைக்கப்பட்டதாக இல்லை!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒருவார காலத்தையும் தாண்டிய நிலையில் இதன் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதுதான் ஆழிப் பேரலைகளின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக் கப்பட்ட திருகோணமலை மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆழிப்பேரலை இடம்பெற்று ஆறுமாத காலமாகியும் இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரை பேரழிவின் சின்னங்களைக் காணக் கூடியதாக உள்ளது. உடைந்த படகுகள், அழிவடைந்த வீடுகள், உடன் பிறப்புகளைப் பறிகொடுத்த ஜென்மங்கள் எனச் சோக மயமாகவே இந்த மாவட்டம் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. தற்காலித கூடாரங் களில் இன்றும் இரண்டாயிரத்திற்கும் மேற் பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில்தான் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அரசியல் வாதிகளும் பொதுக்கட்டமைப்பை வானளா வப் புகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையிலேதான் இலங்கை அரசும் - சர்வ தேச சமூகமும் எந்தநிலையில் காயை நகர்த் தப் போகின்றார்கள். பொதுக்கட்டமைப்பு எவ்வாறு நகர்த்தப்படப்போகின்றது என்ப தெல்லாம் கேள்விக்குரிய விடயங்களாகவே உள்ளன. இதய சுத்தியுடன் இதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமே தங்கள் துன்ப, துயரங்களுக்கு விடிவுகாலம் ஏற்படும் என இந்த மாவட்ட மக்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திருகோணமலை மாவட்ட கரையோரப் பிரதேச கிராமங்களைப் பொறுத்தவரை பெரும்பாலான குடும்பங்கள் இன்றும் தற் காலிகக் கூடாரங்களிலேயே வாழ்ந்துவருகின றன. சாம்பல்தீவு சந்தியில் தற்காலிக கூடா ரங்களை அமைத்து வாழும் குடும்பங்களின் நிலையோ பெரிதும் பரிதாபகரமாக உள்ளது. சேறும் சகதியுமாகவுள்ள பகுதியில் எந்தவித வசதிகளுமின்றி, நுளம்புக்கடிக்கும் கொளுத் தும் வெயிலுக்கும் ஈடுகொடுத்து இந்த மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். வேலூர் அகதிமுகாமில் வாழும் குடும் பங்களின் வாழ்வு இதைவிடப் பரிதாபகரமா னது. போதிய குடிதண்ணீர் வசதியில்லை, போதிய கழிப்பறைகள் இல்லை இப்படி நரக வாழ்வு வாழ்வதைவிட ஆழிப்பேரலையில் அகப்பட்டுச் செத்துப்போயிருக்கலாமே எனக கூறுமளவிற்கு இந்த மக்கள் விரக்தியின் விளிம்பில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இதேபோன்றுதான் மூதூர் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையும் உள்ளது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதிக் கப்பட்ட மக்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டித்தருகிறோம் எனக் கூறி முன் வந்தாலும்கூட, ஆழிப்பேரலைகளின் தாக்கம் இடம்பெற்று ஆறுமாத காலமாகியும் இங்குள்ள பெருமளவிலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் தற்காலிக குடி யிருப்புகளைக்கூட முழுமையாக அமைத்துக் வழங்க இயலாத நிலைதான் நிலவுகின் றது.




ஆழிப்பேரலையின் சீற்றத்தால் சிதைவுற்ற வீடுகள்.

அண்மையில் திரு கோணமலை மாவட்ட அரச அதிபரே தற் காலிக வீடுகளை அமைக்கும் பணிகள் தாமதமாகவே இடம் பெறுவதாகக் குறிப்பிட் டிருக்கின்றார். அரச அதிபரே இவ்வாறு கூறி னால் யாரை நோவது என்று தெரியாமல் மக் கள் குழம்பிப்போய் இருக் கின்றார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் திரு கோணமலை மாவட் டத்தில் ஏராளமாக உள்ளன. இன்று திருகோணமலை பகுதியில் வீதிக்குவீதி தன்னார்வத் தொணடு நிறுவனங் களின் பெயர்ப்பலகைகளைத்தான் காணமுடி கின்றது. ஆனால், எந்த அளவுக்கு நிவார ணப் பணிகள் எந்த அளவுக்கு முன்னெடுத் துச் செல்லப்படுகின்றன என்பதுதான் கேள் விக் குறியாக உள்ளது.

## பொதுக்கட்டமைப்பின் பலன்களை எதிர்பார்த்து நிற்கும் பாதிப்புற்ற மக்கள்

திருமலையிலிருந்து சங்கீத்



இந்தநிலையில்தான், பொதுக்கட்டமைப் பின் வரவை இந்த மாவட்ட மக்கள் ஆவலு டன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், பேரினவாத சக்திகளின் திட்டமிட்ட செயற்பாடுகள் பொதுக்கட்டமைப்பை எவ் வாறு முன்னெடுத்துச்செல்லமுடியும் என்ற கேள்விக்குறியையும் உருவாக்கியுள்ளன.

இலங்கை அரசும் நோர்வேயும் சர்வதேச சமூகமும் பொதுக்கட்டமைப்பு நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என அக்கறையுடன் பேசிவந்தன. பல தீக்குளிப்பு நடவடிக்கை களை எல்லாம் கடந்துதான் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இன்றும்கூட இதனை இல்லாதொழிக்க நீதிதேவனின் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் பேரினவாதக் கும் பல்கள், இதனைத் தங்கள் அரசியல் இலா பத்திற்காகப் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள். ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மற்றும் பேரினவாதக் கும்பல்களும் தங்களால் செய்ய முடிந்ததை எல்லாம் செய்துகொண்டிருக்கின்றார்கள். இது அரசியல் கட்சிகளின் பிரச்சினையோ அல்லது அமைப்புகளின் பிரச்சினையோ அல்ல. ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர் களின் கண்ணீர்க் கதை, உறவினர்களையும் உடைமைகளையும் இழந்தவர்களின் சோக வரலாறு இது. இதற்கான வடிகாலே பொதுக் கட்டமைப்பு இதுவென்பதை இவர்கள் உண ரத் தவறிவிட்டார்கள்.

ஆழிப்பேரலையால் தாக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழும் மக்கள் சேரிப் புறங் களில் வாழும் மக்களைவிட பெரும் சுகா தாரக் கேடான நிலையிலும் எந்தவித வசதி களுமற்ற நிலையிலே வாழ்கிறார்கள் என இவர்கள் உணர்ந்தும்கூட சில்லறைத்தன மான பிரசாரங்களையும் ஆர்ப்பாட்டங்களை யும் மேற்கொள்வது தங்கள் அரசியல் வாழ்வை மேம்படுத்தவே என்பதனைச் சர்வதேச சமூ கமும் சமாதானத்தை விரும்பும் சக்திகளும் உணர்ந்துவிட்டன. இந்த நிலையிலேயே என்ன விலை கொடுத்தாகிலும் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என இந்த மாவட்ட மக்கள் விரும்புகின்றார்கள்.

இதனைப் பேரினவாதக் கும்பல்கள் அனு மதிக்குமா அல்லது தங்கள் நடவடிக் கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப் போகிறார்களா? அதர்மம் என்றும் நிலைத்ததில்லை. 'தர்மம் தலைகாக்கும்' என்பார்களே. தர்மத்தின் கரங்கள் எப்போது நீளப்போகின்றன? அதனைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# சகல இனத்தவர்களின் அடிப்படை உரிமைகளையும் பேணும் வகையில் இலங்கை வானொலி செயற்படும்

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் தெளிவுபடுத்துகிறார்

சகல இன மக்களினதும் அடிப்படை உரி மைகளைப் பாதுகாக்கும் வகையில் இலங்கை வானொலி செயற்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க.

யாழ். சேவையின் செயற்பாடுகளை விளக் கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே கூட்டுத்தாபனத் தலைவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

தேசிய வானொலி என்ற வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவை யாழ்ப்பாண மக்களுக்கான ஒரு பிராந் திய சேவையாக 1995ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது. இந்தச் சேவை கடந்த 10 வருட காலமாக யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கும் மற்றும் ஏனைய மக்களுக்கும், ஆற்றிய சேவைகள் பற்றி விளக்குவது அவசியமற்றது என நினைக்கிறேன்.

பிரதானமாக, கல்வி, சுகாதாரம், விவ சாயம், மதம், கலாசாரம் போன்ற நிகழ்ச்சி களை வழங்குகின்றோம். இவற்றின் தரம் பற் றித் தீர்மானிப்பதை உங்களிடம் விடுகின் றேன். யாழ். ஒலிபரப்புச் சேவையை நடத்து வதற்குப் பெரும் தொகைப் பணத்தைச் செல வழிக்கின்றோம். செலவழியும் இப்பணத்தை யாழ். ஒலிபரப்பின் விளம்பரங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, ஏனைய தனியார் ஒலி பரப்புச் சேவைகள் அறவிடும் விளம்பரக் கட்டணங்களுடன் நாம் அறவிடும் கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் அது மிகவும் குறைந்த அளவானதே. இதனை எம் முடன் விளம்பரம் செய்யும் வாடிக்கையாளர் கள் நன்கு அறிவார்கள்.

தேசிய வானொலி என்றவகையில் இலங் கையில் வாழும் சகல சிங்கள, தமிழ், முஸ்லிம் பறங்கிய இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கடமைப்பட்டுள்ளோம். யாழ். சேவை ஊடாக ஒலிபரப்பப்பட்டுள்ள தேசிய மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் பற்றி விளக்கிக் கூறத் தேவையில்லை. கடந்த ஒரு மாத காலமளவில் யாழ். சேவையைக் கேட் கும் நேயர்களுக்கும், யாழ். சேவைக்கு விளம் பரம் தரும் விளம்பரதாரர்களுக்கும் எச் சரிக்கை விடுக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் யாழ். சேவையின் ஒலி பரப்பிற்கோ, தென்றல் ஒலிபரப்பிற்கோ விளம்பரங்கள் கொடுக்கக் கூடாதென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் எமது தேசிய வானொலி மூலமாக யாழ்ப்பாணத்தில் தமிழ் கலாசாரம் அழிக்கப் படுவதாகக் காரணம் காட்டியுள்ளனர்.

தேசிய வானொலி என்றவகையில் இந்த நாட்டில் வாழும் சகல மக்களினதும் உரிமை களைப் பாதுகாப்பது எமது கடமை என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகின்றோம்.

யாழ். சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இதுவரைக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய இனங்களைச் சேர்ந்த 84 அதிகாரிகள் இங்கு கடமையாற்றி இருக்கின் றார்கள். இவர்களில் மூன்று பேர் பற்றி மாத் திரம் குறிப்பிட்டு, இவர்கள் மூலம் தமிழ் இனத்திற்கும் கலாசாரத்திற்கும் கேடு விளை விக்கப்படுகின்றது என மேலே குறிப்பிட்ட குழுவினரால் கூறப்பட்டுள்ளது. உண்மையி லேயே இம் மூவரால் மாத்திரம் அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அதற்காகத் தேசிய வானொலியைக் குறைகாண்பது நியாயமான தல்ல எனக் கூற விரும்புகின்றோம்.

ஆகவே, எவராவது குற்றம் செய்திருந் தால் தீர விசாரித்ததன் பின்னர் அவர்கள் சம்பந்தமாகச் சட்டப்படி நடவடிக்கை மேற் கொள்ள எனது நிர்வாக அதிகாரி கடமைப்பட் டுள்ளார் என்பதைக் கூறவிரும்புகின்றேன். இப்போது இது சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதுவிடயம் சம்பந்தமாக விடுதலைப் புலி களின் ஊடக ஆலோசகர் தயா மாஸ்ரருடன் கடந்த வெள்ளிக்கிழமை (17ஆம் திகதி) தொலைபேசியில் உரையாடினேன். அப் போது எமது தேசிய வானொலி சம்பந்தமாக அவர்களுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை என்பதை உறுதியாக என்னிடம் அவர் தெரி வித்தார்.

இதன் பின்னர் எனது விசேட பிரதிநிதி ஒருவர் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அர சியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வனையும் ஊடக ஆலோசகர் தயா மாஸ்ரரை யும் சந்தித்து உரையாடிய பொழுது யாழ். சேவை, தமிழ்த்தேசிய சேவை, தென்றல் சேவை சம்பந்தமாக தமக்கு எந்தவித பிரச் சினையும் இல்லையென்றும் - ஆனால் தற் பொழுது தென்றலில் ஒலிபரப்பாகும் ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாகத் தமது எதிர்ப்பைத் தெரி விப்பதாகவும் கூறியிருக்கின்றார்கள்.

இந்த விடயத்தை யாழ்ப்பாண எமது அன்பு நேயர்களுக்கும் விளம்பரதாரர்களுக் கும் அறியத்தருவது எனது கடமை என நினைத்து இங்கு குறிப்பிடுகின்றேன். இது இலங்கையின் தேசிய வானொலி என்ற வகையில் சகல இன மக்களினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் எப்பொழுதும் கட்டுப்பட்டுள்ளோம் என்பதைக் கூற விரும்பு கின்றோம்.

எல்லோரும் சமாதானம், சுபீட்சத்துடன் வாழ்வதற்கு அருள்பாலிக்கட்டும் என பிரார்த் திக்கின்றேன் - என்று அதில் உள்ளது. (எ)

# திருமணக் கார் (குளிரூட்டியது)

## வாடகைக்கு




- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (c/43631)

தொடர்பு: ரட்ணம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சைமன் தங்கராஜா

தோற்றம் 09.11.1940 திதி: அபரபக்க துவாதசி மறைவு 09.07.1995

நேற்றுப் போல் உள்ளது நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து சென்றது !
உங்கள் நினைவுகள் எங்களனைவரினதும்
மனதை விட்டு நீங்காதப்பா !
அழியாத உங்கள் பாசத்தை
நினைந்துருகுகின்றோம்.

45/24, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை. (37153)(51-19-17)

மனைவி, பிள்ளைகள்.


# வெளிவந்துவிட்டது

சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்
(உயர்தரப் புவியியல் பாடத்திட்டம்)
ஆசிரியர்: **க.சிவகரன்**
(B.A. Hons Dip.in Ed.)
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
(37226)



# Personal Class

G.C.E. A/L

உயிரியல், இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புகள் ஒழுங்குகள் செய்துதரப்படும்.

தொடர்பு: தமிழ் ஸ்ரார் அக்கடமி
சாவகச்சேரி
T.P.No: 0776701694. (சி-43827)



# விற்பனைக்கு

Printing Machine விற்பனைக்குண்டு.
(1) Heidelberg offset Printing (kord)
(2) Cutter (36'')
(3) Plate Maker

தொடர்புகளுக்கு: 0777 315443, 0112 948445. (சி-43778)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**சந்திரன் செல்வரஞ்சிதம்**
அன்னையின் மடியில் 1966.11.05
ஆண்டவன் அடியில் 2005.06.03

பெயருக்கேற்ற செயலாற்றி
பெற்றார் தனை மகிழ்வித்து
உயர்வான உன் குணத்தால்
ஊராரை உள்ளீர்த்து
துயரத்தில் எமை ஆழ்த்தி
மீளாத்துயிலில் தனி உறக்கம் கொண்டவளே!
உன் ஆத்மா சாந்தி பெற
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், நந்தாவில், கொக்குவில்.

பிரிவால் தவிக்கும்: **குடும்பத்தினர்.**

(37253) (39-14-17-26)

# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்விவைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 04.07.2005ஆம் திகதி தொடக்கம் 13.07.2005 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 14.07.2005 ந.ப. 12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 14.07.2005 பி.ப. 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை *செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி* என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியைப் *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்னும் விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற் வரி |
|---|---|---|---|---|
| 01 | புனர்நிர்மானம் பொதுநூலகம், கோண்டாவில். | 4750.00 | 500.00 | 75.00 |
| 02 | குளங்கரை வீதி, கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல். | 1450.00 | 500.00 | 75.00 |
| 03 | பொதுக்கிணறு நீர் தாங்கி திருத்தம் குடியேற்றத்திட்டம், திருநெல்வேலி. | 3300.00 | 500.00 | 75.00 |

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
01-07-2005

(சி-43828)(26-14-17)

**பொன்னையா வைரமுத்து,**
*செயலாளர்,*
**நல்லூர் பிரதேச சபை.**

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான

## கேள்வி கோரல்

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரையறுக்கப்பட்டுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப. நோ.கூ.சங்கங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | பல நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு 2005 ஜூலை (MT) | 2005 ஓகஸ்ட் (MT) | 2005 செப்ரெம்பர் (MT) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 02 | கைதடி | 35 | 35 | 35 |
| 03 | கொடிகாமம் | 100 | 100 | 100 |
| 04 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 05 | கட்டைவேலி - நெல்லியடி | 15 | 15 | 15 |
| 06 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07 | புலோலி | 15 | 15 | 15 |
| 08 | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 09 | யாழ்ப்பாணம் | 90 | 90 | 90 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 35 | 35 | 35 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பழை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 60 | 60 | 60 |
| 18 | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 25 | 25 | 25 |
| 21 | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 900 | 900 | 900 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்கவிரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.07.04ஆம் திகதி தொடக்கம் 2005.07.17ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
04. மீளளிக்கமுடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டு அரிசியாக இருத்தல்வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
06. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களைத் *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)* என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 18.07.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
07. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் *'சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி'* என எழுதப்படல் வேண்டும்.
08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அந்தந்தச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்** *தலைவர், அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம்,*
(சி-43810)(26-14-17) *யாழ்ப்பாணம்.* 01-07-2005

# பொதுக்கட்டமைப்பு உருப்படியாகிச் செயற்படுமா?

நாட்டில் தொடர்ந்த யுத்தத்தை நிறுத்தி, இரு சமூகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வைக் கட்டிவளர்த்து நாட்டின் தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்குடன் ஸ்ரீலங்காவின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே.க. கட்சிக்கும் - தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு, போர் நிறுத்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. காதோடு காது வைத்தாற் போல சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்தில் அந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.

அதேபோன்று ஸ்ரீலங்காவின் மற்றொரு பிரதான கட்சியான சுதந்திரக் கட்சியுடன் மற்றோர் ஒப்பந்தம் கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தமே அதுவாகும்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டது. அந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச சமூகம் முன்வந்தது.

அதற்கான நிதியை வழங்குவதற்கு அரசும் - புலிகளும் இணைந்து கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என சர்வதேச சமூகம் ஜனாதிபதியிடம் கோரியது. அதை ஏற்று கட்டமைப்பை உருவாக்க சந்திரிகா, நோர்வே அனுசரணையாளர்களுடன் பேச்சுகளை நடத்தினார்.

அதன் பயனாக நோர்வேயின் பகீரதப் பிரயத்தனத்தால் பொதுக்கட்டமைப்பு நகல் இறுதியாக்கப்பட்டது.

அந்தக் கட்டமைப்புக்கான உடன்பாடு கைச்சாத்திட முடிவுசெய்யப்பட்டபோது தெற்கில் பேரினவாதப் பூதம் கிளம்பியது.

**ஜே.வி.பியின் வெளியேற்றம்**

அரசின் பங்காளிக் கட்சியாக விளங்கிய ஜே.வி.பி. ஆட்சியில் இருந்து வெளியேறப்போகிறோம் என எச்சரிக்கை விடுத்தது. இறுதியில் ஆட்சியில் இருந்து வெளியேறியது.

ஜே.வி.பியுடன் இணைந்து ஹெல உறுமயவும் போராட்டங்களில் குதித்தது. தமது உயிரைக்கூடத் தியாகம் செய்ய புத்த பிக்குகள் தயாராகினர். உண்ணாவிரதப் போராட்டங்களையும் எதிர்ப்புப் போராட்டங்களையும் பேரினவாதம் முன்னெடுத்தால், பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

தமிழர்களுக்கு சிங்கள மக்களின் உரிமைகள் யாவும் தாரைவார்க்கப்படுகின்றன என பேரினவாதம் கூச்சல்போடும் அளவுக்குப் பொதுக்கட்டமைப்பில் ஒன்றும் இல்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேச மக்களின் மறுவாழ்வுக்கான பணிகளை முன்னெடுப்பாதற்கான சாதாரண திட்டமே அது. அந்த மக்களுக்கான வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்கள் மீண்டும் கடற்றொழிலை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளைச் செய்வதும்தான் இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் எந்தவிதமான வசதிகளும் இன்றிக் கடந்த ஆறுமாதங்களாக மிகவும் இக்கட்டான நிலையில் வசித்துவருகின்றனர். அந்த மக்களின் அவலங்களைப் புரியாத நிலையில், தெற்குப் பேரினவாதம் இருக்கின்றது.

தெற்கில் பூகம்பம் வெடித்தபோதும், சமாதானத்தில் நாட்டமுள்ளவர் என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்டவும், தனது எதிர்காலத் திட்டங்களுக்கு உதவும் வகையில் காய் நகர்த்தவும் இந்த நிலையைப் பயன்படுத்தினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

**பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து**

ஏதோ ஒருவகையில் கடந்த புதன்கிழமை 29.06.2005 கொழும்பிலும் கிளிநொச்சியிலும் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தானது. இருதரப்பினரும் இணங்கியபடி, அமைதியான முறையில் நோர்வேயின் பிரசன்னத்தில் உடன்பாடு கைச்சாத்தானது.

அந்த உடன்பாடு நடைமுறைக்கு வருவது உடனடியாகச் சாத்தியமில்லை என்றே கருதப்படுகின்றது. உடன்பாடு கைச்சாத்திடப்பட்டவுடனேயே அந்த உடன்பாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளனர் பேரினவாதிகள்.

**துருவியன்**

**முஸ்லிம் தலைவர்கள் போர்க்கொடி**

இதற்கிடையில், மறுபுறத்தில் முஸ்லிம் தலைவர்களோ முஸ்லிம் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிட்டவில்லை என போர்க்கொடி தூக்கியுள்ளனர்

எந்த வகையிலாவது பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கத்தை நிறுத்த பேரினவாதச் சக்திகளும் முஸ்லிம் தரப்பும் முனைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் - யுத்தநிறுத்த உடன்படிக்கையும் கேள்விக்குறியான நிலையில் நிற்கின்றது.

விடுதலைப் புலிகள் தமது போராளிகள் மற்றும் பொறுப்பாளர்கள் சுதந்திரமான போக்குவரத்தை உறுதிசெய்யுமாறு கோரி இருவாரகால அவகாசம் ஒன்றை அரசுக்கு விடுத்துள்ளனர்.

**அரசுக்கான இறுதி எச்சரிக்கை**


யுத்தத்துக்கு விடுதலைப் புலிகளைச் சீண்டும் பல்வேறு நடவடிக்கைகளை படைத்தரப்பு எடுத்த போதும், பொறுமைகாத்து வந்த புலிகள் சீற்றமடைந்த நிலையில் அரசுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்த இறுதி எச்சரிக்கைக்கு மதிப்பளித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுமானால், யுத்தம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அப்படி ஒரு சூழல் உருவாகும்போது பொதுக்கட்டமைப்பும் உருப்படியாக வராமல் அடிபட்டுப்போய்விடும். அத்தகைய நிலை ஏற்படுமா? அல்லது பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தச்சாத்தியமானநிலைதோற்றுவிக்கப்படுமா? என்பனவே இன்று எழும் கேள்விகள்.

யுத்த சூழல் ஏற்பட்டு, பொதுக்கட்டமைப்பு விவகாரம் அடிபட்டுப்போகுமானால், தெற்குப் பேரினவாதிகள் குதூகலிக்கலாம். ஆனால், நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டு நாடு குட்டிச்சுவராகப் போவதற்குக் காரணகர்த்தாக்கள் தாங்களே என்பதை அவர்கள் புரிந்தால் சரி. சர்வதேச சமூகம் இதை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணரும் காலம்வரும். அப்போதுதான் இந்த அழகிய நாடு முழுமையாகச் சுதந்திரத்தை அனுபவித்து அமைதிப் பூங்காவாகமாறும். அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும். இது தவர்க்கமுடியாத தொன்றும் கூட. ✱

## தமிழர் உரிமைக்காக ஓயாது குரல்கொடுத்த செயல்வீரர் யாழ். ஆயர் தோமஸ் ஆண்டகை



புனித தோமையாரின் பெயரைக் கொண்ட யாழ். ஆயர் தினம் இன்று (ஜுலை மாதம் 03ஆம் திகதி) யாழ். மறைமாவட்டம் முழுவதிலும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. இன்று ஞாயிறு தினம் என்பதால் யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களோடு யாழ். ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுத்து இனிப்புக்களைப் பரிமாறி நிகழ்த்தும் கொண்டாட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்வாண்டு நிகழ்த்தப்படும் இக்கொண்டாட்டத்திற்கு ஒரு விசேட சிறப்புத்தன்மை உண்டு. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது ஆயர் பணி வெள்ளி விழா ஆண்டினை இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கிறார் என்பதே அச்சிறப்புத் தன்மையாகும். 1981ஆம் ஆண்டு ஆயர் பணியினை ஏற்ற இவர் 11 ஆண்டுகள் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக பணி புரிந்துள்ளார். பின்னர் 1992ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்டத்தின் ஆயராகி 14 ஆவது ஆண்டை இவ் வருடம் ஆரம்பித்து தனது ஆயர் பணியின் 25 ஆண்டுகளைத் தொடக்கிவைத்துள்ளார்.

வெள்ளிவிழாவினை ஆரம்பிக்கும் யாழ். ஆயருக்கு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜே. நீக்கிலஸ் அடிகளார், குருக்கள், துறவியர், பொதுநிலையினரின் வாழ்த்துக்களை 'உதயன்' பத்திரிகையூடாக வழங்கி வாழ்த்தி நிற்கிறோம். ஆயர் தம் பணியினை இறை பலத்தோடு தொடர்ந்து ஆற்ற இறைவன் தம் முழுமையான வரங்களைப் பொழிய வேண்டுமென இறையருள் வேண்டி நிற்கிறோம்.

யாழ். ஆயரின் பணி ஒரு சமயம் சார்ந்த பணி என்றாலும் சமய வரம்புகளைத் தாண்டி மனித நேய நோக்கோடு துன்பத்திலும் துயரத்திலும் இருப்போர்க்கு துணைபுரிகின்ற மனிதாபிமான அடிப்படைகொண்ட அன்புப் பணியாக இருந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

குறிப்பாக, கடந்தகால போர் அனர்த்தங்களால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு மனித உரிமைகள் மறுக்கப்பட்டு இருந்த மக்களின் ஒரே குரலாக இவரின் குரல் ஓங்கி ஒலித்திருக்கின்றது. அநீதியைக் கண்டித்தும் நீதிக்காக குரல் கொடுத்தும் போரினை நிறுத்தும்படி வேண்டியும் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி வலியுறுத்தியும் சமாதான உடன்படிக்கையை கைச்சாத்திடும்படி நெருக்குதல் கொடுத்தும் செய்கின்ற ஒரு பணியை செய்திருக்கவேண்டிய பலர் செய்ய முடியாதவேளையில் அதனைத் தன்னுடையதாக்கி தளராத துணிவோடு என்றுமே ஓங்கிக் குரல் கொடுத்திருக்கின்றார்.

இன்று நாம் அனுபவிக்கின்ற சிறிய அமைதிக்கும் நாம் சென்று வருகின்ற ஏ-9 பாதை திறப்பிற்கும் நிகழ்த்தப்பட்ட மூன்றாம் தரப்பு மத்தியஸ்திற்கும் இவரின் குரலும் பங்களிப்புச் செய்திருக்கின்றது. இவர் எழுதிய கடிதங்களும் வெளியிட்ட அறிக்கைகளும் தெரிவித்த கருத்துக்களும் ஊடகங்கள் வழியாக எல்லோருக்குமே தெரியப்படுத்தப்படாவிட்டாலும் இவற்றிற்காக இவர் கொடுத்த அழுத்தம் மறைக்கப்படமுடியாதது. கடற் தடைச்சட்டம், உயர் பாதுகாப்பு வலயம், சொந்தப் பிரதேசங்களில் குடியமர்தல், காணாமற் போனோர் விவகாரம் போன்றவற்றிற்காகக் கூட இவர் குரல் கொடுத்திருக்கின்றார்.

வடபகுதிக்கு வருகின்ற அரச தலைவர்களோ அரசசார்பற்ற பிரதிநிதிகளோ வெளிநாட்டுப் பிரமுகர்களோ, சமாதான தூதுவர்களோ, தூதரகப் பிரதிநிதிகளோ யாழ். ஆயர் இல்லத்திற்கு வராமல் போனதில்லை. ஆயரின் இந்தக் குரல் ஓய்வுறக்கமின்றி நடுநிலைமையோடு உண்மையை உரைக்க ஓங்கி ஒலித்துக் கொண்டே இருந்தது. மனிதநேய நோக்கோடு உரக்கச் சத்தமிட்ட இவரின் குரலை கேட்ட இவர்கள அந்தக்குரலுக்குரியவரைப் பார்கக வந்தார்கள் என்றுதான் கூறவேண்டும். இந்த உண்மையை கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல, இந்து சமய மக்களும் நடுநிலைமையோடு செயற் படுகின்ற புத்திஜீவிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆயர் பணியில் கால் நூற்றாண்டில் காலடி பதிக்கும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணி சிறக்க இறையருள் நிறைவாகப் பொழியப்பட வேண்டுமென பிரார்த்திப்போம். ✱

## குடிதண்ணீர் விநியோகத்திட்டம் காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டது

காரைநகர்,ஜூலை3

காரைநகர் பிரதேசத்திற்கான குடிதண்ணீர் வழங்கும் பணிகள் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென லண்டன் காரை நலன்புரிச்சபையினால் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான 18 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய பவுஸர் ஒன்றினை காரைநகர் அபிவிருத்திச் சபைக்கு கையளித்திருந்தது.

இந்தப் பவுஸர் கையளிப்பு வைபவமும் குடிதண்ணீர் விநியோக அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இதில் காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், காரைநகர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.கனகன் உட்படப் பலர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் லண்டனில் இருந்து வருகை தந்திருந்த லண்டன் காரை நலன்புரிச்சபைப் பிரதிநிகள் காரைநகர் அபிவிருத்திச் சபை செயலாளர் ஜெ.தில்லையப்பலவாணரிடம் சம்பிரதாயபூர்வமாகபவுஸரைக்கையளித்தனர். (எ-73)

## கால்நடைகளை கடித்துக்குதறும் கட்டாக்காலி நாய்களால் மக்கள் கவலை

காரைநகர்,ஜூலை3

காரைநகர்ப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் பொதுமக்களின் கால்நடைகளை கடித்துக் குதறிவருவதாகமுறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் கட்டி வளர்க்கும் கால்நடைகள், மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகள் என்பன இவ்வாறு கட்டாக்காலி நாய்களால் வகைதொகையின்றிக் கடித்துக் குதறப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளும், பெருந்தொகையான கோழிகளும் இறந்துள்ளதுடன், பல கால்நடைகள் காயமடைந்தும் உள்ளன.

இதனால், கால்நடை வளர்ப்போர் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதுடன், இந்த கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த உரியவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (எ-73)

## மெய்வன்மைப் போட்டிப் பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் பெருவிளையாட்டு, மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பரிசளிப்புவிழாவில் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் செல்வி தி.பெரியதம்பி, உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், மற்றும் தமிழீழக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், மற்றும் லண்டன் தமிழ்ப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் எஸ்.மயில்வாகனம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பரிசளிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் வெற்றிபெற்றவர்களுக்கான இராப்போசன விருந்துபசாரமும் இடம்பெறும். (எ-13)

## வலி. தெற்கில் 4 மயானங்கள் பிரதேச சபையால் புனரமைப்பு

வலி.தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நான்கு இந்து மயானங்களைப் புனரமைப்புச் செய்யப் பிரதேச சபை முன்வந்துள்ளது. மேற்படி மயானங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக இரண்டு லட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை உசத்தியோடை மயானம், ஈவினை இந்து மயானம், கந்தரோடை சங்கம் புலவு மயானம், புன்னாலைக்கட்டுவன் மத்தாலோடை மயான்ம் என்பனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஏழாலை உசத்தியோடை, ஈவினை இந்து மயானங்களில் உடல்களை எரிக்கும் கொட்டகைகள், கிணறுகள், மடங்கள் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-152)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலிருந்த நல்ல நிலையிலுள்ள ட்ராக்டர் Massey Fergyson, Model MF 135 விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6936732 உடுவில் மேற்கு, சுன்னாகம். (37143)

R-80 உஷா குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு. தொடர்பு: 45, சங்கிலியன் வீதி, நல்லூர். (37221)

4 ஸ்ரீ Volks wagon (1200-12Volts) 20 வருட சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு 54, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.: 7935. (37230)

## வான் விற்பனைக்கு

Toyata Town Ace 250 - xxxx தொடர் இலக்கமுடைய வான் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.61, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777305533.(சி-43751).

## பசு மாடு விற்பனைக்கு

நல்ல இன இரண்டு யேசி மாடுகள் கன்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தே.கரன், இல.03, முஸ்லிம் கல்லூரி வீதி (லைடன் சந்தி), கொட்டடி, யாழ்ப்பாணம்.(37209)

## வீடு விற்பனைக்கு

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்னால் பருத்தித்துறை வீதியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு (முன்னர் பிரான்ஸ் நாட்டு வைத்தியர்கள் வசித்த) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 222 3376, 0777 917813. (36961)

இல.12/3, கந்தபுராண வீதி, கந்தர்மடத்தில் 1¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021- 222 6574.(37219)

வட்டுக்கோட்டை, சங்கரத்தை Dr.செல்லத்துரை வீதியில் நிலப்பரப்பு நான்கும் 5 அறைகள் கொண்ட நல்ல நிலைமையிலுள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.நாகேஸ்வரி (தவமணி) வட்டு.கிழக்கு Dr. செல்லத்துரை வீதி, சங்கரத்தை. (37028)

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பெரிய கோயிலடி, மத்தியூஸ் வீதி, 2ஆம் ஒழுங்கையில் 1¾ பரப்புக் காணியில் அமைந்த 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: N.செல்லத்துரை, 11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 6358 அல்லது தாசன், 15/4, மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 021 4590292. (37256)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 190/-, சுத்தம் செய்தது 1Kg 285/-, கல்பேட் 1Kg 190/- மற்றும் புறொயிலர் குஞ்சுகள் 1½ வயது நிரம்பியவை, கிறேட் டேயன் ஆண் நாய் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K. Farm, மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில். (37163)

Prima உயிர், Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37166)

## தவறிவிட்டது

நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.330260998V) கடந்த 22.06.2005 புதன்கிழமை நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காமாட்சி அம்பாள் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.(37224)

NP-HO-8481 என்ற வாகன இலக்கத் தகடு யாழ்.நகருக்கும் வல்லைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021-2226112 என்ற இலக்கத்துடனோ அல்லது 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ ஒப்படைக்கவும். (37175)

## மணமகன் தேவை

கொழும்புத் தமிழ் கத்தோலிக்க மணமகள்மார் 39 வயது, 5' உயரம் பொது நிறம், தொழில் Customer Care Officer Ref-No.10199, 41 வயது, 5' உயரம், பொது நிறம், தொழில் Banker Ref- No. 10200 எதிர்பார்ப்பு பொருத்தமான மணமகன்மார் விவரங்களுடன் விண்ணப்பிக்க முகவரி 8/3/3, Metro Apartment, 55th Lane Wellawatte, colombo - 06.தொடர்பாளர் திருமணப் பொருத்துநர் வேலமுதன் தொலைபேசி 2360488. (சி-4377)

கிறிஸ்தவம், 1979 இல் பிறந்த, திருவோணம் 4ஆம் பாதம் செவ்வாய்த் தோசமற்ற, கிரகபாவ சங்கியை 43. உயரம் 5'2", சிவந்த நிறமுடைய மணமகளுக்கு வெளிநாடுகளில் நிரந்தர வதிவுரிமை பெற்ற (பிரான்ஸ் விரும்பத்தக்கது) மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை, இல.01 பழம்வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். (37225)

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 28 வயதுடைய, அமெரிக்காவிற்கு Sponsor செய்யக் கூடிய, உடனடியாகச் செல்ல உள்ள, பூரம் நட்சத்திரமுடைய மணமகளுக்கு Professiowally Qualified வெளிநாட்டு, உள்நாட்டு, நற்குணமுள்ள மணமகன் தேவை. ஓரிரு வாரங்களில் மணமகனுக்கு American Visa ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளதால் உடன் விண்ணப்பிக்கவும் வி.இல. 2640, மே.பா, உதயன். (37222)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், உத்தரம் 3ஆம் பாதம், பிரான்ஸில் வசிக்கும், 31 வயதுடைய மகனுக்கு 5'2", இற்கு குறைவான உயரமுடைய பாவம் குறைந்த மணமகள் தேவை. தொடர்பு: வி.இல.2641, மே.பா உதயன். (37229)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 29 வயது, திருவாதிரை நட்சத்திரம், 16½ பாவம், 5'4" உயரமான மணமகனுக்கும் சதய நட்சத்திரம், 4ஆம் பாதம், 5'2" உயரம், தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கும் 5'3" உயரம், சதய நட்சத்திரம், 2ஆம் பாதம், உப அஞ்சலதிபர் மணமகனுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: தொலைபேசி: 071 4841069, 077 6059585 (36516)

## வீடு வாடகைக்கு

பொறியியல் கல்வி ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு யாழ்.நகர எல்லைக்குள் இரண்டு அறைகள் கொண்ட அளவான வீடு வாடகைக்குத் தேவை. மேலதிக விவரங்களுக்கு 011 2361587, 0112506803.(சி-43823)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 41 xxxx தொடர் இலக்கமுடைய ISUZU ELF 250 வான் (Single Weel - மரபொடி) விற்பனைக்குண்டு.
தொடர்பு:
497, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P.: 222 6729
(37082) (21-45-34)

## தவறிவிட்டது

பரந்தன் முரசுமோட்டை D3 பன்னங்கண்டி என்ற முகவரியைச் சேர்ந்த தவராசா ஆனந்தகுமாரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை [இல.778390426V], திரந்தா வன்னிப்பாஸ், சிறுதொகைப் பணம் என்பவற்றுடன் ஒரு பேர்ஸ் 30-06-2005 வியாழக்கிழமை பெருமாள் கோயிலுக்கும் திருநெல்வேலி ஆடியபாதம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல. 021-4590627, 0214590842 உடன் தொடர்புகொள்ளவும். இருந்த பணத்துக்கும் கூடுதலான சன்மானம் வழங்கப்படும். (21-45-34)(37232)

## கடை வாடகைக்கு

யாழ்.நகரை மிக அண்மித்த கஸ்தூரியார் வீதியில் அமைந்த கடை ஒன்று வாடகைக்குண்டு. நகைக்கடை, வேறு பாவனைக்கும் உகந்தது.
தொடர்பு:
49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(37154) (21-45-34)

## திருமணக் கார் வாடகைக்கு

(குளிரூட்டியது)



- திருமண வைபவங்கள்
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள்

முதலான அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு உண்டு.
வெள்ளை நிறக் கார்களுக்கு முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
சிவா வீடியோ லைபிரறி (37012) (42-19-45)
முடமாவடி, திருநெல்வேலி (புங்கனிச்சோலை அருகில்).

## 'இந்துபோட்' நினைவுப் பேருரை

நல்லூர், ஜூலை3 சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர் 'இந்து போட்' சு.இராசரத்தினத்தின் 121 ஆவது நினைவுப் பேருரை நாளை திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முன்னாள் கல்விப் பணிப்பாளர் சி.இராசரத்தினம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (எ-111)

## சிறுப்பிட்டி கிழக்கு அண்ணமார் ஆலய வளர்ச்சி நிதிக்காக மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி

இடம்: நீர்வேலி சவாரித்திடல்
காலம்: இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 1.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி. ஆலய நிர்வாகம்.
(37252)(21-45-34)

## டேடன்ஸ் பரிசோதனை சேவை

### தேவை

1. பயிலுநர்: ஆய்வுகூடப் பரிசோதகர்
   தராதரம் : க.பொ.த.உயர்தரம், கொழும்பில் பயிற்சிபெறத் தயாராக இருக்க வேண்டும்.
2. நிர்வாக உத்தியோகத்தர்:
   தனியார் வைத்தியசாலையொன்றை நிர்வகிக்கும் திறன், அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கில அறிவு அவசியம்
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
இடம்: சம்பந்தர் கிளினிக்
(இலங்கை வங்கிக்கு அருகில்)
574/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 02.07.2005 சனி 12.30
03.07.2005 ஞாயிறு 12.30
தொலைபேசி 021 222 7806
(87167) (21-45-84)

## நினைவுக்கல் திரைநீக்கம்



கப்டன் நித்தியா (தங்கராசா சாரதா)
தோற்றம் 24-06-1976 மறைவு 03-04-1996

"நித்தமும் உந்தன் நினைவோடு
நித்தியா நிஜமாக நிழலாடும் நினைவுகள் நிஜம்"

இவர் யாழ். வடலியடைப்பு, அரசடியில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது 03-04-1996 இல் வீரச்சாவு அடைந்தார். இவரது நினைவுக்கல் திரைநீக்கம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று 03-07-2005 ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கீரிமலை வீதி, சித்தன்கேணி. - தங்கராசா குடும்பத்தினர்.
(37254) (24)

## லாவா வைத்திய நிலையம்
## LAVA DISPENSARY

**M.B.B.S.** வைத்தியர்களின் சேவை

பார்வையிடும் நேரம்:
வார நாள்களில் 4.30 p.m.- 8.00 p.m.
சனி, ஞாயிறு 8.00 a.m.- 1.00 p.m.
2.00 p.m.- 8.00 p.m.

விரைவில் விசேட வைத்திய நிபுணர்களின் சேவை ஆரம்பம்

சகல விதமான இரத்த, சல பரிசோதனைகளும், ECG சோதனையும் நடைபெறுகின்றன.

No.:24, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.

No.:02, கடற்கரை வீதி, (ஆரோக்கிய நாதர் கோயில் அருகில்), குருநகர், யாழ்ப்பாணம்.

(37213)(42-21-45-34)

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 23 - 06 - 1984
ஆண்டவன் அடியில் 13 - 07 - 2004



திதி:03-07-2005

செல்வன் கந்தசாமி ரவீந்திரன் (சதீஸ்)

அன்பு மகனாய்
பாசமிகு அண்ணாவாய்
எம்முடன் வாழ்ந்தாய்
எங்களை விட்டுப்பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
கனிந்த உன் பூ முகமும்
புன்னகையும் - உன்
நினைவுகளும் எம்முடன்
எம் உயிருள்ளவரை வாழும்.

முகவரி:
இல. 101, 10 ஆம் பண்ணை,
கனகபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
அப்பா - கந்தசாமி
அம்மா - மகாலட்சுமி
தங்கை - ராஜினி
தம்பி - சஞ்ஜீவன்.

(37205)(51-19-45)

# "...சொந்த ஊரில் மகிழ்வாக இருந்தோம் அகதி வாழ்வில் அவலப்படுகிறோம்..."

யுத்தம் நடைபெற்ற காலங்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களைத் தொலைத்து, உறவுகளைப் பறிகொடுத்து, உடைமைகளையும் கைவிட்டு, உடுத்த உடுப்போடு உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற மக்



களின் அவல வாழ்வியல் சமாதான காலத்திலும் சீர்செய்யப்படாமல் இருக்கிறது.

அவர்களின் சொந்த ஊரில் மீளக்குடியேற அனுமதிக்கப்படாமல் இரவல் காணிகளுக்குள் சொல்லொணாத் துன்பங்களைச் சுமந்தவாறு தமது வாழ்நாளை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் அகதி வாழ்வும் துன்பங்களும் இன்று நேற்றல்ல 15 வருடங்களாக - தொடர்கதையான - அவலமாகவே உள்ளது.

இத்தகைய மக்களின் துன்பங்களையும், அவர்களுக்கு இன்றைய காலகட்டத்தில் தேவையான அடிப்படை வசதிகள் எவை என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்குடன் "உதயன்" தனது மகத்தான பணியான "இவர்களைப் பாரீர், கேளீர்" என்ற தொனியில் விசேட பார்வையினை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்குகிறான்.

அந்தவகையில் இந்தவாரம் சுன்னாகம் - கந்தரோடைப் பிள்ளையார் நலன்புரி நிலையத்தில் வாழுகின்ற மக்களின் துயரங்களையும் அவர்களின் இன்றைய அடிப்படைத் தேவைகள், வசதியீனங்கள் என்பவற்றையும் அறிந்து தருகிறோம்.

அந்த நலன்புரி நிலையத்துக்கு நேரில் சென்று அங்குள்ள மக்களோடு பேசி, ஆராய்ந்தவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

### *எந்த நிலையில் இந்த முகாம் உள்ளது?*

1990களில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த காங்கேசன்துறை, கீரிமலை, தையிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இங்கு அதிகம் உள்ளார்கள்.

42 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 300 இற்கு மேற்பட்ட மக்களின் வாழ்வியல் இதற்குள் அடங்குகிறது.

இவர்கள் வாழும் குடிசைகளைப் பார்க்கின்றபோது உள்ளத்தில் ஏதோ இனம்புரியாத உணர்வு, ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் மிகவும் அவசியமானது உறையுள் .... அதுகூட இந்த முகாமில் இல்லை.

"வானம் பார்க்கும் கூரைகள்" காற்றடிக்கும் போதெல்லாம் வீட்டுக்குள்ளே குப்பைகளைத் தாராளமாகத் தினம்தினம் வரவேற்கிறார்கள். வீட்டின் கரைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ள தட்டிகளும் அதோகதிதான்......

நெருக்கமான முறையில் வீடுகளின் அமைப்புகள். இதனால், அவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் ஏராளம்.

ஒரு வீட்டில் வாழும் உறவுகளிடையே விரிசல்கள், முரண்பாடுகள் ஏற்படுவது மனித இயல்பு.

அப்படியிருக்கையில் ஒரு பரப்புக்காணிக்குள் இரண்டு வீடுகள் கட்டி - மிகவும் நெருக் கடியான குடியிருப்பில் வாழுகின்ற இவர்களுக்குள் எத்தனை முரண்பாடுகள், மன உளைச்சல்கள் ஏற்படும் என்பதனைச் சொல்லவே தேவையில்லை. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இது தெரியாது. உள்ளிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் அந்தநிலை புரியும்....

### *இதுவரை கிடைத்தது என்ன?...*

அகதி முகாமில் 15 வருடங்களாக சொந்தங்களை இழந்து, சொந்த ஊரினை இழந்து வாழும் இவர்களின் வாழ்வியலை மேம்படுத்த அரசினால் இதுவரை எந்தவித உதவிகள் வழங்கப்பட்டன என்று ஆராய்ந்து பார்த்தால், நிவாரண முத்திரை மட்டும்தான் மிச்சமாக இருக்கிறது. ஏனைய நலன்புரி நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்ட கூரைத்தகடுகளும், 25 ஆயிரம் ரூபா காசும்கூட இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதனை அங்குள்ள மக்கள் மிகுந்த மன வேதனையுடன் சொல்லிக்கொள்கிறார்கள். இந்த உதவி இவர்களைச் சென்றடையாமல் இருப்பதற்கு இவர்கள் குடியிருக்கும் காணியினுடைய உரிமையாளரும் கிராம சேவையாளர் ஒருவருமே



காரணம் என்று அங்குள்ளவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

### *சுகாதாரச் சீர்கேடு தாராளம்*

இங்கு வாழும் 300இற்கும் மேற்பட்ட மக்களின் பாவனைக்கென 5 மலசலகூடங்கள் தான் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று மலசலகூடங்கள் தற்போது பாவிக்கமுடியாத நிலையில் இருக்கின்றன.

அங்கு மூன்று குழாய்க்கிணறுகள் உள்ளன. அவற்றில் இரண்டு முற்றுமுழுதாகப் பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

பல வருடங்களாக இந்தக் கிணறுகள் இவ்வாறு மோசமான நிலையில் இருக்கின்றபோதும் அவற்றைத் திருத்துவதற்கு எவரும் முன்வரவில்லை.

ஒரு குழாய்க்கிணற்றில்தான் தினமும் நீண்ட வரிசையில் நின்று அனைவரும் தண்ணீர் எடுத்துச்செல்கின்றனர்.

காலையும் மாலையும் கந்தரோடைப் பகுதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் விநியோகிக்கின்ற குடி தண்ணீரைப் பெற்றுக்கொள் கிறார்கள். அதற்குக்கூட ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் தலா 30 ரூபா அறவிடுகிறார்கள். அன்றாடம் உழைத்துச் சாப்பிடுகின்ற தங்களிடம் குடிதண்ணீருக்கும் கட்டணம் அற விடப்படுவதையிட்டு அவர்கள் மிகவும் கவலைப்படுகின்றார்கள்.

### *கல்விச் சூழல் இங்கு இல்லை*

இங்கு சுமார் 60 மாணவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்கு இங்கு கல்வியைச் சிறந்த முறையில் கற்பதற்குரிய சூழல் இல்லை என்பது அங்குள்ள வர்களின் கருத்து.

இங்கு கற்கும் முன்பள்ளி மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பிரதேச சபையினர் இந்தக் காணிக்குள் 50 ஆயிரம் ரூபா

**இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!!**

பெறுமதியான கட்டடம் ஒன்றைக் கட்டித்தருவதற்கு முன்வந்தார்கள்.

அதற்குரிய கட்டடப் பொருள்களையும் வழங்கினார்கள். ஆனால், இதனை சம்பந்தப்பட்ட காணி உரிமையாளரும் கிராமசேவையாளர் ஒருவரும் தலையிட்டுத் தடுத்துநிறுத்தி விட்டார்கள் என்று மிகவும் வேதனையுடன் பெரியவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

இத்தகைய நெருக்கீடான சூழ்நிலையில் தான் இங்குள்ள மாணவர்களின் கல்வி நிலை தொடர்கிறது.

### *அரச அதிகாரிகள் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை*

இவர்களின் இத்தகைய அவல நிலையினை அரச அதிகாரிகள் எவரும் சென்று பார்ப்பதில்லை; கேட்பதில்லை என்று அப்பகுதி மக்கள் மனவேதனையுடன் கூறிக்கொள்கிறார்கள்.

இங்குள்ள சுகாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கோ அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கோ சுகாதார அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதாக இல்லை.

"நாங்கள் வேணுமெண்டு இந்தக் காணிக்குள் குந்தி இருக்கேல்ல. காலத்தின் சூழ்நிலையால் எங்கட காணிகளையெல்லாம் விட்டிட்டு இஞ்ச வந்திருக்கிறம்..."

நாங்களும் ஒரு காலத்தில நல்ல வசதியாக



சொந்த ஊரில சந்தோஷமா வாழ்ந்தனாங்கள் தான். யுத்தத்தின் கொடூரத்தில் சொந்த மண்ணை விட்டு வெளியேறி அகதி என்ற அவலப் பெயரோட அவல வாழ்வு வாழுறம்....

"வாழ்க்கையைச் சுமுகமாக நடத்துவதற்கு அடிப்படை வசதிகள் எதுவுமில்லாமல் அன்றாடம் உழைச்சுச் சாப்பிட்டு இதுக்குள்ளே முடங்கிக்கிடக்கிறோம்" ".....எத்தனை நாளைக்குத்தான் இந்த அவலம் தொடரப் போகுதோ தெரியேல... எங்களட ஊர் போய்ச் சேரும் வரைக்கும் எங்களுக்குச் சொகுசு வாழ்க்கையை அமைத்துத் தராவிட்டாலும் எளிமையான வாழ்க்கையைச் சுமுகமாக வாழக்கூடியவாறு அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்து தர சம்பந்தப்பட்ட எல்லாரும் உதவவேண்டும்...."

"எங்களை எங்கள் சொந்த மண்ணுக்கு அனுப்பினால் நாங்கள் அங்க போய் சுயமாக உழைச்சு எங்கட வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்புவோம்..." "எங்கட வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டுமானால் கல்வி மிகப்பிரதானமானதாக உள்ளது. அதனை எமது பிள்ளைகள் கற்பதற்குக்கூட இங்கு சுமூகமான சூழல் இல்லை. மின்சார வசதிகளோ, பொருளாதார வசதியோ எதுவுமற்ற நிலையில் வாழ்கிறோம்...."

இவையெல்லாம் இந்த முகாமில் பரிதவிக்கும் மக்களின் உள்ளக் குமுறல்கள் - அடிமனத்தின் பதிவுகள்.

### அபிமானன்

இங்குள்ள மக்களின் உள்ளத்தின் வேதனைகளும் எதிர்பார்ப்புகளும் சொல்லில் அடக்க முடியாதவை. எனவே, இவர்களின் எதிர்கால வாழ்வினை இனிமேலும் இருட்டடிப்புச் செய்யாமல் ஒளியேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தது.

அவர்கள் ஊர்போய்ச் சேரும் வரைக்கும் உங்கள் சேவை அவர்களுக்குத் தொடர்ந்து தேவை. அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஆடம்பர வாழ்க்கை அமைத்துக்கொடுக்கப்படாவிட்டாலும் அடிப்படை வசதிகளை நிறைவுசெய்து கொடுத்து - அவர்களைச் சூழ்ந்துள்ள நெருக்குவாரங்களைக் களையுங்கள். துயரங்களைத் துடையுங்கள்.

அதற்காக இந்த முகாமுக்கு நேரில் செல்லுங்கள். அவர்கள் நிலையினை அலசி ஆராயுங்கள். அவர்களுக்கான உங்கள் பணியினைச் செவ்வனே திறம்படச் செய்யுங்கள். அதனை இன்றே தொடங்குங்கள். *

# கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்திப் பவனி கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி ,ஜூலை3

கருப்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களினால் உருவமைக்கப்பெற்ற கருப்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்திப் பவனி நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் இந்த ஊர்திப் பவனி நடைபெறவுள்ளது.

கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைச் செயலக வளாகத்திலிருந்து ஊர்திப் பவனி ஆரம்பமாகியது.

கிளிநொச்சி டிப்போசந்தியை வந்தடைந்த ஊர்தி ஏ-9 பிரதான வீதி வழியாக பளைப் பிரதேசத்திற்குச் சென்றது.

வீதிகள் தோறும் மக்கள் திரண்டு கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுன்தினம் பளைப் பகுதியில் தரித்து நின்ற ஊர்தி நேற்று பரந்தன் சந்தியினை வந்தடைந்து பின் முல்லைத்தீவு வீதிவழியாக விசுவமடு சென்று அங்கிருந்து மீண்டும் புளியம்பொக்கணை சந்திவழியாக வட்டக்கச்சி சென்று கிளிநொச்சியில் தரித்து நின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சியிலிருந்து புறப்படும் ஊர்தி ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரிக்குளம், முழங்காவில் பிரதேசங்களுக்குச் சென்று மன்னார் வீதியால் வந்து பூநகரியில் தரித்து நிற்கும்.

நாளை திங்கட்கிழமை பூநகரியிலிருந்து ஊர்தி புறப்பட்டு பரந்தன், உருத்திரபுரம், முறிகண்டிப் பிரதேசங்களுக்கு ஊடாகச் சென்று கிளிநொச்சியை அடையும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-204)

# உலக உணவுத் திட்டத்தில் வீதி புனரமைப்பு

ஒட்டுசுட்டான் ,ஜூலை3

மிகநீண்டகாலமாக மக்கள் போக்கு வரத்துச் செய்யமுடியாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட பண்டாரவன்னி, 4 ஆம் கண்டம் பாதை உலக உணவுத்திட்டத்தின் கீழ் செப்பனிடப்பட்டுள்ளது.

கற்சிலைமடுவிலிருந்து முல்லை வீதிக்குச் செல்லும் குறுகிய பாதையாக இருந்து வந்த இப்பாதை மிகநீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது இருந்தது. மழைகாலங்களில் சேறும் சகதியும் நிறைந்த இப்பாதையால் மக்கள் செல்வதில் அவலமடைந்தனர். தற்போது அவை திருத்தப்பட்டுள்ளன.

எனினும், முல்லைத்தீவு பிரதான வீதி வரை இப்பாதையை செப்பனிட்டுத்தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (த-341)

# ஒட்டிப்பிறந்த கன்றுக்குட்டிகள்



முத்தையன்கட்டு, வலது கரைப் பகுதியில் இரண்டு கன்றுக்குட்டிகள் ஒட்டிப் பிறந்தன. அப்பகுதியைச் சேர்ந்த கிருபா என்பவருக்குச் சொந்தமான பசுவே இந்த அதிசயக் கன்றுக்குட்டிகளை ஈன்றது.

8 கால்கள், இரண்டு தலைகள் என்பன காணப்பட்டன. இரு கன்றுக்குட்டிகளினதும் பின்புறம் ஒட்டிய நிலையில் காணப்பட்டது. இக்கன்றுக்குட்டிகள் பிறந்து ஒன்றரை மணித்தியாலத்தில் இறந்துவிட்டன. இந்த அதிசயக்கன்றுக்குட்டிகளை ஏராளமான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

*(படம்: ச.உதயசங்கர், வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**ரோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்குமபோது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 2567.

(C-43760)


## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

✦ ✦ ✦

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3மணிக்கு கல்லூரி கலையரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

### வாழும் கலைப்பயிற்சி அறிமுகவுரை இன்று

வாழும் கலை நிறுவன யாழ்.மையத்தின் ஏற்பாட்டில் வாழும் கலைப்பயிற்சி தொடர்பான இலவச அறிமுகவுரை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது. (எ-202)


## STUDY IN LONDON

September 2005 Intake

**UNIVERSITY OF EAST LONDON**

**STUDY AT A TOP BRITISH UNIVERSITY**

**Undergraduate & Postgraduate**

- Architecture
- Finance Money & Banking
- Art, Fashion & Design
- Electronic & Electrical Eng.
- Manufacturing System Eng
- Internet Engineering
- Bio - Sciences
- Bio Medical Sciences
- E.Commerce
- Sports Sciences
- Business Studies
- PG Diploma
- Civil Engineering
- Accounting & Finance
- Media & Communication
- Software Engineering
- Computer Forensics
- Computer Networks
- LLM
- LLB

BA · BSc · MA · MSc · MBA · MPhil / PhD

**OVER 1000 COURSES AVAILABLE**

Affordable Tuition · Free Consultation · No Charges · Visa Guidence

**Immediate Offers Made to Genuine Students**

For Appoinments Contact :

**Mr. Loho Gunesekara** - Lohos Group

Official Representative & Education Adviser

Tel No's : 0777-917929 / 0714-124446

E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk

Office : Lucky Plaza Building SH2, 6th Floor, St. Anthony's Mw., Colombo 03.

(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)

தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376



## ஆச்சாரிய அபிஷேக முகூர்த்த அழைப்பு

மங்களகரமான நிகழும் பார்த்திப வருடம் ஆனி மாதம் (04-07-2005) 20ஆம் நாள் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்குள் வரும் இடப லக்கினமும் ரோகினி நட்சத்திரமும் திரியோதசி திதியும் அமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் சாவகச்சேரி வடக்கு, இலுவம் செல்வவிநாயகரின் அருள் ஆசியுடன் சாவகச்சேரி வடக்கு இலஞ்சி ஆரணியம் குமரக்கோட்டம் முருகன் துணையுடன் சாவகச்சேரி கோயில் குடியிருப்பு ஞானவீரபத்திரர் வழித் தூண்டலினால் துரையப்பா ஐயர் அவர்களின் பேரனும் அண்ணாச்சாமி ஐயர் அவர்களின் மகனுமாகிய

### ஸ்ரீ பிரமஸ்ரீ பரமசாமி சர்மா

அவர்களுக்கு

ஸ்ரீ இலங்கமா காளி கோயில் (இரட்ணம் றோட் கொழும்பு - 13) அருள் மண்டபத்தில் நிர்வாண தீட்சை சகித ஆச்சாரிய குரு அபிஷேகம் நடைபெறத் திருவருள் சக்திகள் அருள்பாலிக்கும் அத் தருணம் அன்புடையீர் அனைவரையும் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு: ஸ்ரீ சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம், கொழும்பு.

ஸ்ரீ சிவபிரமஸ்ரீ தி.உமாசுதக்குருக்கள்
மூளாய்.

(37172)(26-14-17)



உ

சாமியே சரணம் ஐயப்பா

## பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான பார்த்திப வருடம் ஆனி மாதம் 19ஆம் நாள் இன்று (03-07-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 12.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி

### சுபந்தா

அவர்களுக்கு இறைவன் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் இலங்கை, இந்திய நாதஸ்வர - தவில் கலைஞர்களும் இவ்விழாவில் செல்வியை ஆசீர்வதிக்க வருகைதரவிருப்பதால் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

42/3, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
T. P.: 0777222219.

திரு.திருமதி
லயன் கனகசபை சுந்தரலிங்கம் குடும்பம்.
சமாதான நீதிவான் (காரை. மணிகண்டன்)

(37246)(26-14-17)



உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் ஆனித்திங்கள் 19ஆம் நாள் இன்று (03-07-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.09 மணி முதல் 12.01 (பழைய நேரம்) மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**றிஜினோல்ராஜ்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**தாரணி**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய இறையருள் கூடிப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் ஆனைக்கோட்டை காசிகாண்டம் விஸ்வநாதர் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருமாங்கல்யதாரண வைபவத்திற்கு உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி தங்கராஜா,
64/7, முருகமூர்த்தி றோட்,
வண்ணார்பண்ணை.
(ராஜ் ஜுவல்லர்ஸ் - திருநெல்வேலி).
T. P.: 0779006957.

[இருவீட்டார் அழைப்பு]

திரு.திருமதி கணேசரட்ணம்,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
T. P.: 0776646548.

(37117)(26-14-17)






ஐயப்பன் துணை

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாள் (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20 மணிமுதல் 12.32(பிரான்ஸ் நேரப்படி) மணிவரையிலான ரோகினி நட்சத்திரமும் திரயோதசித் திதியும் சித்தயோகமும் கூடிவரும் சுபமுகூர்த்த வேளையில்

Paroisse St.Denis de la chapelle 50, place De Torcy, 75018 paris metro marx Dormoy

மண்டபத்தில் நடைபெறுகின்ற திருமண பந்தத்தில் இணையும்

திருவளர் செல்வன்
**சிவானந்தன்**

திருவளர் செல்வி
**ராதை**

தம்பதியினரை மூத்தவிநாயகர் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் சீரும்சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.சற்குணம்
11, Square Jean mermoz
Le Blanc mesnil
Tel:0664858572

த.ஜெகதீஸ்வரன், இந்துமதி குடும்பத்தினர்.
ஹப்பி ரெலிக்கொம்
மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய், கரவெட்டி.
021 226 3357.

(37208)(50-34-45)



விரிவுரைகள் ஆரம்பம்

எமது நிறுவனத்தில் பின்வரும் விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

1. Diploma in MS - office
2. Diploma in Computer Hardware
3. Diploma in Internet & E - Mail

வார, வார, இறுதி மாலை, இரவு நேரங்களில் விரிவுரைகள் நடைபெறும்.

C.B. COMPUTER ACADEMY

Station Road, Kondavil. T.P.: 021 - 4590291.

(37234)(46-14-17-26)



## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் **நரசிம்ம நாயுடு**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன்** அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

(36807) (26-14-17)



## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டு இருக்கும் முதல்தர காப்புறுதி நிறுவனத்தில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை எழுதி முடித்த ஆண்-பெண் இருபாலாரும் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிக்க முடியும்.

1. விற்பனை மேற்பார்வையாளர்,
2. வியாபார அபிவிருத்தி உதவியாளர்கள்,
3. வியாபார அபிவிருத்தி அலுவலர்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 09-07-2005
விளம்பர இலக்கம் 2635,
C/O உதயன், யாழ்ப்பாணம்.

(சி/43686)(46-14-17-26)



புனிதா நகைமாடத்தினரின்

**முக்கிய அறிவித்தல்**

## புனிதா நகைமாடம்

169, 171, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(பஸ்நிலையம் முன்பாக) ☎ 021 222 7026

எமது ஸ்தாபனம் ஆரம்பத்தில் 32, கஸ்தூரியார் வீதியிலும் பின்பு 239, கஸ்தூரியார் வீதியிலும் இயங்கிவந்தது. எமது வாடிக்கையாளர்களின் நலன்கருதி தற்போது *169, 171, மின்சார நிலைய வீதியில* இயங்குகின்றது. ☛ எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் எங்கள் புதிய ஸ்தாபனத்துக்கு வருகைதந்து, எம்மை வாழ்த்தி எமது சிறு அன்பளிப்பைப் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். உங்கள் வரவை நிச்சயம் எதிர்பார்க்கின்றேன்.

உரிமையாளர் - திரு.சபாரத்தினம் நேசராசா

சிவபுரம்,
சித்தன்கேணி.

239, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(37097)(14-17-26)



## கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் பார்த்திப வருஷ மகோற்சவம் 03.07.2005 - 14.07.2005

(03.07.2005) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி கொடியேற்றம்
(08.07.2005) வெள்ளிக்கிழமை காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், மாலை 7 மணி பூச்சப்பரம்
(09.07.2005) சனிக்கிழமை காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், மாலை 7 மணி கைலாயவாகனம்
(10.07.2005) ஞாயிறு காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், பகல் 12 மணி வேட்டைத் திருவிழா, மாலை 7 மணி சப்பரம்
(11.07.2005) திங்கட் கிழமை காலை 9.30 மணி இரதோற்சவம்
(12.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்), மாலை 7மணி கொடியிறக்கம்
(13.07.2005) புதன் மாலை 7 மணி திருக்கல்யாணம் (முருகப் பெருமான்)
(14.07.2005) வியாழக்கிழமை மாலை 6.30 மணி வைரவர் உற்சவம்

தினமும்: உதய பூசை காலை 6 மணி, அபிஷேகம் காலை 8.30 மணி, வசந்தமண்டபப்பூசை காலை 10.30 மணி, சாயரட்சை பூசை மாலை 6 மணி, வசந்தமண்டப பூசை மாலை 7மணி.
கொடியிறக்கக் கிரியைகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.
உற்சவ நாள்களில் இரவுத் திருவிழா தினமும் மாலை 9 மணிக்கு நிறைவுபெறும்.
மகோற்சவ குரு: நா.ஹரீந்திரக் குருக்கள்
தினமும் காலை பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.
கோண்டாவில் கிழக்கு. ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை.
(37176-25-15-11-12)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 17 . 05 . 1946



ஆண்டவன் மடியில் 15 . 07 . 2004

**அமரர் நல்லதம்பி கந்தசாமி**
**திதி: திரயோதசி**

மனிதரில் மாணிக்கமாக மாந்தருள் மகானாக
புனிதராக வாழ்ந்த எம் குல விளக்கே!
உன் நிழல்காணாது அயராது துடிக்கின்றோம்
என்னப்பா உண்ணுகிறோம் உறங்குகிறோம்
உங்கள் பிரிவால் அணு அணுவாய் உடைகிறோம்
உள்ளங்கள் அழுது கொண்டும்
உதடுகள் சிரித்த வண்ணமும்
உணர்வுகள் மனம் என்னும் மகுடத்தில்
ஊசலாடுகின்றன...
என்றும் உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு, இணுவில். (C-43832-25-15-11-12)
அன்பு மனைவி,
பிள்ளைகள்.


# மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக் கையேடு 230/=













தொழில்நுட்ப மாணவர்களுக்கு



பாடசாலை மாணவர்களுக்கு

எதிர்வரும் 10ம் திகதி (10.7.2005) இந்த கையேடு இலங்கை முழுவதும் பிரசுரிக்கப்பட இருக்கின்றது. இவ்வர்ண நூலின் மாதிரி அட்டைப்படத்தினை அருகில் காண்கிறீர்கள். அனைத்து மக்களுக்கும் இலத்திரனியல் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் முதன் முதலாக மாறுபட்ட ஓர் புதிய பரிமாணத்தில் அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டிய மின்சாதன பாதுகாப்புக் கையேடு ஒன்று எமது நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட இருப்பதால் இலங்கையின் அனைத்து மக்களுக்கும ஓர் அத்தியாவசியக் கையேடாக அமையப் போவது உறுதி. மேலும் இந்நூல் சர்வதேச ரீதியிலும் பதிவு செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட இருக்கின்றது. இந்நூலின் மற்றைய சிறப்பம்சம் சாதாரண அனைத்து மக்களுக்கும் இலகுவாக விளங்கக்கூடிய விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கில உச்சரிப்புகள் நுட்பத்துடன் கையாளப்பட்டுள்ளது. நூலின் உள்ளடக்கங்களை கீழே பார்க்கவும் (01 தொடக்கம் 08).

**01.உள்ளடக்கப்பட்டுள்ள மின் சாதனங்களின் விபரம்.(120)**
வீட்டின் அனைத்து மின்சாதனங்களும் உள்ளடங்கப்பட்டுள்ளன. இதில் பாவனையாளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய அத்தனை விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை, பலர் அறியாத விசேட தொழிற்பாடுகள், இணைப்பு முறை என்பன).

TV, Cellphone, Blender, Watch, G.S.M Land Phone, Calculator, Solar (sun power), Touch Lamp, Electric Kettle, Computer Speaker, Amplifier, Cycle Dynamo, Iron Box, Booster, Power Guard, Generator, Wall Clock, Computer Monitor, UPS, Stabilizer, Remote Controller, Camera (Automatic, AF, Digital), Video Camera (Handycam), Home Theater System, VCD DVD Players, Walkman Set, Tube Light, Bulb, Computer, Satellite, Cordless Phone, Car Radios, Torch, Charger Torch, Emergency Bulb, Printers, Ceiling Fan, Laptop, Air Cooler, CFL Bulb, Scanner, Modem, USB Flash Drive, Organizer, Air Conditioner, Refrigerator, CD Walkman, Electric Pump or Motor, Exaust Fan, Trip Switch, Circuit Breaker, Micro Cassette Recorder, Battery Charger, Rice Cooker, Microwave Oven, Washing Machines, Tester, Mosquito Killer, Electric Oven, Car Battery, Bank Cards, Hot Plate, Intercom system, Video Intercom, Adaptor or Charger, Driller, Deep Freezer, Rechargeable Batteries, Vacuum Cleaner, Land Telephone, VCR, Emulsion Heater, HiFi Stereo Setup, Organ, Antenna............etc.

**02.பொதுவாகப் பலர் அறிந்திராத மின் உதவிச்சாதனங்கள்.**
110V Convertor, AV RF Convertors, Surge Arrestors, Cellphone Emergency Chargers, Thing Protectors, Fan Remote Controller, Electronic Telephone Locker, Advertisement Board Timers, NTSC PAL Convertors, Wireless Receivers, Automatic Night Lamp, Electronic Home & Office Security System, Inverter, Wireless Door Bell, Door Entrance Alarm, Personal Door Bell.........etc.

03. மின் விரயத்தினைக் குறைப்பதற்கான வழிமுறைகள்.
04. மின் தாக்கப்பட்ட ஒருவருக்கான ப்ரண முதலுதவிக் குறிப்புகள்.
05. பாவனையாளருக்கான மின் அருஞ்சொற்களின் களஞ்சியம்.
06. பாவனையாளருக்கான மின் அலகுகள் மற்றும் மின் குறியீடுகள்.
07. அனைவருக்குமான இலகு வீட்டு மின்னியல் பாடத்திட்டம்.
08. மின்சாதனங்களைத் திருத்துவதில் திருத்துனருடன் எழும் பிரச்சினைகள், அதற்கான தீர்வு மற்றும் புரிந்துணர்வு.

**இக்கைநூலை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் ?**
அருகில் இருப்பவர்கள் நேரடியாகவும் தொலைவில் இருப்பவர்கள் தபால் மூலமும் பெற முடியும். மேலும் முதல் 1000 புத்தகங்களை நேரடியாக அல்லது தபால் மூலம் மாத்திரமே பெறமுடியும். **கடைகளுக்கு வழங்கப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.**

**கட்டணங்களை எவ்வாறு செலுத்த வேண்டும்?**
கட்டணங்கள் தபாற்கந்தோரில் மணிஓடர் மூலமாக செலுத்தப்படல் வேண்டும். புத்தகத்தின் விலை ரூபா **200**. உறுதி செய்யப்பட்ட பதிவுத்தபால் மூலம் பார்சலாக அனுப்பப்படும். தபாற்செலவு, அலுவலக செலவுகள் உட்பட மொத்தக்கட்டணம் ரூபா **230** ஆகும். முன்பாகவே மணி ஓடர்களை அனுப்புவதன் மூலம் விரைவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

செலுத்தவேண்டிய கட்டணம் : ரூபா **230**
அனுப்பவேண்டிய தபாற்கந்தோர் : **Wellawatta Post Office.**
பெறுபவரின் பெயர் : **Manager, Marconi Technical Institute.**

தபாற்கந்தோரில் தரப்பட்ட மணிஓடர் பற்றுச்சீட்டையும் தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் இணைத்து பதிவுத்தபால் மூலமாக எங்கள் முகவரிக்கு உடன் அனுப்பவும்.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd Floor, Galle Road, Wellawatta.TP: 2361362


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 12.02.1915 விண்ணில் 11.06.2005

திருமதி
**சிரோன்மணி சிவசுப்பிரமணியம்**
(முன்னாள் புகழ்பூத்த அதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி - திரு.வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி)

எமது இல்ல விளக்கான பாசதீபம் எம் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் வந்து கலந்துகொண்டு ஆறுதல் அளித்த அன்புள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலிசெலுத்தியோருக்கும் மற்றும் தந்தி, தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் பிற பல வழிகளில் உதவிகள், ஒத்தாசை புரிந்தோருக்கும் எங்களது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் பங்கேற்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

DR.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
T.P:.0602212441
0776158769
(37271-25-15-11-12)


**SPOKEN ENGLISH AND GRAMMAR**

புதிய பிரிவு
ஆரம்பம் :
04.07.2005 திங்கட்கிழமை
இடம்:
கொக்குவில் ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்
நேரம்:
காலை 7.30
வகுப்புகள்: திங்கள், புதன்
(C-43845-25-15-11-12)

**NEW ARRIVALS**

Tower Model கணனிகள்



PENTIUM I=10,000/-
PENTIUM II=20,000/-
PENTIUM III=30,000/-
(கையிருப்புக்கள் உள்ளவரை)

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட IBM, DELL கணனிகள் உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில்

STP Your Partner in IT Solution
Kantharmadam, Jaffna. T.P:0212222674
web:www.stpjaf.com

**ராஜா யாழ்ப்பாணம்**
ரஜனிகாந்த், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
**சந்திரமுகி** (ரீலீஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சுனாமி போன்ற பல இயற்கைப் பேரழிவுகளை சித்திரிக்கும்
**DAY AFTER TOMORROW**
(நாளை மறுநாள்) (தமிழ்)
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே).

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
அஜீத், தேவயானி, மணிவண்ணன் நடித்த
**காதல் கோட்டை** (ரீலீஸ்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(சி-43363)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை பாலச்சந்திரன் (போளை)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் இல.02, முடமாவடி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலச்சந்திரன் அவர்கள் 30.06.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னுத்துரை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ராசா, ராணி, றதி, றஞ்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார், குகமூர்த்தி, இராமச்சந்திரன், ராசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கவிதா, ராஜி (லண்டன்), சுபா, விஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் சசி, தயா, ராயு, உஷா (பிரான்ஸ்), பாப்பா, கஜன் (பிரான்ஸ்), குகன், தாசன், தீசன், கோபி, துர்க்கா, பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ராயு (சவுதி), குமார், சுமன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் (10A,இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.02, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி. (37248) (24-25)
தகவல்:
தாய், தகப்பன்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

## திருமதி பழனியப்பா வரதலட்சுமி



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பழனியப்பா வரதலட்சுமி அவர்கள் 01-07-2005 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பழனியப்பா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் சுமதி (Germany), Dr.சுரேஷ் (களுபோவில ஆஸ்பத்திரி), கணேஷ் (பொறியியலாளர் - Australia), வதனி (கொழும்பு), ரமேஷ் (பொறியியலாளர் C.E.B.) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாயகம் (Germany), அகிலா (கொழும்பு), மதுரா (M.Sc., Australia), சுதர்ஷன் (பொறியியலாளர் - R.D.A. கொழும்பு), Dr.யசோதா (பாணந்துறை ஆஸ்பத்திரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சபா நாயகம், செல்வநாயகம், இராமச்சந்திரன், புவனேஸ்வரி, புஷ்பவதி, வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகமணி, லீலாவதி (கனடா), புஸ்பராணி, அருட்செல்வம் (N.S.P.S. - Pettah ), பத்மினி, திருமதி பத்மநாதன் (Canada), பொன்னுத்துரை (Holland), திருமதி தனபாலசிங்கம் (Canada), திருமதி மாணிக்கம் (Canada), திருமதி பாலசிங்கம் (Canada) ஆகியோரின் மைத்துனியும் கோபிகா, கோகுலன், கௌசிகா, சங்கவி, ரிஷி, ராம், வத்ஸன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51 1/1, Collingwood place
Wellawatta.
TP:.0112361124, 0714815313
தகவல்:
Dr.சுரேஸ் (மகன்).
(37260) (24-25-15-11-12)

## திருமதி தையல்நாயகி கந்தையா



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஆசிரியர் கு.கந்தையா அவர்களின் அன்பு மனைவி தையல்நாயகி அவர்கள் 01.07.2005 வெள்ளிக்கிழமை தெஹிவளையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வண்ணார்பண்ணை டாக்டர் நடராஜா கௌரியம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் குழந்தைவேலு - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சேவையர் நவரத்தினம், எழுத்தாளர் அ.ந.கந்தசாமி ஆகியோரின் அருமைச் சகோதரியும் சந்திரசேகரன், ரஞ்சனி, காஞ்சனா, அரவிந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும் கலாஈஸ்வரன், பாலமுரளி, தர்மிணி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷன், அருண், துளசி, காருண்யா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.05, காமினி பிளேஸ், பள்ளித்தொறா றோட், தெஹிவளையிலுள்ள இல்லத்தில் இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (04.07.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தெஹிவளை கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

05, காமினி பிளேஸ்,
பள்ளித்தொறா வீதி, (சி-43836)
கவுடான, தெஹிவளை. (24-25-15-11-12)
தகவல்:
க.அரவிந்தன் (மகன்)
T.P.: 2713371

## சபாரெத்தினம் ஸ்ரீஸ்காந்தன் (ஸ்ரீ)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரெத்தினம் ஸ்ரீஸ்காந்தன் 01.07.2005 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரெத்தினம் (புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கம்), தங்கலெட்சுமியின் அன்பு மகனும், சாந்தினியின் அன்புக் கணவரும் (முன்னாள் ஆசிரியை, திருகோணமலை), விஸ்வலிங்கம், மகேஸ்வரியின் அன்பு மருமகனும், றஞ்சனாதேவி (மு.புங். ப.நோ.கூ.சங்கம்), ஸ்ரீதரன் (ஜேர்மன்), றாஜினி, ஸ்ரீ தயாளன் (மி.பொ.திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நித்தியானந்தன் (சவூதி), சத்தியதேவி (ஜேர்மனி), அமிர்தகலா, விக்கினேஸ்வரி, ஜோதீஸ்வரி (ஆசிரியை), ரஞ்சனி, கௌரிபாலன், நவநீதன், பிரபாகரன், சிந்துஜா ஆகியோரின் மைத்துனரும், நிரோஜன், நிதர்சனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாருஜன், சிவருஜன் சதுர்சிகாவின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/3, வைமன் றோட்,
யாழ்ப்பாணம். (37282)
077 3223380 (24-25-15-11-12)
தகவல்:
ச.ஸ்ரீ தயாளன்
(சகோதரன்)

# இராணுவ மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைக்கப்பட்டிருக்கின்றன.

தொழில் முடிந்து இந்தக் கம்பிவேலி இடப்பட்ட சோதனைச் சாவடி ஊடாகத் திரும்பிக்கொண்டிருந்த மீனவ இளைஞர் ஒருவரே மின்சாரத்தினால் தாக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்திருக்கிறார்.

மின்தாக்கி உயிரிழந்தவர் குருநகர் புதிய பூங்கா வீதியைச் சேர்ந்த அன்ரன் அமலதாஸ் ராஜ்குமார் (வயது 21) என அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

வெள்ளிக்கிழமை மாலை வேளை சக தொழிலாளர்களுடன் கடலுக்குச் சென்ற இவர், அன்று நள்ளிரவு தாண்டி நேற்று அதிகாலை 1 மணியளவில் கரைதிரும்பியுள்ளார்.

கடல் நீரில் தெப்பமாக நனைந்த ஆடைகளுடன் தனது தொழில் உபகரணங்களைச் சுமந்தவாறு படையினரின் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிவேலிப் பாதை ஊடாகச் சோதனை நிலையப் பகுதிக்கு வந்துகொண்டிருந்த சமயமே இவர் பாதுகாப்பு வேலியில் சிக்கி மின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகிறது.

இந்த மீனவர் தம்மோடு எடுத்துவந்த உபகரணங்களில் ஒன்று மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த கம்பிவேலியுடன் முட்டிக் கொண்டதால் அவரது உடலில் மின்சாரம் பாய்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மின்தாக்கி, உடல் கருகிய நிலையில் இறந்துகிடந்த இவரது சடலத்தை சகல தொழிலாளர்களும் உறவினர்களும் மீட்டெடுத்து நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றன. மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் சென்று பார்த்தார். அப்பகுதியில் மீனவர்களைச் சோதனையிடுவதற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளையும் அவர் பார்வையிட்டார். இறந்தவருடன் கூட இருந்த சக தொழிலாளர்கள், குருநகர்ப் பிரதேச படைமுகாம் பொறுப்பதிகாரி மற்றும் படையினரின் வாக்கு மூலங்கள் பதிவுசெய்யப்பட்டன.

தொழில்புரிவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள், கெடுபிடிகள், பாஸ் நடைமுறை போன்ற நெருக்குவாரங்கள் பற்றி மீனவர்கள் அப்போது நீதிவானிடம் முறையிட்டனர்.

மீனவர்களைச் சோதனையிடும் சோதனை நிலையப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கம்பிவேலிகளுக்கு மின் பாய்ச்சப்பட்டிருக்கவில்லை என்றும் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த மின் இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்கின் காரணமாகவே கம்பிவேலிகளுக்கு மின்சாரம் கடத்தப்பட்டிருக்கிறது எனவும் -

அதன் காரணமாகவே இந்த விபரீதச் சம்பவம் ஏற்பட்டிருப்பதாகவும் விசாரணைகளின்போது படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ளஜுஷ்வி லுநு துஷ்யிஆ;றுா

இதேவேளை -

தொழிலுக்குச் சென்று திரும்பிய சக மீனவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததால் ஆத்திரமடைந்த மீனவர்கள் சிலர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அங்கிருந்த இராணுவப் பாதுகாப்பு வேலிகளைப் பிடுங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் முழுவதும் பதற்றமும் பரபரப்புமான நிலைமை காணப்பட்டது.

இதற்கிடையில் -

மீனவர் உயிரிழக்கக் காரணமான இராணுவப் பாதுகாப்பு வேலிகளை அப்புறப்படுத்துமாறு படையினரிடம் கோருவதற்கு குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாளை குருநகர் சோதனைச்சாவடிப் பகுதியில் பெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மறியல் போராட்டம் மற்றும் அதன் பின்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முடிவு எடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் ம.பிறேமன் தலைமையில் நடைபெற்றது.

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நாளை நடத்தப்படவுள்ள மறியல்போராட்டத்துக்கு ஆதரவாக குருநகர்ப் பகுதியில் கடைகள் மற்றும் சந்தைகளை மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுப்பது எனவும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இன்றும் நாளையும் குருநகர்ப் பகுதி கடற்றொழிலாளர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51-7-190)

# கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கரும்புலிகளின் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்த ஊர்திப் பவனி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாகவும் செல்ல இருப்பது பற்றி விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இந்தப் பவனியுடன் சுமார் 40 போராளிகளும் உடன்செல்வர் என்றும் - அதற்கான வழித்துணை ஏற்பாடுகளைச் செய்யுமாறு புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கேட்டிருக்கின்றனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

# நாவலர் பாடசாலை ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜுலை3

சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையின் ஆண்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு விழாவில் நூல் வெளியீடும், சிறுவர் பூங்கா மற்றும் தண்ணீர் தாங்கி என்பவற்றின் திறப்பு விழாவும் இடம்பெறும்.

பாடசாலைத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக யாழ். பல்லைக்கழக கல்வியற்துறைப் பேராசிரியர் சபா ஜெயராசாவும் சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்டத் தலைவர் சி.சிவனேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (த-202)

# சுண்டிக்குழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்படாததை அடுத்து அயலவர்கள் அப்பகுதி கிராம அலுவலருக்கு தகவல் கொடுத்தனர் என்றும் -

கிராம அலுவலர் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலீஸார் நேற்றுமாலை அந்த உணவு விடுதிக்குச் சென்று பூட்டப்பட்டிருந்த கதவை உடைத்து உள் நுழைந்து பார்த்த போது அங்கு உரிமையாளரின் சடலம் காணப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. தொலைபேசிக்கு அருகே நிலத்தில் முகம்குப்புற சடலம் கிடக்கக் காணப்பட்டது. சடலத்தை எறும்புகள் மொய்த்திருந்தன. யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்றுமாலை அங்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## ஜீ.ரி.இசற் நிறுவன விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜுலை3

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் விருது வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த வைபவத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கௌரவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)


CATWAS.COM CATWAS.COM CATWAS.COM

பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Diploma Courses** | **Certificate Courses**

Diploma in Microsoft Office 1750/=
Diploma in Desktop Publishing 2000/=
Diploma in Hardware 1500/=
Diploma inVideo Mixing 2500/=
Diploma inWeb Page 3000/=

Word, Access, Windows, Studio, Premiere, Cool 3D, Type Setting, Excel, Power Point, CorelDRW, Photo Shop, Page Maker, Flash

Ms Offics பாட நெறியில் இணைவோருக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.
Diploma Course இல் இணைவோருக்கு Photo Express Kids Program கற்கை நெறி கற்பிக்கப்படும். (e-43684)(30-11-12-15

CATWAS.COM
Computer Academy
No. 26, Somasundaram Avenue, Chundukuli, Jaffna.
Tel.: 021 222 3805 E-Mail Catwasomi@Sltnet.lk

CATWAS.COM CATWAS.COM CATWAS.COM


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருபாமணி அஸ்பரி

அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கிருபாமணி அஸ்பரி அவர்கள் நேற்று (02.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் றொபேட் கிருபைநாயகம் அஸ்பரியின் அன்பு மனைவியும் விமலேந்திரன். ராஜேந்திரன், மகேந்திரன், பாலேந்திரன், ஜலி இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் லின்ரா, இன்பம், ரீற்றர், ராஜினி, சோமசேகரம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சேர்ச் ஒழுங்கை,*
*அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.* (37285)(30-11-15-12)

தகவல்:
பாலு அஸ்பரி (மகன்).

## முத்தன் கிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற ரயில்வே சேவையாளர்)



கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த முத்தன கிருஷ்ணன் அவர்கள் நேற்று (02.07.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாகீஸ்வரி வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (37286)(30-11-15-12)

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


# பதவி வெற்றிடம்

லண்டனில் பல கிளைகளைக் கொண்ட MAK COST CUTTER நிறுவனத்துக்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற மனிதவள ஆளணி முகாமையாளர் பதவிக்கு (Human Resource Management) விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் LONDON ENGLISH COLLEGE இல.105, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பத்தினை 04.07.2005 இற்கு முன் நேரில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ வயதெல்லை (30-50)
★ கல்வித் தகைமை:
I. முகாமைத்துவ அல்லது வணிகத்துறைப் பட்டம் (B.B.A. or B.Com.) அத்துடன் மேற்காட்டிய துறையில் 2 வருட முன் அனுபவம் அல்லது
II. ஏதாவதொரு பல்கலைக்கழகப் பட்டத்துடன் மேற்காட்டிய துறையில் 5 வருட முன் அனுபவம் அல்லது
III. G.C.E. A/L வணிகத்துறையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்காட்டிய துறையில் 8 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
★ பிறதகைமைகள்: Ms Office ஆங்கிலம் பேச, எழுத தெரிந்திருத்தல் வேண்டும.

நிர்வாகி

BRIGHTMAN பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்.
3 மாத காலத்தில் பேச, எழுத, வாசிக்க
சிங்களம்
By. லீலாக்கிருஸ்ணன்
இன்று ஆரம்பம்: 03.07.2005 3.00 sun. p.m.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By. NIMALAN
இன்று ஆரம்பம்: 03.07.2005 3.00 sun. 4 p.m.

PC Accessories Peripherals

TV Card, Woofers,2.1,4.1,5.1, UPS, Pen drives, Printers, Combo/DVD Drives, Digital Cameras, Scanners
Network cards, Hub/Switch, Memory cards, Fax modems, Capture cards, wireless keyboard, wireless mouse, Home theater sys.
Head phones, Cartridges, Ribbons, Toners, Refills, Photo quality papers, USB hubs, Power supply

VISIT FOR SPECIAL PRICES
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536





ஏசியன் தளபாட நிலையம்
ஆர்ப்பிக்கோ, தம்ரோ, நில்கமல் கதிரைகள், மெத்தைகள் மற்றும் அலுவலகத் தேவைக்குரிய அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
133, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம். T.P: 0777 536108
கிச்சின் கபேட் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும் (பன்ரிக் கபேட்)




EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
03.07.2005

# ஜூலை 2005
## கொதிக்கிறது தேசம்!

அரசியல் குழப்பத்துடனும், ஸ்திரமற்ற நிலைமையுடனும் போர்ப்பீதியுடனும் நாடு மீண்டும் ஒரு ஜூலை மாதத்தை எதிர்கொண்டு இருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் - இரு தசாப்த காலப் பகுதியில் - ஒவ்வொரு ஆண்டிலும் இந்த ஜூலை மாதங்கள் கொந்தளிப்பு மிக்கவையாகவே வந்து போயிருக்கின்றன. 1983இல் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மாபெரும் இனப் படுகொலை நிகழ்ந்ததும் ஒரு ஜூலை மாதத்தில்தான். 'கறுப்பு ஜூலை' என வர்ணிக்கப்படும் அந்த ஜூலை முதல் தொடர்ந்து வந்த ஈழப்போர்க் காலகட்டங்களில் எல்லாம் ஜூலை மாதங்களில் பல திருப்பு முனையான சம்பவங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

தமிழர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகள், ஈழப்போர்களில் விடுதலைப் புலிகள் நடத்திய வியத்தகு தாக்குதல்கள், முதலாவது கரும்புலித்தாக்குதல் என்று ஜூலை மாதங்களில் நிகழ்ந்தவை ஏராளம்.

இவை அனைத்துமே ஈழத் தமிழர்களின் வரலாற்றில் பதிவாகி விட்ட சரித்திரச் சம்பவங்கள் .

இப்போதும் அதே போன்ற ஒரு வரலாற்றுத் திருப்புமுனைக்கு இந்த ஜூலை மாதம் களம் அமைத்து விடுமோ என்ற எதிர்பார்ப்பு நாட்டு மக்கள் அனைவரிடமும் தொற்றிக்கொண்டிருக்கிறது.

நாட்டில் போரைத் தற்காலிகமாக முடிவுக்குக்கொண்டுவந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட புலிகள் தரப்பு, அந்த உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பாக நிலவி வந்த நீண்ட கால இழுபறிக்குவெட்டு ஒன்று துண்டு இரண்டாக முடிவுகட்டத் தீர்மானித்து விட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் முக்கிய சில விடயங்களைக் குறிப்பிட்டு விடுலைப் புலிகளின் தலைமை அரசுக்கு இரண்டு வார கால அவகாசத்தைக் கொடுத்திருக்கின்றது.

நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் செய்தியோடு ஜூலை மாதம் பிறந்திருக்கின்றது.

புலிகளின் இந்த அவகாசம் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதிவரையாக இருக்கும். இந்தக் காலப்பகுதி அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்புக்கும், சிங்கள ஆட்சித் தலைமைக்கும் கடும் சோதனையான காலமாக இருக்கப்போகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பாதிப்புகளுக்கான மீள் கட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மிகுந்த இணக்கத்துடனும் நிதானப்போக்குடனும் நடந்து கொண்ட விடுதலைப் புலிகள் அந்தக் கட்டமைப்புக்கான உடன்பாடு கைச்சாத்தாகிய கையோடு இப்படி ஒரு குண்டைப்போடுவார்கள் என்று அரசுத்தலைமை நம்பியிருக்காது .

பெரும் அரசியல் இழுபறிகள், பேரினவாதப் புயல்களைக் கடந்து - தன் அரசின் பெரும்பான்மையைக் கூட இழந்து - பொதுக்கட்டமைப்பை ஒப்பேற்றிய ஜனாதிபதி குமாரதுங்கவின் ஆட்சித்தலைமை மீது புலிகளின் இந்த அவகாச அறிவிப்பு பெரும் இடியாக இறங்கியிருக்கின்றது.

சர்வதேச நிதி உதவிகள் மற்றும் உதவும் நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் என்பவற்றை ஒரே நோக்காகக் கொண்டு பொதுக்கட்டமைப்பை உருவாக்க புலிகளுடன் இணங்கிக் கொண்ட அரசு, மறுபக்கத்தில் புலிகளுக்கு எதிரான 'நிழல் யுத்தத்தில்' தீவிர கவனம் செலுத்தி வந்தது.

இப்போது தங்கள் பொறுமையின் எல்லையில் இருக்கும் புலிகள் இனியும் பொறுமைகாக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டனர்.

### கிழக்கு நிழல் யுத்தத்தின் விளைவு இது!

வெளிப்படையாகப் பார்த்தால் போர் ஓய்ந்துள்ளது போலத் தென்பட்டாலும் தென்தமிழீழப் பிரதேசங்களில் யுத்தம் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

அடையாளம் காட்டாத பல அணிகளை அங்கு செயற்பட வைத்திருக்கும் அரசுப் படைகள் புலிகளுக்கு எதிராக கட்புலனாகாத போர் ஒன்றை நீண்டகாலமாகவே நடத்தி வருகின்றன. இந்த யுத்தம் இப்போது தென்தமிழீழப் பகுதிகள் மீதான புலிகளின் கட்டுப்பாட்டைத் துண்டித்துவிடும் அளவுக்கு முனைப்புப் பெற்றிருக்கின்றது.

*(இது பற்றிய விரிவான கட்டுரை இரண்டாம் பக்கத்தில்)*

வட தமிழீழத்துக்கும், தென் தமிழீழத்துக்கும் இடையிலான புலிகளின் தொடர்புகளைத் துண்டித்துவிட எடுக்கப்பட்ட பல முயற்சிகள் அம்பலமாகிய பிறகு புலிகளின் தலைமை இது விடயத்தில் சீற்றமடைந்திருக்கிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், அதன் ஊடாக அரசுத்தரப்புக்கும் எத்தனையோ தடவை சொல்லிச் சலித்த பிறகுதான் புலிகள் தீர்க்கமான முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் தமது போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். அதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று அறிவித்திருக்கும் புலிகள் அவற்றை நிறைவேற்றுவதற்காகவே இரண்டு வார கால அவகாசத்தை அரசுத் தரப்புக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஒருதரப்பு மறுதரப்பின் கட்டுபாட்டுப் பகுதிகளுக்கூடாகப் போக்குவரத்து செய்வது தொடர்பாகப் புரிந்துணர்வு உடன் படிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் 'நடமாட்டத்திற்கான சுதந்திரம்' என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு தெளிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.

### நடமாட்டத்திற்கான சுதந்திரம்

*1.10 ஆயுதம் தரிக்காத அரச படையினர் ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து அறுபது நாள்களின் பின் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையே யாழ் - கண்டி வீதியைப் பயன்படுத்திக் கட்டுப்பாடின்றிப் பயணம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். இது பற்றிய நடைமுறைகள் சிறிலங்கா கண்காணிப்புக்குழுவின் (SLMM) உதவியுடன் இரு தரப்பினராலும் தயாரிக்கப்படவேண்டும்.*

*1.11 ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து சண்டையில் ஈடுபடுபவர்களைத் தத்தமது பிரதேசத் தளபதியின் பரிந்துரையுடன் ஆயுதமும் சீருடையும் தரிக்காது மற்றைய தரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் வாழ்கின்ற தமது குடும்பத்திரையும் நண்பர்களையும் பார்க்கச் செல்ல அனுமதிப்பதென இரு தரப்பும் இணங்குகின்றன. அத்தகைய பயணங்கள் ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மிகக்குறுகிய பாதையால் செல்வதற்கான பயண நேரத்தை விலக்கி ஆறு நாள்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். இந்நோக்கத்திற்காக யாழ்- கண்டி வீதியைப் பயன்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுசரணையாக இருக்கவேண்டும். இரு தரப்பினரும் தத்தமது குறிப்பிட்ட இராணுவப் பிரதேசங்களுக்குள் மற்றைய தரப்பு நுழைவதற்கான அனுமதியை மறுப்பதற்கு உரித்துடையவராவர்.*

*1.12 இரண்டு மாதக் கட்டுப்பாட்டிற்கும் அப்பால், தங்கள் நெருங்கிய குடும்ப உறவுகளின் (குடும்பத் துணைகள், பிள்ளைகள், பேரன், பேத்தி, பெற்றோர்கள், சகோதரர்கள்) திருமண மற்றும் மரணச்சடங்குகளில் சண்டையில் ஈடுபடுபவர்கள் ஆயுதமும் சீருடையும் தரிக்காது ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து கலந்துகொள்ள இருதரப்பினரும் இணங்குகிறார்கள். குறிப்பிட்ட இராணுவப் பிரதேசங்களுக்குள் மற்றைய தரப்பு நுழைவதற்கான அனுமதியை மறுக்கும் உரிமை இங்கும் பொருந்தும்.*

*1.13 ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 30 நாள்களின் பின்னர் வடக்கிலும் -கிழக்கிலும் அரசாங்கத்தின் (GOSL) கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் அரசியல் பணிக்காக ஐம்பது ஆயுதம் தரிக்கா விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் சுந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 60 நாள்களின் பின்னர் இன்னொரு நூறு ஆயுதம் தரிக்காத விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் சுந்திரமாக நடமாட அனுமதிக்கப் படுவர். ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 90நாள்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்து உறுப்பினர்களும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப் படுவர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்களைக் கொண்டு செல்ல வேண்டும் . குறிப்பிட்ட இராணுவப் பிரதேசங்களுக்குள் இவர்கள் நுழைவதற்கான அனுமதியை மறுக்கும் உரிமை சிறிலங்கா அரசிற்கு உண்டு.*

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் சுதந்திரமான நடமாட்டம் பற்றி உடன்படிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கும் விடயங்களை அரசுத்தரப்பு நடைமுறைப்படுத்தாதன் விளைவே இன்று உருவாகி இருக்கும் அச்சுறுத்தலான சூழ்நிலைக்குக் காரணம் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

### தவறான மதிப்பீடு

விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் இந்த இரு வார கால அவகாசத்தை தென்னிலங்கையின் பௌத்த பேரினவாத அரசியல்வாதிகள் வேறு விதமாகத் திரிபுபடுத்தி மக்களை குழப்பத்தில் ஆழ்த்து வதில் கண்ணாக இருக்கின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து ஒரு தரப்பு விலகிக் கொள்ளுதல் தொடர்பாக உடன்படிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

*'இருதரப்பினரில் எவரேனும் ஒரு தரப்பினர் ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக நோர்வே அரசுக்குத் தெரியப்படுத்தும் வரை இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும். ஒப்பந்தம் முடிவுக்கு வருகின்ற தினத்துக்கு 14 தினங்கள் முன்னதாக இந்த அறிவிப்பு வழங்கப்படவேண்டும்'*

- இவ்வாறு உடன்படிக்கை வாசகம் கூறுகின்றது.

தற்போது புலிகள் விதித்திருக்கும் 14 நாள்கள் அவகாசம் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவதற்கானதே தவிர அந்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதற்கானது என்று அர்த்தப்படுத்திக்கொள்ளக் கூடாது.

போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகுவதற்கான 14 நாள்கள் முன்னறிவிப்பு இது என்ற சாரப்பட பரப்பப்படும் கட்டுக்கதைகள் தென்னிலங்கை மக்களைக் குழப்பத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே சுயலாப அரசியல் நலன்களுக்காக பிளவுபட்டுள்ள தென்னிலங்கை அரசியல் போக்கு, இப்போது மேலும் தீவிரமடைவதற்கு இந்த நிலைமை வாய்ப்பளித்துள்ளது.

'புலிகள் போரில் குதித்து விட்டார்கள்' என்று பேரினவாதத்தின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி விட்டதால் ஒருவிதமான கொதி நிலைக்குள் நாடு தள்ளப்பட்டி ருக்கிறது. இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பது ஜனாதிபதி குமாரதுங்க அரசின் கைகளிலேயே உள்ளது.

— குமரன்

கிழக்கில் படையினரும், புலனாய்வுப் பிரிவினரும் தமிழ்த் துணைப் படைகளின் உதவியுடன் மேற்கொண்டு வந்த நிழல் யுத்தம் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதால், அதன் இலக்கை படையினர் எட்டமுடியாமற் போயிற்று. இதனால் கிழக்கில் நிலைமை மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உளவியல் ரீதியான யுத்தம் ஒன்றை ஆரம்பித்து, அதன் மூலம் வடக்கு - கிழக்கைத் துண்டாடப் பெரும் சதி நடவடிக்கை ஒன்று உயர்மட்டத்தில் வகுக்கப்பட்டு அது படைத்தரப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் துணைப் படைகளின் உதவியுடன் அரங்கேற்றப்பட்டு வருவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

கிழக்கில் பொது மக்களுக்கான பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய யுக்திகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள், பொறுப்பாளர்கள் மாதாமாதம் வன்னிக்கு வந்து புலிகளின் தலைமையுடன் விரிவாக



# கிழக்கைத் தனிமைப்படுத்த திரைமறைவில் வியூகம்.....!

ஆராய்வது வழக்கம். அப்போது தமது குடும்பங்கள் மற்றும் உறவினர்களையும் சந்தித்துக் கொள்வர். இந்த வகையில் தளபதிகள், பொறுப்பாளர் தங்கள் தலைமையுடன் ஆராய்ந்து செயற்படுவதில் கவனம் செலுத்தாததால்தான் கடந்த வருடம் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கருணாவின் துரோகத்தனமான நடவடிக்கைகள் தலைதூக்கி பெரும் குழப்பமான நிலை அங்கு உருவாகியது. கடைசியில் அவர் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

அத்தகைய நிலை மீண்டும் உருவாகாமல் இருப்பதற்காக தளபதிகள், பொறுப்பாளர்கள் தலைமையுடன் மாதாந்தம் சந்திப்பது கட்டாயமாக்கப்பட்டது. இதன்படி தளபதிகள், பொறுப்பாளர்கள் வன்னி வந்து தலைமையுடன் ஆராய்ந்து எதிர்காலத் திட்டங்களை வகுத்து வருகின்றனர்.

இவ்வாறு கிழக்குத் தளபதிகள், பொறுப்பாளர்கள் வன்னி வந்து தலைமையுடன் கலந்தாலோசனை நடத்துவதைத் துண்டிப்பதற்கும் , அவர்கள் தங்கள் உறவுகளுடன் இணைவதைத் தடுப்பதற்கும் புதிய வியூகம் ஒன்றை அரசின் உயர்மட்ட அனுசரனையோடும் படைத்தரப்பு மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள், துணைப் படை உறுப்பினர்கள் இணைந்து வகுத்திருப்பது தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வன்னிக்கு வந்த திருகோணமலையின் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மட்டு - அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பாணு மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் தத்தமது பிரதேசத்துக்குத் திரும்புவதற்கு ஹெலி வசதி வழங்காமல் தடுத்தது அரசுத் தரப்பு.

யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம். போராளிகளின் பாதுகாப்பான - சுதந்திரமான - போக்குவரத்துக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்யவேண்டும். படைத்தரப்புடன் இணைந்து அவர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழித்துணை வழங்கவேண்டும்.

தரை மூலமாகவோ, கடல்மூலமாகவோ, வான் மூலமாகவோ இந்த வழித்துணையை வழங்கவேண்டும். என்பது உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயம்.

வன்னியின் இரணைமடுவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் விமானத்தளத்தினால் அப்பகுதியின் மேல் பறக்கும் அரச ஹெலிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், தலைநகரில் புலனாய்வுத்துறை அதிகாரிகளை விடுதலைப் புலிகள் இலக்கு வைத்து கொலைசெய்கிறார்கள் என்றும் இரு காரணங்களைத் தெரிவித்து, ஹெலி வசதி வழங்குவதை நிறுத்தியது அரசு. இதனை அரசுத் தலைமை கண்காணிப்புக் குழு மூலம் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தது.

போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு அரசு ஏற்பாடு செய்யாவிட்டால் தமது தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றைப் பயன்படுத்தி போராளிகளின் சுதந்திரமான - பாதுகாப்பான - போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டி வரும் என்று விடுதலைப் புலிகள் அரசுக்கு எச்சரிக்கைச் செய்தி ஒன்றை கண்காணிப்புக் குழு ஊடாக அனுப்பினர். புலிகளின் இந்த எச்சரிக்கையில் அடங்கியுள்ள பாரதூரமான விடயங்களை உணர்ந்த அரசுத்தரப்பு இறங்கி வந்து, வழமைபோல ஹெலி வசதியை வழங்க இணங்கியது. அதன் படி கடந்த வாரங்களில் வன்னியில் தங்கியிருந்த கேணல் சொர்ணம், கேணல் பாணு, அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் தமது

பிரதேசத்துக்கு ஹெலிமூலம் திரும்பினர். எஞ்சி நின்ற 40இற்கு மேற்புட்ட போராளிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யுத்த நிறுத்தக் காண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் பஸ் ஒன்றில் கிழக்கு நோக்கித் தரைவழியாகப் புறப்பட்டனர். ஆனால், வழியில் பெரும் ஆபத்து காத்திருந்தது.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் , வெலிகந்தவில் இருந்து செங்கலடி கறுப்புப் பாலம் வரையான ஆபத்தான பிரதேசத்தில் வைத்து - அதுவும் இரண்டு முக்கிய இராணுவ நிலைகளுக்கு இடையில் வைத்து - அந்த பஸ் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கூட இந்த இடத்தில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலிலேயே கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் பிரதேசம் கருணா அணியைச் சேர்ந்த-துணைப் படையாக நூறுக்கும் குறைந்தவர்களுடன் செயற்படும் ஓர்அணியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. இந்தப் பகுதியில் முகாம்கள் அமைத்து, ஆயுத தளபாடங்களுடன் - படையினர் அனுசரணையுடன் அந்த அணி இயங்குகின்றது.

அந்த அணியை தமது செயற்பாடுகளுக்குப் பயன் படுத்துகின்றது படைத்தரப்பும், புலனாய்வுப் பிரிவும். படைநிலைகளுக்கு இடையே முகாம் அமைத்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாட்டைப் படைத் தரப்புடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது அந்த அணி.

தரைவழியாகச் செல்லும் புலிகளின் பொறுப்பாளர், தளபதிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி விட்டு இந்த அணியின் மீது பழியைப் போடுவதே படைத் தரப்பின் உள்ளார்ந்த திட்டமாகும்.

கிழக்குத் தலைமைக்கு எதிராகப் பெரும் காய்நகர்த்தல் ஒன்றை அரசும் படைகளும் கூட்டாக மேற்கொண்டு வருவதையே இது காட்டுகின்றது.

கிழக்கில் செயற்பட்ட கருணாவின் தலைமையையும் வன்னித் தலைமையையும் பிரித்து, கிழக்கையும் வடக்கையும் துண்டாட எடுக்கப்பட்ட முயற்சியில் கிட்டிய வெற்றியின் பின்னணியில் மீண்டும் ஒரு சதித்திட்டத்தை அரங்கேற்ற படைத்தரப்பும், புலனாய்வுப் பிரிவும் தயாராகியுள்ளன.

கிழக்கில் உள்ள தளபதிகள், பொறுப்பாளர்கள் மாதாமாதம் வன்னி சென்று தலைமையுடன் கலந்துரையாடுவதைத் தடுக்கும் நோக்கில் வகுக்கப்பட்டுள்ள வியூகத்தின் ஓர் அங்கமே கடந்த ஞாயிறு நடந்த கிளைமோர் தாக்குதல். இப்படியான தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு, வன்னிக்கான அவர்களின் பயணங்களைத் தடைசெய்து, வடக்கையும் கிழக்கையும் துண்டாடி புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பையும் இராணுவக் கட்டமைப்பையும் உடைப்பதற்கு அரசுத் தலைமை முடிவு செய்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

கடந்த கால வரலாற்றை எடுத்து உற்று நோக்கும் போது, பொருளாதாரத்தடை, போராளிகள் மீதான தாக்குதல்கள் என்று பல்வேறு விதமான நெருக்குவாரங் களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் உளவியல் யுத்தம் ஒன்றை அரசுகள் நடத்தின. அவற்றுக்கு எல்லாம் கிறங்காமல் தலை நிமிர்ந்து நிற்கின் றது தமிழ்த்தேசியம்.

வீறுகொண்டு நிற்கும் தமிழ்த்தேசியத்தை வீழ விடமாட்டோம் என்று முனைப்புடன் எழுந்து நிற்கின்றனர் குடாநாட்டு மக்கள்.

தமிழ்த் தேசியத்தின்பால் விழிப்படைந்துள்ள மக்கள், பல்வேறு போராட்டங்களையும் நடத்தத் தயாராகி விட்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள போதிலும், அதன் கீழான இயல்பு வாழ்க்கை இன்னமும் கிட்டவில்லையே என்ற கொதிப்புடன் இடம் பெயர்ந்த மக்களும் தொடர்ச்சியான போராட்டங்களுக்குத் தயாராகி விட்டனர்.

கொடிகாமம், தீவகம், வடமராட்சி பிரதேசங்களில் கடந்த வாரம் ஆர்த்தெழுந்த தமிழ்த் தேசிய உணர்வு பல்வேறு வடிவங்களில் பரவலாக வெடிக்கப் போகின்றது.

வலி - வடக்கில் இருந்து 15வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

வீதி மறியல், உண்ணாவிரதம் என ஆரம்பித்து பலாலி படைத்தளத்தின் நுழைவாயில்களில் சாகும் வரையான போராட்டத்தை நடத்தவும் முஸ்தீபு செய்கின்றனர். 'எமது நிலத்துக்கு எம்மை அனுமதி, இல்லையேல் எமது மண்ணிலேயே மரணிக்கின்றோம்'என்ற தொனிப்பொருளுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் போராட்டம் அரசுத்தலைமையின் கண்ணை அல்லது சர்வதேசத்தின் கண்ணைத் திறக்குமா என்பதே அந்த மக்களின் கேள்வி.

சாத்வீக வழியிலான போராட்டங்களை இலங்கை அரசு கவனத்தில் கொள்ளாவிட்டால் மீண்டும் ஒரு யுத்தத்துக்குள் நாடு செல்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

கிழக்கில் போராளிகள் மீது நடத்தும் உளவியல் போருக்கும் வடக்கில் மக்கள் மீது திணிக்கும் இராணுவ நெருக்குவாரங்களுக்கும் விரைவில் பதில் கிட்டும்.

தெற்குத் தலைமைகள் சமாதான முயற்சிகளைக் கைவிட்டு தங்கள் அரசியல் போட்டிகளில் ஈடுபட்டு தத்தமது அரசியல் நகர்வுகளில் கண்ணும் கருத்துமாக இருக்கையில் -

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் யுத்தம் நிறுத்தப்பட்டும் இயல்பு வாழ்வு கிட்டாதபோது இன்னமும் ஏன் உடன்படிக்கையைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்கத் தொடங்கி விட்டார்கள் மக்கள். இதற்கு சரியான பதிலை சரியான நேரத்தில் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் விடுதலைப் புலி களின் தலைமைக்கு வந்துள்ளது.

துகா

# யாழ். பொதுநூலகம் பற்றிய கனவு பலிதமாகுமா?

தென்னாசியாவின் சிறப்பு மிகு நூலகமாகவும், ஈழத் தமிழ்களின் பண்பாட்டுக் கருவூலமாகவும் விளங்கியது யாழ்ப்பாணப் பொதுநூலகம். தமிழர் வாழ்வை, வளத்தை, வரலாற்றை வெளிக்காட்டும் ஆவண ஆதாரங்கள் பல்லாயிரக்கணக்கில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த அந்த நூலகம் 1981 ஆனி மாதம் முதலாம் நாள் சிங்கள இனவெறிக் தாக்குதலுக்கு உள்ளானது. அங்கிருந்த 97ஆயிரம் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஏட்டுச் சுவடிகள் யாவும் தீயினால் எரிந்து அழிந்தன. இரு தசாப்தங்கள் கழித்தே அதன் பௌதிகக் கட்டுமானங்களைச் செய்ய முடிந்துள்ளது. எனினும் ஓரளவுக்காவது முன்னர் இருந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கு இன்னும் காலமும் வளங்களும் வசதிகளும் தேவை என்பது உணரப்படுகிறது.

இருந்த போதிலும் பல போதாமைகளும் அதிருப்திகளும் யாழ்.பொதுநூலகம் தொடர்பில் அதன் பயன்பாட்டாளர்களால் முன்வைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் அங்கத்துவம் பெற்று நூல்கள் இரவல் பெறுவதற்கு சற்று அதிகமாகவே பணஞ் செலவு செய்ய வேண்டும். இந்த நடைமுறை மாநகரசபையின் ஆணைக்குட்பட்ட ஏனைய நூலகங்களிலோ, ஏனைய உள்ளூராட்சி அமைப்புகளின் நூலகங்களிலோ இல்லை. நூலகத்தில் இரவல் வழங்கும் பகுதியின் அங்கத்தவராகக் சேரும் எவரும் 675ரூபா செலவு செய்தே அங்கத்துவத்தைப் பெற முடியும். இதில் விண்ணப்பப்படிவம் 25 ரூபா. சாதாரணமாக கடைகளில் 2 ரூபாவிற்கு விற்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் போன்றே இப்படிவங்களும் உள்ள போதும், பெறுமதி மட்டுமே அதிகமாக உள்ளது.

வருடாந்த சந்தா 300 ரூபா. மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணம் 300 ரூபா. வாசகர் அட்டை 50 ரூபா என்ற ரீதியில் அங்கத்துவம் பெறுவதற்கான கொடுப்பனவு இடம் பெறும். இன்றுள்ள புத்தக விலைகளோடு ஒப்பிடுமிடத்து இத்தொகை பெரியதல்ல என வாதிடலாம். ஆனால், புத்தகப் பண்பாட்டினுள் வாசகர்களை இழுப்பதில் இந்த நடைமுறை பெருந்தடையாக உள்ளது. அதனால்தான் இரவல் வழங்கும் பகுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கை 350 இற்கு முன் பின்னாகவே அமைந்துள்ளது.

50 ரூபா செலுத்திச் சாதாரண வாசகராக இணைந்து கொள்ளுகின்ற

## யாரோடு நோவோம்...?

ஒருவர் மாலை 7மணி வரை அங்கு பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் பார்வையிட முடியும். ஆனால், பல சந்தர்ப்பங்களில் அவ்வாறு நேர்வதில்லை. திடீரென அரை மணித்தியாலமோ அதற்கும் குறைவான நேரமோ இருக்கும் போதே ஜன்னல் படாரெனக் அடித்து மூடப்படும். மின் விளக்கு அணைக்கப்படும். 'போ வெளியே....' என்று ஏசுவதை விட இச் செயல் வாசகரை அதிகம் அவமதிக்கும் ஒன்றென்பதை நூலக ஊழியர்கள் சிலர் உணர்வதில்லை.

வாசகன் காற்றோட்டமாக, வெளிச்சமாக, அமைதியாக உள்ள இடத்தில் இருந்து வாசிக்கவே விரும்புவான். யன்னல் திறக்கப்படாமை, மின் விசிறிகள் இயக்கப்படாமை, ஊழியர்களின் உரையாடல்கள் போன்றன வாசகரை அதிருப்திக்கு உள்ளாக்கும் சங்கதிகளாகும்.

வாசகன் அல்லது அங்கத்தவன் உள்நுழையும் போது வாசலில் சிறியதொரு இடைவெளியை விட்டு, முழுவதுமாக நந்திபோல மறைத்தபடி ஒரு பேருந்து நிற்கிறது. அது நடமாடும். நூலக சேவையை வழங்குவதாக ஆங்கிலத்தில் மட்டும் பெயரெழுதப்பட்ட பேருந்து. அது நூலக வாயிலில் இடைஞ்சலை ஏற்படுத்துவது மட்டுமன்றி, வாயிலின் வனப்பையும் பாதிக்கின்றது. அதைக் கொட்டகை அமைத்து வேறொரு இடத்தில் நிறுத்துதே பொருத்தமானது.

பாதணிகள் மற்றும் பொருள்களை வைத்துச்செல்வதிலும் பிரச்சினைகள் உள்ளன. அதிக எண்ணிகையில் பாதுகாப்புப் பெட்டிகளை அமைத்து, முறையாக அவற்றில் பொருள்களை வைக்கும் போது தொலைந்து போகும் நிலைமைகள் ஏற்படாது. தமது பொருள்களின் பாதுகாப்புத் தொடர்பான வாசகரின் மன அங்கலாய்ப்புத் தீரும். இவற்றை விட செருப்பை அணிந்து செல்லும் நடைமுறையைக் கொண்டு வருவதும் பாதகமானதல்ல.

கணனித் தொகுதிக்கு தூசுகளால் பிரச்சினை ஏற்படலாம் என்றோ தூய்மைப் பிரச்சினை கருதியோ இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், கணனி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றுக்குள் செருப்புடன் செல்ல முடிகிறது.

தூசுகள் அல்லது அழுக்குகள் செருப்புகளால் மட்டும் வரும் என்று கருதவும் முடியாது. தவிரவும் நூலகத்தில் பெரியளவில் கணனித் தொகுதிகள் – இணையப்பிரிவைத் தவிர இல்லையென்றும் கூறலாம். எனவே, செருப்புப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்க நூலக நிர்வாகத்தால் முடியும் என்பது பலரது அபிப்பிராயம்.

இரவல் வழங்கும் பகுதியிலோ, உடனுதவும் பகுதியிலோ புத்தகங்களை எடுக்கும் போது தூசுப் பிரச்சினை எழுவது பலருக்கும் ஏற்பட்டிருக்கக் கூடிய அனுபவமே. தொழிலாளர் போதாமை, தொழிலாளர்களின் அக்கறையற்ற செயற்பாடு ஆகியன இதற்கான காரணங்கள் எனலாம்.

நூலகம் வழங்கிவரும் சேவைகளில் இணையசேவையும் ஒன்று. ஒரு சில இடங்கள் தவிர ஏனைய இடங்களில் இணையசேவையைப் பயன்படுத்த 50ரூபா அறவிடப்படுகிறது. பொது நூலகத்தில் (சில தனியார் நிறுவனங்களிலும் இதே கட்டணம் தான்) 30 ரூபாவிற்கு இணைய சேவை வழங்கப்படுகிறது. ஆனால், நூலகத்தில் இணைய சேவையைப் பெறுபவர்கள் பலரும் அதன் வேகம் தொடர்பில் அதிருப்தியே அடைகின்றனர். ஓரிரு முறை பயன்படுத்தியவர்கள் பின்னர் தனியாரிடம் செல்லும் நிலைக்குப் பல காரணங்கள் இருந்தாலும், இங்குள்ள சேவை வேகம் குறைந்து காணப்படுவது முக்கியமான ஒரு காரணமாகும்.

எது எப்படியோ, யாழ். பொதுநூலகம் பண்பாட்டுப் பிரக்ஞை உள்ள தமிழ்மக்கள் அனைவரதும் சொத்து. அதை முன்பிருந்த நிலைமைக்குக் கொண்டுவருவதும், மேலும் மேலும் எவ்வழிகளிலும் அதன் பயனைப்பெறுவதும் நமது சமூகத்தின் அறிவு விருத்திக்கு இன்றியமையாதது.

யாழ். மாநகரசபை வரியிறுப்பாளர்களிடமிருந்து வரிப்பணத்தை முழுமையாகப் பெற்று, மக்கள் நலன் நோக்கிய பல திட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகும். தனது வளங்களுக்கேற்ப அது செய்யும் பணிகளை வரவேற்கும். அதேவேளை, நூலகம் தொடர்பில், அதன் தேவைகள் தொடர்பில் விரைந்து அக்கறைகளைச் செயலுருப்பண்ணவேண்டும் என்பது பலரது அவாவாகும்.

தென்னாசியாவின் சக்திமிகு நூலகமாக இதனைக் கொண்டு வருவதற்குச் சாத்தியமான எல்லா வழிகளையும் மாநகர நிர்வாகம் எடுக்கவேண்டும். எமது பழந்தமிழ் நுல்கள், ஏட்டுப்பிரதிகள், புகைப்பட ஆதாரங்கள், ஓவியங்கள் போன்றவற்றைச் சேகரித்துப் பேணும் முயற்சிகளைக் கூட நூலக நிர்வாகம் முடுக்கிவிடவேண்டும்.

தாவீது அடிகளாரின் துயர்மிகு மரணம் நூலகம் எரிந்ததைக் கேள்வியுற்றதால் விளைந்தது. அவரின் கனவும், நமது மூத்த புத்திஜீவிகளின் கனவும் பலிதமாகப் போவதும் எப்போது?

**ஏகலைவன்**

## யாழ். பாணம்



கண்ணைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட்டு காற்றுக் காலத்தில் வானில் பறக்க விடப்படும் பட்டங்கள் சிறுவர் சிறுமியர்க்கு உற்சாகத்தையும் மன மகிழ்வையும் ஏற்படுத்தக் காரணமாகின்றன.

விடாமுயற்சியும் கடும் அக்கறையும் செலுத்திக் கல்வி கற்பதன் மூலம் பரீட்சையில் சிறப்புச் சித்திகள் பெற்று பல்கலைக் கழகத்தில் பிரவேசிக்கும் மாணவ சமுதாயம், பல்துறைகளில் பெறும் பட்டங்கள் அவர்களைப் புத்திஜீவிகளாக அடையாளப்படுத்துவதுடன் தாம் சார்ந்த சமூகத்துக்கும் தம்மினத்துக்கும் அரும்பெரும் பணியாற்றச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

தம்மின விடுதலைக்காய் தமதுயிரையே ஈந்திடத் தயாராய் மண்ணையும் மக்களையும் காத்திடும் பணியில் மரணிக்கும் மாவீரர்களுக்கு அவர்தம் வீர மரணத்தின் பின் வழங்கப்பெறும் பட்டங்கள் என்றும் மக்களின் போற்றுதலுக்கும் பூஜிப்புக்கும் அருகதை கொண்டமைவன.

இன்றும் கூட கிராம மட்டத்தில் ஒரு சிலரது உருவ அமைப்பு அவர் தம் விசித்திர குண இயல்புகள் காரணமாகவும் மற்றொரு சிலரின் தொழில் சார் நடவடிக்கைகளாலும் அவர்களை அடையாளப்படுத்தும் விதத்தில் கிராமத்தவர்களால் பெயருக்கு முன்னால் பட்டங்கள் சூட்டி அழைக்கப்படுவதுண்டு. ஒரே பெயர் கொண்ட பலர் அக்கிராமத்தில் வாழ நேர்வதும் அவர்களை அடையாளப்படுத்த இலகுவான வழி என்பதாலும் இத்தகைய பட்டங்கள் அவர்தம் பெயர்களின் முன்னால் ஒட்டிக்கொள்வதுண்டு. நெடுவல், புழுகர், கிளாக்கர், தரகர் என்பன இவற்றுக்கான உதாரணங்களில் ஒரு சில. இவை கௌரவப் பட்டங்கள் எனக் கொள்ளப்பட முடியாதவையாயினும் அவ்வாறானோர் உயிர் வாழும் வரை மட்டுமன்றி அவர்களது இறப்பின் பின்னரும் அவர்களுடன் தொடர்பவை.

தாம் வாழும் சமூகத்துக்கு மட்டுமன்றி தமது மொழி, மதம், கலாசாரம் என்பவற்றுக்குத் தன்னலமற்ற தொண்டாற்றும் ஒருவரை, சமூகமும், இனமும், ஏன் - அவர்தம் நாடும் இனங்கண்டு கௌரவித்துப் பயன்படுத்தும் இவ் வழக்கம் இன்று நேற்று ஆரம்பித்த தொன்றல்லாது, சங்க காலமுதல் வழக்கில் இருந்து வரும் பழக்க மொன்றாகும். பாராட்டிப் பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவதால், அவற்றுக்குரியவரது ஊக்கமும்,

## வல்லவன் பம்பரம் மனலிலும் ஆடும்

அர்ப்பணிப்புடனான சேவை விரும்பும் மென்மேலும் தூண்டப்படுமென்பது தத்துவம்.

எந்தவொரு துறையாயினும்- அரசியல், ஆன்மீகம், இலக்கியம் மற்றும் சமூகமுன்னேற்றப்பணி என அப்பணிகள் பலதரப்பட்ட போதிலும் சமூகத்தின் இத்தகைய கௌரவமும், பாராட்டும் அவர்களை மென்மேலும் உற்சாகத்துடன் செயற்படத் தூண்டுகோல் ஆகின்றன.

பொதுவாகவே புகழ்ச்சியும் பாராட்டும் போதை அளிப்பன. ஆனால் தூய அர்ப்பணிப்பு உணர்வும், சேவைமனப்பாங்கும் பொது நல நோக்கும் கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவையெனக் கருதிக் செயற்பட்ட நம் முன்னோரில் பலர், புகழ்ச்சியும் பாராட்டும் தம்மைத்தேடி வந்த வேளைகளில் அவற்றைச் கூச்சத்துடனும் அடக்கத்துடனுமே ஏற்றுக் கொண்டதுண்டு.

அவர்களிலெவரும் தமது தூய தொண்டினை வெளிச்சம் போட்டுக் காட்டிட விரும்பியதில்லை.

ஆனால், இன்றைய இயந்திர மய உலக இயக்கத்தில் நம்மில் சிலர் இப் புகழ்ச்சியையும் பாராட்டையும் விலை கொடுத்தும் வாங்கத் தயாராய் இருக்கிறோம். அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் சமூகத்துப் பெரிய மனிதர்கள் என நம்மில் ஒரு சிலர் இப்பட்டங்களைக் கட்டிக் கொள்ளப்படாதபாடுபடுவதைக் காணமுடிகிறது.

என்றைக்குத் தமது தீவிர ஆதரவாளர்களைச் சமாதான நீதவான் என்ற கௌரவப்பட்டத்துக்குச் சிபார்சு செய்யும் வாய்ப்பு அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டதோ, அன்றுமுதல் அப்பட்டத்துக்கான மதிப்பும் மரியாதையும் சமூகத்தின் பார்வையில் கேலிக்கு உரியதொன்றாய் ஆக நேர்ந்தது. இருந்தபோதிலும் கூழுக்குப் பருப்புச் சேர்த்தது போல உரிய தகுதியும் உயரிய பண்பாடும் கொண்ட சிலர் அப்பட்டத்துக்கு அழகு சேர்ப்பதை மறுப்பதற்கில்லை.

புலம் பெயர்ந்து வாழும் ஒரு சிலர் தம்மை இலக்கிய, ஆன்மீக வாதிகளாய் விளம்பரப்படுத்தும் நோக்கில் எதையெல்லாமோ எழுதி, அவற்றைத் தம்செலவிலேயே வெளியிட்டுப் பிரபல்யம் தேட முயலும் தன்மை அ[illegible]கரித்து வரும் இந்நாளில், தாம் சாவதற்கு முன்னர் சமாதான நீதிவான் பட்டம் கட்டிக் கொள்ளும் அங்கலாய்ப்பில் அதற்கான வழிதேடி அலையும் ஒரு சிலரும் இன்று எமது சமூகத்தின் உறுப்பினர்களே.

இவை யாவற்றையும் தூக்கி எறியும் வகையில், சிரமமோ, செ[illegible]வோ இன்றித்,தம்மைப் புத்திஜீவிகள் எனத் தாமே தம்பட்டம் அடிக்கும் விருப்பில் தமக்குத் தாமே இஷ்டமானதொரு பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, தமது எடுபிடிகள் மூலம் தமது செலவிலேயே விழா எடுத்து விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஒரு சில அரைவேக்காட்டு பிரகிருதிகளும் எமது சமூகத்தின் அங்கங்களே.

பட்டத்துக்குரியவரின் தகுதியறிந்து பெறுமதியுடைய அமைப்பொன்றினால் சூட்டப்படும் பட்டம் அவரது சேவைக்கு நன்றி செலுத்தும் சமூகத்தின் அங்கீகாரமாகக் கொள்ளப்படும். அது மனித தர்மம்.

தகுதியற்ற ஒருவருக்கு, முகஸ்துதி செய்யும் நோக்கிலோ, அவர் மூலம் சலுகை பெறும் நோக்கிலோ அல்லது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்கிலோ பட்டம் சூட்டிக் கௌரவிக்க முயல்வது சமூகநோக்கில் அதர்மம்.

சமூகத்தின் காதில் பூச்சுற்றி தம் எடுபிடிகளைப் பயன்படுத்தி தமக்குத்தாமே பட்டம் சூட்டி விழா எடுத்துப் பிரபல்யம் தேடும் வழி சமூக நோக்கில் அதர்மா அதர்மம்

தரமான பொருளுக்கு விளம்பரம் அவசியப்படுவதில்லை. இனிப்பு எங்கிருந்தாலும் அதைத் தேடி எறும்புகள் தாமே வலிய வருமென்பது யதார்த்தம்.

நான்கு நாள்களுக்கு முன்னர், நான் கலந்து கொள் ள நேர்ந்த மரணச் சடங்கொன்றில் ஏற்பட்ட அனுபவ வெளிப்பாடு இது. மரணமடைந்தவர் எனது ஊரவர் என்பதால் கடந்த ஐம்பது ஆண்டுகளாய் அவரை நான் அறிந்திருந்தேன். விதியோகிக்கப்பட்ட கண்ணீர் அஞ்சலிப் பிரசுரத்தில் அவர் சமூக மத்தியில் ஆற்றிய சேவைகளுக்கு அப் பிரதேசத்தின் பல்வேறு அமைப்புக்கள் காலத்துக்குக் காலம் வழங்கிய பட்டங்கள் கொட்டை எழுத்துக்களில் அச்சாகியிருந்தன. இத்தனைக்கும் ஈழப்போர்கள் இடம் பெற்ற வேளைகளில் கொழும்பில் வாழ்ந்த மகளுடனேயே தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் வாழ்ந்த அவர் அவ்வப்போது நீண்ட இடைவெளிகளில் ஊருக்கு வந்து தங்கிச் சென்றதுண்டு.

**பொன்வேளன்**

# எமது மனங்கள் இனிமையையும் பண்பையும் இழந்து விட்டனவா?

எனக்கு வயது எழுபதைத்தாண்டி விட்டது. அடிக்கடி உடல்நலம் கெட்டு விடுகிறது. உழைக்கவும் தெம்பு குறைந்துவிட்டது.

அன்றும் வைத்தியசாலைக்குச் செல்லவெனப் புறப்பட்டேன். ‘ஆட்டோவுக்குச் சொல்லிவிடவா?’ என மகன் கேட்டான். எனது உடல்நிலையை மகன் பார்த்தான். எனது நிதிநிலையை நான் பார்த்தேன். ‘வேண்டாம் மகன். நான் பஸ்ஸிலேயே போகிறேன்’ என்று கூறிவிட்டேன். அவன் வற்புறுத்திப் பார்த்தான். நானும் பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

பஸ்ஸிற்குக் காத்துநின்றபோது, மினிபஸ் ஒன்று வந்தது. எங்கள் கிராமத்திலிருந்து பஸ்

> “.... ஆட்டு மந்தைகள் கூட வேணுகானம் கேட்டால் அதை இசைப்பவனின் பின்னே போய்விடும்.... நாம் இப்பொழுதே நமது நடைமுறைகளைத் திருத்தினால்தான் நவீன உலகில் நின்று பிடிக்க முடியும்.....”

புறப்படுவதில்லையாகையால் இருந்து பயணஞ்செய்ய இடம்கிடைப்பது துர்லபம். உடல் நிலை ஏற்றதாக இல்லாவிட்டாலும் நின்றுதான் பயணஞ் செய்யவேண்டும். ஏறி நின்று கொண்டேன்.

சிறிது நேரத்தின் பின் கால் வைக்கவே இடமில்லாத அளவு சனக்கூட்டம் ஏறிக்கொண்டது. ஒரு சிறு இடைவெளி கூட இருக்காத வண்ணம் பார்த்துப் பார்த்து நடத்துநர் ஆள்களை அடுக்கினார். அதற்காகப் பலவித வசவுகளும் கொடுக்கப்பட்டன.

பஸ்ஸில் இருந்து பயணஞ்செய்ய இருக்கைகளும் பொருள்களை எடுத்துசெல்வதற்கு வசதியாக இடைவெளியும் அமைத்திருக்கிறார்கள். இங்கு ஓடும் மினிபஸ்களுக்கு இருக்கைகளை எடுத்துவிட்டு நான்கைந்து நிரை கம்பிகளை மேலே பிடித்துக்கொண்டு தொங்குவதற்காக அடித்து விட்டால் நல்லதென்று தோன்றியது.

‘சந்தியிலை இறக்கம்’ என்று கூறிக்கொண்டே வளைந்து தெளிந்து வாசலுக்கு வர நான் முயன்றும் முடியவில்லை.

‘பெரியவர் இறக்கமெண்டால் முன்னுக்கு வரத் தெரியாதோ? கெதியாய் இறங்குங்கோ’ என அவசரப்படுத்தினார் நடத்துநர்.

‘பொறுமேனை. அவசரப்பட்டு என்னை விழுத்திப் போடாதையும்’ என்று கோரிக்கை விடுத்தேன் நான்.

மினிபஸ் புறப்படும்போது ‘இந்த நைன்ரியள் வீட்டிலை இருக்கலாந்தானே’ என்ற நடத்துநரின் வார்த்தைகள் என் பிடரியில் அறைந்தன.

வேதனையோடு வீதியில் நடக்க ஆரம்பித்தேன். கடைகளின் முன்னே நின்றவர்கள். ‘வாங்கோ ஐயா. என்ன வாங்கப்போறீங்கள்?’

‘வாங்கோ ஐயா உள்ளுக்கு வந்து பாருங்கோ’ என்றெல்லாம் தம் வியாபாரத்திற்காக அழைக்கின்றார்கள்.

அவர்களைக் கடந்து சென்று அந்தத் தனியார் மருத்துவமனையுள் நுழைந்தேன். வரவேற்பு இடத்திலிருந்தவர். சில விவரங்களைக் கேட்டுப் பதிந்தார். தாதியொருவர் ‘நிக்காதேங்கோ, கதிரையிலை இருங்கோ. டொக்ரர் வந்தவுடனை கூப்பிடுகிறம்’ என்றார்

இருக்கையில் என்னால் வசதியாக அமர முடியவில்லை. மின்விசிறி சுற்றினாலும் காற்றில்லாத இடத்தில் அடைத்து வைத்தது போன்று திணறினேன்.

நேரமிருப்பதால் ஓர் ஆவணத்தின் நிழற்பிரதியெடுத்து வரலாமென எண்ணி எழுந்துசென்றேன்.

தொலைத் தொடர்பகம் ஒன்றினுள் நுழைந்தேன். குளிரூட்டப்பட்ட அறை ‘ஜில்’ லென்று இதமாக இருந்தது பிரதியெடுக்கச் சென்றால், ‘அதிலை இருங்கோ, வாறன்’ என அங்கிருந்தவர் கூறினார். தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்துவதும் பணம் பெறுவதும் நிழற்பிரதி எடுப்பதுமாக ஓய்வின்றி அவர் இயங்கினார்.

நிழற்பிரதி எடுத்துக்கொண்டு, மீண்டும் வந்து வைத்திய நிபுணருக்காகக் காத்திருக்கும்போது என் சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது.

ஓடியோடி ஆள்களை அடுக்கிய மினிபஸ் நடத்துநர் பையன் முதல், தனியார் நிறுவனங்களில் ஓயாது பணிபுரியும் அன்று சந்தித்த அத்தனை முகங்களும் நினைவில் வந்தன.

தனியார் நிறுவனங்கள் தம் ஊழியர்களுக்குப் போதிய ஊதியத்தையும் தேவையான வசதிகளையும் கொடுக்காது உழைக்கும் வர்க்கத்தை உறிஞ்சி எடுத்துவிடும் என்பார்கள்.

ஏனைய நாடுகளில் அவை போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையார்களைக் கவர்வதற்காகச் சிறந்த சேவையை வழங்கி உச்ச இலாபமடைய முயல்வதே வழமையாக உள்ளது.

ஆனால், எமது நாட்டில் வாடிக்கையாளரையும் ஊழியரையும் வருத்தி உச்ச இலாபமடைய அவர்களால் எப்படி முடிகிறது?

ஊழியர்களை வருத்தி இலாபம் பெறுவதும் ஒரு நாளில்லாவிட்டாலும் ஒரு நாள் அவர்களின் எதிர்ப்பையும் கசப்பையும் சம்பாதித்துப் பிரச்சினைகள் உருவாகக் காரணமாகிவிடும். வேலை பழகிய ஊழியர்களையும், வாடிக்கையாளருடன்

## நயமாகப் பேசி நயம் பெறுங்கள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

நல்லுறவு கொண்ட ஊழியரையும், திறமையான ஊழியரையும் அடிக்கடி இழக்க நேரிடும். எனவே திறமையான நிர்வாகி ஊழியரைத் தட்டிக் கொடுத்து, வேலை வாங்கித் தன் தொழிலை முன்னேற்ற வேண்டும்.

வாடிக்கையாளரைக் கவர்ந்து அதன் மூலம் உச்ச இலாபமடைவதுதான் உண்மையான திறமையாகும். அந்தத் திறமை எம்மவரிடம் அறவே கிடையாதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அன்று நான் சந்தித்த அனைவரும் ஐயா, அம்மா, பெரியவர், மாஸ்ரர், அண்ணை, அக்கா என்று மரியாதையாகத்தான் அழைத்துக் கதைத்தார்கள். ஆனால், அவர்களது பேச்சிலோ தோற்றத்திலே, அணுகுமுறையிலோ வாடிக்கையாளரைக் கவரும் தன்மையில்லை. கடைகளின் வாசல்களில் நின்று உள்ளே வாடிக்கையாளரை ஈர்க்க முயன்றவர்களிடங் கூட அது இல்லை.

தமிழ் மிகவும் இனிமையான மொழி. இனிமையும் பண்பும் அமைந்த கலாசாரம் எம்முடையது. எம்மால் இனிமையாகப் பேசவும் பழகவும் இயலாமற் போவதன் காரணமென்ன? எம் மனங்கள் இனிமையையும் பண்பையும் இழந்துவிட்டன போலும். பணிவுடன் பேசவேகூடாது என்ற எண்ணம் எமக்குள் பரவிவருவது போலத் தோன்றுகிறது. ‘ஐயா’ ‘அம்மா’ என்ற சொற்கள் மரியாதையுடன் கூறப்படும்போதுதான்

> “… ஐயா,அம்மா என்ற சொற்கள் மரியாதையுடன் கூறப்படும் போதுதான் மரியாதையுடையவையாகின்றன.... பேசும் போது அதில் அன்பும், மரியாதையும் கலந்திருக்கவேண்டும்...”

மரியாதையுடையவையாகின்றன அன்பும் மரியாதையும் பேசும்போது அதில் கலந்திருக்கவேண்டும். அதை விடுத்து, ஏளனமாகவும் அதிகாரமாகவும் ‘ஐயா’ என்று அழைத்தால் அது மரியாதையாக அழைக்கப்படுவதாகாது.

தொலைபேசி மூலம் ஒரு முறைப்பாட்டைக் கொழும்பிற்குக் கொடுத்தபோது, அந்த நிறுவனப் பிரதிநிதி ஆங்கிலத்தில் மிக அக்கறையாகவும் பௌவியமாகவும் உரையாடினார். அது பற்றி அதே கேள்விகளை யாழ்ப்பாணத்திலிருந்து தமிழிலே கேட்டபோது அவர் ஏனோ தானோவென்று கேட்பதாக எனக்குத் தோன்றியது. காரணம் என்னவென்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஒருவர் தமது அனுபவத்தைக் கூறும்போது “அந்தப் பணியகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த ஒருவர் வந்து ‘தயவு செய்து சில நிமிடங்கள் காத்திருப்பீர்களா?’ என்று வெகு விநயமாகக் கேட்டார். அவர் கேட்டதற்காக மணிக்கணக்கில் காத்திருக்கலாம் போலிருந்தது. அதன்பின் அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளராகி விட்டேன்” என்று கூறினார். இத்தகைய இனிமையாகப் பேசிப் பழகும் தன்மை ஓரிடத்தில் பணிபுரிபவர்களிடம் இருக்கவேண்டும்.

‘வாய்ப்பேச்சில் பயனில்லை. செயல்திறன் வேண்டும்’ என்று சிலர் கூறக்கூடும். செயல், அதாவது வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

(VII ஆம் பக்கம் பார்க்க)

---

# வேதனை பொறுக்கவில்லை

குறுக்கதை

ஆழ்கடலின் அடிமட்டத்தில் திடீரென்ற பேரதிர்ச்சி!

ஆழியினால் அதைத்தாங்க முடியவில்லை. உடலதிர்ந்த அதிர்வில், அலைகள் புரண்டு புரண்டெழுந்து, வேகங்கொண்டோடத் தொடங்குகின்றன. ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாகக் கரையை நோக்கித் தள்ளப்பட்டு ஓடுகின்றன.

“மீண்டும் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஓடியது போலவே ஓட நேர்ந்து விட்டதே”

அலுத்துக் கொள்கிறது ஓர் அலை.

‘இந்த மனிதர்கள் இயற்கையை விட, செயற்கையில் ஆசைகொண்டு செயற்படுவதனாலேதான் எல்லாப் பிரச்சினைகளும் வருகின்றன’

பின்னே ஓடி வந்த இரண்டாவது அலை கூறுகிறது.

‘என்ன அதிர்வு! ஊழி முடிவு வந்த மாதிரியல்லவா இருந்தது!’

மூன்றாவது அலை பயத்தோடு கூறுகிறது.

‘அப்பப்பா நாம் என்ன பாடுபடுகிறோம். அன்றைக்குக் கூட நாம் பட்டபாடு இந்த மனிதர்களுக்குப் புரியவில்லை. நாங்கள் பெரிய அழிவை ஏற்படுத்திவிட்டோமென்று உலகமெல்லாம் விளம்பரம் செய்கிறார்கள்’

முதலாவது அலை எரிச்சலுடன் கூறுகிறது.

‘நீ கரையோரப்பக்கம் போய்ப் பார்க்கவில்லையா? உண்மையிலேயே அங்கே வாழ்ந்த மனிதர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள்’

இரண்டாது அலை கூறிக்கொண்டு விட்ட பெருமூச்சில் முதலாவது அலை மேலெழுந்து வீழ்கிறது.

‘கோழி மிதித்து குஞ்சு இறந்த கதையாக எங்கள் அணைப்பின் இறுக்கத்தில் எங்கள் மடியினுள்ளேயே எவ்வளவோ மனிதர்கள் அடங்கிப்போய் விட்டார்கள்’.

மூன்றாவது அலை விம்மி விம்மித் தணிகிறது.

‘ஐயையோ! பாவம்! அவர்கள் புனர்நிர்மாணம் செய்த கிராமங்களை இந்த அதிர்வு, எம்மைக் கொண்டு திரும்பவும் அழிக்கப் போகிறதே!’

முதலாவது அலை கவலையுடன் கூறுகிறது.

‘புனர்நிர்மாணமா? அப்படியெதுவும் நடந்ததாகத் தெரியவில்லையே. நான் கரையோரத்திற்குப் போயிருந்தேனே’

இது இரண்டாவது அலை.

‘பேரழிவுக்குப்பின் ஒரு பேரெழுச்சி தோன்றப்போகிறதோ? என்று நானும் கேள்விப்பட்டவற்றை வைத்துக் கற்பனை செய்தேன். ஆனால் இந்த மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்களை என்ன சொல்வது? எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்ற மனப்பாங்கில் பாதிக்கப்பட்டவர்களை மேலும் துன்புறுத்தி, கிடைத்த உதவிகளையும் பறித்து ஏப்பமிட்டு, சண்டையும் சச்சரவுமாக..... சீச்சீ..... சொல்லத்தொடங்கினால் பல நீண்ட தொடர்கதைகள் கூறலாம். மனிதகுலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய கதைகள் அவை’

மூன்றாவது அலை வேதனையோடு முணுமுணுக்கிறது.

‘அப்படியா? இன்னுமொரு முறை அவர்கள் தாக்கப்படக்கூடாது’

உறுதியாகக் கூறிய முதலாவது அலை, ‘எமது வேகத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்போம்’ என்று பின்னே வந்த அலைகளைப் பார்த்துக் கூறுகிறது.

‘மிகவும் கஷ்டம். இது நாமே ஓடும் ஓட்டமில்லையே. அதிர்வினால் தள்ளப்பட்ட ஓட்டம். இந்த வேகத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் கஷ்டம். எமக்கு மிகவும் வேதனை தரும்’

பின்னே வந்த அலைகள் முனகுகின்றன.

‘அதற்காக துன்பப்பட்டவர்களுக்கு மீண்டும் துன்பம் கொடுப்பதா? அவர்களைக் கஷ்டப்படுத்தாதிருப்பதற்காக நாங்கள் அதிக வேதனைப்பட்டாலும் பரவாயில்லை’

முதலாவது அலை மீண்டும் உறுதியோடு கூறுகிறது.

‘ஆமாம். கஷ்டப்பட்டவர்களைக் கஷ்டப்படுத்த நாங்கள் மனிதர்களல்லர். அவர்கள் துன்பப்படாதிருக்க நாங்கள் இயன்றதைச் செய்வோம்’.

இரண்டாவது அலையும் ஆமோதிக்கிறது.

‘எமது வேதனை பெரிதல்ல’

மூன்றாவது அலையும் முழங்குகிறது.

தம்மால் இயன்றவரை தம் வேகத்தைக் குறைக்க முயன்று, அவை அந்த வேதனையால் ஓலமிடுகின்றன. ஊரின் எல்லையைத் தொடும்போது தம்மைக் கட்டுப்படுத்திவிட்ட வெற்றியுடன் நுரைதள்ளிச் சரிகின்றன.

சுனாமிப் பேரலைகள் இனித் தாக்காதென்று காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பைக் கேட்டு சுனாமி அலைத்தாக்கத்தை பீதியுடன் இரவிரவாக எதிர்நோக்கியிருந்த மக்கள் நிம்மதியடைகின்றனர்.

- மாதுமை

# பண்டார வன்னியனின் கனவை நனவாக்குகின்றது வன்னிமண்



வன்னி நிலப்பரப்பானது இலங்கையின் தொல்குடியினரான பெருங்கற் பண்பாட்டிற்குரிய பழந்தமிழ் மக்கள் வாழ்ந்த முதன்மையான பகுதியாகும்.

இப்பகுதி வடக்கே யாழ்ப்பாணக் கடல் நீரேரியையும் தெற்கே அருவியாற்றையும் அனுராதபுரத்தையும் கிழக்கே திருகோணமலையையும் மேற்கே மன்னாரையும் எல்லைகளாகக் கொண்டிருந்ததாக 1990இல் ஆங்கிலேய அரசின் வன்னி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஜே.லூயிஸ் தான் எழுதிய கைநூலிலே குறிப்பிட்டிருக்கின்றார். இருந்தும் வன்னியின் தெற்கு எல்லை காலத்துக்குக் காலம் தென்கிழக்கே கொட்டியாரம் வரையும் தென்மேற்கே புத்தளம் வரையிலும் பரந்து விரிந்தமைக்கான பல வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. வரலாற்றிற்கு முந்திய காலத்திலிருந்து திராவிட இனத்தின் பழந்தமிழ் மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்து வந்தமைக்கும் ஆட்சி செய்து வந்தமைக்கும் பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் சான்று பகர்கின்றன.

01. பெரிய புளியங்குளத்தில் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டு -

02. மாதோட்டம், குஞ்சுப்பரந்தன், பொம்பரிப்பு ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஈமைத் தாளிகள், எலும்புக் கூடுகள் -

03. எல்லாள மன்னரால் வெட்டப்பட்டதாகக் கூறப்படும் குளங்கள் -

பூநகரிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு நாடுகளினதும் பண்டைக்காலக் காசுகள், மட்கலன்கள், செப்பேடுகள், பிராமிய எழுத்துக்களுடன் கூடிய மட்கலத் துண்டுகள் மற்றும் பெருங்கற் காலத்தில் பயன்படுத்தப் பட்ட பொருள்கள் என்பன சான்றுகளாக அமைகின்றன.

வன்னியின் பெரிய புளியங்குளத்தில் கண்டுபிடிக்கப் பட்ட 35 பிராமிக் கல்வெட்டுகளில் சில தமிழ் பிராமிய எழுத்துக்களைக் கொண்டவையாகும். அக்கல்வெட்டுக்களில் சிலவற்றை வாசித்தறிந்ததிலிருந்து இப்பகுதிகளில் நிலவிய சிற்றரசர்களின் ஆட்சிச்சிறப்பு, வணிகச் சிறப்பு, மொழிச்சிறப்பு என்பவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

தமிழ் சிற்றரசர் குளங்களைக் குறிப்பிடும் ஆய்வேள், பருமக போன்ற சொற்கள் அக் கல்வெட்டுக்களில் வாசித்து அறியப்பட்டன. கல்வெட்டுக்கள் தவிர இப் பகுதியில் இருக்கும் நாகதேவன்துறை போன்ற இடப் பெயர்கள், நாகபடுவான்குளம் போன்ற குளப்பெயர்கள் மற்றும் இப்பகுதியில் வழக்கத்திலுள்ள நாக எனத் தொடங்கும் கோயில்கள், கடவுளர், ஆள்களின் பெயர்கள் என்பனவற்றையும் பழந்தமிழர்களான நாகர்களுக்கும் வன்னி மண்ணுக்கும் உள்ள தொடர்புகளுக்குச் சான்றாக விளங்குகின்றன. நாகதீபம் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் பகுதி வன்னியையும் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வன்னியில் வழங்கப்படும் மிகப் பெருவாரியான ஊர்ப்

இப்பகுதியில் காணப்படும் கட்டட இடிபாடுகளைச் செம்மையாக ஆராயுமிடத்து வட இலங்கை தமிழரசுகளின் தலைநகராக வன்னி விளங்கியது பற்றியும் அதன் ஆட்சிக்காலம் பற்றியும் தெட்டத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். இவைதவிர இடைக்கால, பிற்கால தமிழரசுகளின் ஆட்சி மையங்கள், தலைநகர்கள் இருந்தமைக்கான பல தடயங்கள் முத்தையன்கட்டு, பனங்காமம் உட்பட வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இவை முழுமையாக ஆராய்ந்து அறியப்படவேண்டும்.

13ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண அரசு வலிமை மிகுந்திருந்த காலங்களில் அந்த ஆளுமையை ஏற்று வன்னிச் சிற்றரசுகள் தனியாக இயங்கி வந்தன.

### கயிலைவன்னியன் அரசு

யாழ்ப்பாண அரசு வலிமை குன்றிய காலங்களில் வன்னி அரசுகள் தனித்தன்மையுடைய அரசுகளாக இயங்கின. யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சி அடைந்ததை அடுத்து 17ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் வன்னியின் பனங்காமத்தில் வலிமை மிகுந்த அரசாக கயிலைவன்னியன் அரசு விளங்கியது.

யாழ்ப்பாண தமிழரசின் வீழ்ச்சியின் பின்னணியில் நிலவிய கயிலைவன்னியன் ஆட்சியும் பண்டார வன்னியன் ஆட்சியுமே தமிழருக்குப் பெருமை தரக்கூடிய ஆட்சிகளாகவும் மாற்றாரை வியக்கவும் திகைக்கவும் வைத்த ஆட்சிகளாகவும் திகழ்ந்தன. சிதம்பரநாச்சி, நல்லநாச்சி போன்ற அரசகுலப் பெண்களும் ஒல்லாந்தருக்கெதிராகப் படை திரட்டி போரிட்டமை பற்றி செவி வழிச் செய்திகளூடாகவும் பிற்கால தமிழிலக்கியங்களூடாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்களின் போது வன்னி அரசர்களும் வன்னி மக்களும், தமது தளராத, உறுதியான, கடுமையான எதிர்ப்பினை வெளிப் படுத்தி வந்துள்ளனர். வீரஞ்செறிந்த இவர்களின் போர் வலிமையினாலும் உணர்வினாலும் வன்னி மண் அடங்காப்பற்று என்ற சிறப்புப் பெயரைத் தாங்கி [illegible]றது. வன்னி மண்ணை ஆட்சி செய்த கயிலை[illegible]யன் ஆட்சிக்காலத்தை வன்னித் தமிழர்களின் [illegible]காலமாகக் கொள்ளலாம். கயிலைவன்னியன் க[illegible] வன்னியன் எனவும் அழைக்கப்பட்டான்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின்போதும் அவர்களுக்குத் தலைவணங்காமலும் அவர்களுக்குத் திறை செலுத்தாமலும் வன்னியின் பனங்காமம்பற்றிலிருந்து 1664ஆம் ஆண்டு முதல் தனது வலிமையான ஆட்சியை நடத்தி வந்தான். இவன் ஆட்சி தொடங்கியதிலிருந்து யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரது ஆட்சியின் இறுதிக் காலம் வரை 14ஆண்டுகள் அவர்களது கட்டளைகளுக்கு அடங்காது அவர்களுக்கு திறை செலுத்த மறுத்து வந்தான்.

## போர்களை எதிர்கொண்டுவென்ற வன்னி மக்களின் அடங்காப்பற்று

பெயர்கள் நீர் நிலைகளைக் குறிக்கும் குளம், கேணி, வாய்க்கால், கட்டுஓடை, மடு முறிப்பு, மோட்டைவில் ஆறு, தண்ணி போன்றவற்றையே அவை கொண்டிருக்கின்றன. வன்னி மண் தமிழ் மக்கள் பரந்தும் செறிந்தும் வாழ்ந்த தொன்மையான மண் என்பதனை எடுத்துக் காட்டுகிறது என ஜேகா லூயிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

### பூநகரியில் கிடைத்த வெளிநாட்டு நாணயங்கள்

இதைவிட வன்னி தமிழர்களின் பகுதி என்பதை எடுத்துக்காட்ட வேறு சான்றுகள் தேவையில்லை. வன்னியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் திராவிட இனத்துக்குரியவை என்பது மானிடவியலாளர்கள் பலரின் முடிவாகும். இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் திராவிட இனத்திற்குரியவை என்பது மானிடவியளாலர்கள் பலரின் முடிவாகும். இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஈமைத்தாளிகள் தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால ஈமைத்தாளிகளை ஒத்தவையாகும் என தொல்லியல் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். 1989-90ஆம் ஆண்டுகளில் பூநகரிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளும், அகழ்வு ஆய்வுகளும் பூநகரிப் பகுதி தமிழர்கள் ஆட்சி மையமாக, தலைநகரமாக இருந்தமையை உறுதிப் படுத்தும் பல உண்மைகளை எமக்குத் தந்துள்ளன. அகழ்வு ஆய்வுகளின் போது பல நாடுகளுக்குரிய பண்டைய காசுகள், மட்கலன்கள், பிராமிய எழுத்துக்களுடன் கூடிய மட்கலத்துண்டுகள், கட்டட அழிவுகள் போன்ற தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன.

கிரேக்க, உரோம, சீன, அரேபிய காசுகளுடன் சோழ, பாண்டிய, யாழ்ப்பாண அரசுகளின் காசுகளும் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றுள் கி.மு.05ஆம் நூற்றாண்டுக்குரிய காசும் அடங்கும். இங்கு கண்டெடுக்கப்பட்ட காசுகளும் மட்கலங்களும் யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகராகக் கருதப்படும் கதிரமலை, கந்தரோடை பகுதிகளின் அகழ்வு ஆய்வின் போது கண்டெடுக்கப் பட்ட பொருள்களை ஒத்தவையாகும். எனவே, கதிரமலைக்கு நிகரான தலைநகராக, வணிக நகராக பூநகரி விளங்கியது என்பது புலனாகிறது. வன்னியின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்துகொள்ள இவை பொதுவான சான்றுகளாகும்.

அது போன்றே ஒல்லாந்தர் காலத்திலும் இறுதிவரை அவர்களுக்கு அடங்கவோ திறை செலுத்தவோ அன்றோ அவர்களின் கட்டளையை ஏற்று யாழ்ப்பாணம் செல்லவோ மறுத்து வந்தவன் என ஒல்லாந்து ஆளுநர் தோமஸ் வான்ரி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியின் ஆற்றல் மிகுந்த தலைவனாகத் திகழ்ந்த கயிலைவன்னியனுடன் கண்டி மன்னன் 2ஆம் இராசசிங்கன் நட்பு பூண்டிருந்தான். வன்னிப்பகுதி ஏழு பற்றுகளாக பலரின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த போதிலும் வன்னிக்கு மாற்றாரினால் அச்சுறுத்தல் என்ற நிலை ஏற்பட்டால் அனைவரும் கயிலைவன்னியனின் தலைமையில் கூடி எதிர்ப்பைக் காட்டும் நிலை வன்னியில் அன்று இருந்துவந்தது.

வன்னியின் ஏனைய சிற்றரசுகளுக்கிடையே கயிலை வன்னியனது பனங்காமம் அரசு பேரரசாக மதிக்கப்பட்டது. றோபேட் நொக்ஸ் தமது இலங்கையின் வரைபடத்தில் கயிலை வன்னியனின் ஆட்சிப் பகுதி தென்

இ.தனபாலசிங்கம் - (ஒட்டுசுட்டான்)

கிழக்கே கொட்டியாரத்தையும் உள்ளடக்கியதாகப் பரந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கண்டி இராச்சியத்திலிருந்து தப்பிச் செல்கையில் ஆற்றல் மிக்க கயிலை வன்னியனுக்கு அஞ்சி வடபகுதிக்குச் செல்லாது அனுராதபுரத்திலிருந்து மேற்காக அரிப்புக்குச் சென்று அங்கிருந்து தனது தாய் நாட்டிற்குச் சென்றான்.

கயிலைவன்னியன் தம் ஆட்சிப் பகுதியான யாழ்ப்பாணத்தின் மீது படை எடுக்கக் கூடுமென்று அஞ்சியே போர்த்துக்கேயன் வெற்றிலைக்கேணியின் பெங்குற்றர் என்னும் கோட்டையையும் அமைத்ததாகக் கூறப்படுகிறது. கயிலை வன்னியனின் 34 ஆண்டு கால வீரஞ்செறிந்த ஆட்சி கி.பி.1678ஆம் ஆண்டுகாலத்தில் அவனது இயற்கைச் சாவையடுத்து முடிவுக்கு வந்தது. வன்னி மண் உள்ளவரை அவனது வீரஞ்செறிந்த வரலாறு நிலைத்துநிற்கும்.

கயிலைவன்னியனின் ஆட்சிக்குப் பின் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக வன்னியில் 20இற்கும் மேற்பட்டவர்கள் ஆட்சி புரிந்திருந்தாலும் வன்னியில் புகழ்பூத்த ஆட்சியாகத் திகழ்ந்தது குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியனது ஆட்சியாகும்.

தமிழகத்தில் பாஞ்சாலக் குறிச்சியில் வீரபாண்டிய கட்டப்பொம்மனும், சிவகங்கையில் மருதுபாண்டியரும் தமிழகத்தை அடக்க வந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் புரிந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பின்னரும் வன்னியில் ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்து வீரப்போர் புரிந்தவன் பண்டாரவன்னியன்.

பண்டாரவன்னியனது ஆட்சிக்காலத்தை அறிய முடியாவிட்டாலும் 1785ஆம் ஆண்டோடு தொடர்புடைய அவனது ஆட்சி பற்றிய செய்திகள் சில நூல்களிலிருந்து கிடைக்கின்றன. இலங்கையின் வரலாற்றில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய இலங்கை மன்னன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியன் என்ற உண்மை தமிழர் தம் வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கின்றது.

போர்த்துக்கேயரினால் அமைக்கப்பட்ட பெஸ்கற்றர் கோட்டையினையும் பைல் கோட்டையினையும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் தக்கவைத்துக் கொண்டனர். ஆனால் 1803ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கண்டி மீது படையெடுத்தபோது வாய்ப்பைப் பயன்படுத்தி பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் கோட்டைகள் மீது தாக்குதலில் இறங்கினான். பெஸ்கற்றர் கோட்டையினைக் கைப்பற்ற பண்டாரவன்னியனின் தலைமையில் சுண்டிக்குளம் ஊடாக ஒரு படையணி புறப்பட்டது.

பைல் கோட்டையினைக் கைப்பற்ற குலசேகரம் முதலியாரின் தலைமையிலான படையணி ஒன்று கண்டாவளை ஊடாகப் புறப்பட்டது. இதே நேரம் ஆங்கிலேயருடன் போரில் ஈடுபட்டிருந்த கண்டி மன்னன் இராசசிங்கனுக்கு உதவியாகவும் தனது படையணி ஒன்றை பண்டாரவன்னியன் அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது.

### முல்லைத்தீவுக் கோட்டை பண்டாரவன்னியன் வசம் வீழ்ந்தது

பெஸ்கற்றர் பைல் ஆகிய கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. பண்டாரவன்னியனது இத்தகைய ஆற்றலும் உறுதியும் ஆங்கிலப்படைகளையும் படைத் தளபதிகளையும் வியப்பிற்கும் குழப்பத்திற்கும் உள்ளாக்கியது.இக்குழப்பத்திலிருந்து மீழுவதற்கு முன்னரே 1803ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் நாள் முல்லைத்தீவில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேயரின் கோட்டையினையும் - பண்டாரவன்னியன் படைகள் தாக்கி அங்கிருந்த மூன்று பீரங்கிகளையும் கைப்பற்றின.

கப்டன் வோன்றிபேக்கு ஆங்கிலேயப் படைகளுடன் படகுகளில் ஏறி யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றான். ஏற்கனவே ஒரு தடவை நடந்த சண்டையிலும் கப்டன் வோன்றிபேக் பண்டாரவன்னியனிடம் தோல்வியைத் தழுவியிருந்ததினால் பெரும் அவமானத்திற்கு உள்ளானான்.

பண்டாரவன்னியனை எப்படியேனும் அழித்து விட வேண்டும் என ஆங்கிலேயப் படை முடிவெடுத்தது. இதனால் மன்னாரிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் திருகோணமலையில் இருந்தும் மூன்று பெரும் படைப் பிரிவுகள் மும் முனைகளிலிருந்தும் வன்னிக்கு முன்னேறின.

மன்னாரிலிருந்து முன்னேறிய படைக்கு கப்டன் வோன்றிபேக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து முன்னேறிய படைக்கு ஜோன்யுவலும் திருகோணமலையிலிருந்து முன்னேறிய படைக்கு எட்வேட்மெக்சினும் தலைமை வகித்தனர்.

(VII ஆம் பக்கம் பார்க்க)

# எல்லாப் பாம்புகளுக்கும் விஷம் உண்டா?



பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். பாம்பைக் கண்டால் எப்போதுமே உதறல்தான். உடலை நெளித்துக்கொண்டு முன்னோக்கிப் பாயும் பாம்பின் உடலசைவு உண்மையிலேயே அச்சமூட்டக் கூடியது.

இதுவரை ஆராய்ந்த 2ஆயிரத்து ,400 வகைப் பாம்புகளில் 8 சதவிகிதம்தான் விஷமுடையவை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகில் காணப்படும் பல்வேறு பாம்பினங்களில் 200 வகைதான் நஞ்சுடையவை. பாம்புகள் நீரிலும், நிலத்திலும், மரங்கள் மீதும் வாழும். இவற்றில் நச்சுப்பாம்புகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். நல்ல பாம்பு, கருநாகம், கட்டுவிரியன், கண்ணாடி விரியன் ஆகியவை விஷப்பாம்புகள். பெரும்பாலான பாம்புகளில் பல்லி, பூச்சிகளைக் கொல்லக்கூடிய அளவுக்கு சிறிதளவு விஷமே உண்டு. சில பாம்புகளோ, யானையைக்கூடக் கொன்றுவிடும். அதிக விஷமுடைய பாம்புதான் மனிதனுக்கும் ஆபத்தானது.

பாம்பினுடைய தலையின் இரு பக்கத்திலும் கண்ணுக்குச் சற்றுக் கீழாக நச்சுச்சுரப்பிகள் (Poison glands) உள்ளன. மேல் தடைக்குக் கீழே இருபுறத்திலும் ஒவ்வொரு விஷப்பல் (Fangs) உண்டு. விஷப்பற்களில் துளைகள் உள்ளன. நச்சுப் பையிலிருந்து விஷம் குழாய் வழியாக நச்சுப் பற்களுக்கு வருகிறது. விஷப் பாம்புகளை எவ்வாறு தெரிந்துக்கொள்வது? நல்ல பாம்பை எளிதாகக் கண்டு கொள்ளலாம். இதன் தலை குடை போல விரியும். பெரும்பாலன நாகபாம்புகளின் படத்தில் 'V'உருவத்தில் ஓர் அடையாளம் காணப்படும். நாகப்பாம்பின் உடலில் வெள்ளைக்கோடுகள் காணப்படும். இக் கோடுகள் வால்ப்பக்கம் தெளிவாகவும், தலைப்பக்கம் மங்கலாகவும் காண்கின்றன. 'வைப்பர்' பாம்பு தடித்துத் தவிட்டு நிறமாக இருக்கும்.

## வெண்ணிலாவே

எல்லை இல்லாதோர் வானக்குளத்திடையே
வெண்ணிலாவே
அழகுமிக்க வெண்டாமரை போல் விளங்குகிறாய்
வெண்ணிலாவே
உன்னை மோதிச் செல்லும் கருமேகத்தை
வெண்ணிலாவே
நீ ஒளிபெறச் செய்து அழகு ஊட்டுகிறாய்
வெண்ணிலாவே
ஒரு மாதக் காலப் பகுதியினிலே
வெண்ணிலாவே
நீ தோன்றும் கோலங்கள் தான் எத்தனையோ
வெண்ணிலாவே
மாதர் முகத்தை உனக்கிணை கூறுவர்
வெண்ணிலாவே
அனைவரது உள்ளங்களையும் பறிப்பதேன்
வெண்ணிலாவே
மாதத்தில் ஒரு நாள் இரவில்
வெண்ணிலாவே
எம்மைத் தவிக்க வைத்து நீயும்
வெண்ணிலாவே
எங்கு தான் செல்கிறாய் சொல்
வெண்ணிலாவே?

த.கிருசாந்தி

## உங்களுக்குத் தெரியுமா?

01. மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுவர்
கிப்போகிறட்டிஸ்
02. மனித உடலில் மிகப் பெரிய சுரப்பி
ஈரல்
03. இருதய மாற்றுச் சிகிச்சையை முதன் முதலில் செய்தவர்
Dr கிறிஸ்கிரியன் பேனாட்
(தென் ஆபிரிக்கா)
04. உள மருத்துவத்தின் தந்தை
சிக்மன் புறொய்ட்
05. உலகின் முதலாவது பெண் தாதி
புளோரன்ஸ் நைற்றிங்கேள்
06. பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்தவர்
அலெக்ஸான்டர் பிளெமிங்
07. விற்றமின் என்ற பெயரை அறிமுகம் செய்தவர்
பங் விற்றமின்
08. கூர்ப்புக் கொள்கையை நிறுவியவர்
சார்ள்ஸ் டார்வின்

- திருஞானசம்பந்தர் சாரங்கன்
யா.கொக்குவில் இந்துக் கல்லூரி.




# மீனும் கிளியும்

**ஒரு கிளி,** குளக்கரையில் நின்ற மரமொன்றில் மாலை நேரங்களில் வந்து அமர்ந்திருக்கும். அந்தக் கிளியுடன் குளத்திலிருந்த மீனொன்று ஒவ்வொரு நாளும் உரையாடும்.



தன்னைப் பற்றியும் குளத்தைப் பற்றியும் மீன் பெருமையாகப் பேசிக்கொள்ளும். "இந்தக் குளம் மிகவும் ஆழமானது, இதற்குள் நான் எவ்வளவு வேகமாக நீந்துவேன் தெரியுமா?" என்று கூறும்.

தன்னால் அப்படி நீந்த முடியவில்லையே எனக் கிளி மிகவும் கவலைப்பட்டது. "மீனைப்போன்ற திறமை என்னிடமில்லையே!" நான் திறமையற்றவன் என்று எண்ணி வேதனைப்பட்டது.

அந்த வேளையிலே கொக்கு ஒன்று அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. "கிளியே,ஏன் கவலையாக இருக்கிறாய்?" என்று கேட்டது.

கிளி நடந்தவற்றைக் கூறியது.

உடனே கொக்கு, "சிலபேர் மீனைப்போல தங்களைப் பற்றிப் பெருமை பேசிக்கொள்வார்கள். சிலருக்கு உன்னைப் போலத் தம்மிடமுள்ள திறமைகள் தெரிவதில்லை. மற்றவர்களின் திறமையை வியந்து தம்மைக் குறைவாக மதிப்பிட்டுக்கொள்வார்கள்" என்று விவரித்தது.

"என்னிடம் என்ன திறமையிருக்கிறது?" என்று கிளி கேட்டது.

அதற்குக் கொக்கு , "நீ மிகவும் அழகான பறவை , அழகாக உயரப் பறப்பாய், தரையில் நடப்பாய், நீரில் இறங்கினாற் கூடச் சமாளித்துக்கொள்வாய், மனிதர் சொல்லிக் கொடுப்பவற்றை அவர்களைப் போலப் பேசுவாய்" என்று விளக்கமளித்தது.

கிளியே, "மீன் நீரில் எவ்வளவு இலாவகமாக நீந்துகிறது. பார்த்தாயா?" என்று வியந்து கூறியது.

கொக்கு விர்ரென்று நீரிலிறங்கி மீனைப்பிடித்து வந்து தரையில் போட்டது. அது நிலத்தில் சில நிமிடங்கள் கூட இருக்க முடியாது துடிதுடித்து இறந்தது.

'ஒருவன் தன்னை அறிந்துகொள்வதன் மூலம், உலகத்தைப் படித்துக்கொள்கிறான்'

அம்மம்மா



சி.சிவதாயினி
தரம் - 7
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
யாழ்ப்பாணம்.

## பயன்மிகு பனை

பாட்டி சொன்ன கதை யொன்று
ஞாபகத்தில் வருகுதெல்லோ
பனைமரத்து ஓலையிலே பாய்த்தொப்பி செய்திடலாம்
பனைமரத்து மட்டையிலே பாதுகாப்பைத் தேடிடலாம்
பனைமரத்துப் பழமெடுத்துப் பணியாரம் சுட்டிடலாம்
பனைமரத்து சலாகையிலே கூரைதனை
இணைத்திடலாம்
பனைமரத்து வேரெடுத்து விறகாக எரித்திடலாம்
பனங்கிழங்கோ ரொம்ப ருசி
பனைமரத்துப் பயனதிகம்
பாரினிலே பெருமை அதே

இ.ஆரணியா
தரம் - 5
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

# விந்தைச் செய்திகள்




முதலைக்குச் சுமார் 68பற்கள் உள்ளன. ஆனால், அந்தப் பற்கள் உணவை அரைக்கப் பயன்படுவதில்லை. இரையைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவே பயன்படுகின்றன. விழுங்கப்பட்ட இரை அதன் வயிற்றுக்குள் தான் அரைக்கப்படுகிறது!

## நீலத் திமிங்கிலம்



உலகிலேயே மிகப்பெரிய பாலூட்டி நீலத் திமிங்கிலம். இதன் நிறை சுமார் 150தொன். ஆனால் அதற்குப் பற்களே கிடையாது. அது தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போது பற்கள் இருக்கும். குட்டிளாக வெளியே வந்ததும் பற்கள் மறைந்து விடுகின்றன.

## கடல் ஆமை



கடல் ஆமைகளுக்குப் பற்கள் வாயில் இல்லை. உணவுக்குழலில் அமைந்துள்ளன. பற்கள் கூர்மையாக உள்நோக்கி வளைந்து இருப்பதனால் உயிருடன் ஆமையின் வாய்க்குள் சென்ற இரை திரும்பி வெளியே வரமுடியாது.

## தவளை



தவளைக்கு மேல் தாடையில் மட்டுமே பற்கள் உள்ளன. கீழ்த்தாடையில் பற்கள் இல்லை.

## சுறா மீன்



சுறா மீனுக்கு ஒருபல் விழுந்தால் விழுந்த இடத்தில் வேறு ஒரு பல் முளைத்து விடும். இப்படி அதன் ஆயுள் முழுவதும் ஏராளமான பற்கள் முளைத்துக்கொண்டே இருக்கும். இதனால் சுறாவின் முதுமையான காலத்திலும் எதிரிகளை எதிர்த்துப் போராட முடியும்.

## டிராஞ்சலா சிலந்தி




பாலைவனத்தில் உள்ள 'டிராஞ்சலா' சிலந்தியின் வாயில் நல்ல பாம்புக்கு இருப்பது போல இரண்டு விஷப் பற்கள் இருக்கின்றன. அந்தப் பற்களின் அடியில் விஷப் பை உள்ளது. அந்தப் பற்களின் வழியே விஷத்தைச் செலுத்தி இரையைச் செயல் இழக்கச் செய்கிறது.

## ஆர்க்கியாப் டெரிக்ஸ்



பறவைகளுக்குப் பற்கள் இருப்பதில்லை. ஆனால் 15கோடி ஆண்டுகளுக்கு முன் உலகில் தோன்றிய முதல் பறவையான 'ஆர்க்கியாப் டெரிக்ஸ்' க்குப் பற்கள் இருந்தன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.



மிகவும் பயங்கரமான பல் அமைப்புக் கொண்டது தென் அமெரிக்காவில் உள்ள 'பிரான்ஹா' என்னும் மீன். அதன் பற்கள் கூர்மையாவும் உறுதியாகவும் வாள் போன்று உள்ளன. செவ்விந்தியர்கள் பற்களுடன் கூடிய அதன் தாடையைக் கத்தி போல் பயன்படுத்துகின்றனர்

# புலம்பெயர் நாடுகளில் நடக்கும் தமிழ்ப் பெண்கள் மீதான மேலாண்மை

ஜெயதேவியின் டைரக்ஷனில் ஹரிகரன், குஷ்பு, ரியாஸ்கான் நடித்த இத்திரைப்படம் கனடாவைக் களமாகக் கொண்டிருப்பதனால் போலும் தலைப்பும் ஆங்கிலமயமாகியுள்ளது.

பெண்ணின் சுயத்துக்கு ஏற்படும் நெருக்கடிகளும் அதற்கான போராட்டத்தில் ஏற்படும் அவலங்களும், அக, புறக் காயங்களும் இரத்தஞ் சிந்துதலும்..... என வளர்ந்து இறுதியில் அப்பெண்ணின் சிதைவே இப்படத்தின் கருவாகும். குஷ்புவின் நடிப்பு மெருகேற்றியுள்ளது.

பெண் பற்றிய சகல மூட நம்பிக்கைகளையும் உள்ளடக்கும் நூலான 'மரணசாசனம்' அப்பெண்ணின் துயரம் நிறைந்த வாழ்க்கையின் உந்துதலால் ஆத்மாவினால் எழுதப்படுகின்றது. பாரதியார், பெரியார்..... வரிசையில் ஆத்மாவை இனங்காண முடிகின்றது. அந் நூலுக்குக் கிடைக்கும் எதிர்ப்புகளும் வாத, விவாதங்களும் விசாரணைகளும் பெண் பற்றி விசாரணைகளாகி, நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புடன் அங்கீகாரம் பெறும் நூலினூடாகவே கதை நகர்த்தப்படுவது இதன் சிறப்பாகும்.

பெண் போகப் பொருளாவதும் அவளது உடலே முக்கியமாவதும் வழமையான விடயம் எனினும் இது ஒரு கலைஞனது ஊடாட்டத்தினூடாக, புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை மேலும் சீரழிந்து நிற்கும் நிலைமை மிகவும் துல்லியமாகக் காட்டப்படுகின்றது.

தமிழர் பாரம்பரியமும் மனித விழுமியங்களும் சிலர் சமூகப் பெறுமானங்களும் கேள்விக்குள்ளாக்கப்படுவதுடன் அவற்றின் சீரழிவு மனிதத்தை மதிக்கும் பாத்திரங்களினூடாக வெளிக்கொண்டு வரப்படுகிறது.

பெண் அந்நிய நாட்டில் தனிமையில் மேலாண்மை செய்யப்படும் நிலைமை பெருந்தொகையான தமிழர் வாழும் கனடாவைக் களமாகக் கொண்டு காட்சிப்படுத்தப்பட்டிருப்பது இளந்தலைமுறையினருக்கு குறிப்பாக எமது இளம் யுவதிகளுக்கு நல்ல பாடமாகும்.

ஒரு கலைஞன் தனது மன நெருக்கடியை - இறுக்கத்தை கலை வெளிப்பாட்டின் மூலம் காட்டுவது தான் இயல்பு. இசை, ஓவியம் வரைதல் என இவ்வுணர்வு வெளிப்படும் போது பார்வையாளர் ஒன்றிப்போகும் அளவு (Boxing) காட்சி மனதில் நெருடலை ஏற்படுத்தவே செய்கிறது. கனடாச் சூழலில் இதையும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

நவீன தொழினுட்ப உலகில் அனுபவிக்கத் துடிக்கும் அனைத்து சௌகரியங்களையும் மிகவும் எளிதாக 'வெளிநாட்டு மாப்பிள்ளை' யை திருமணம் செய்வதன் மூலமே சாத்தியமாக்கலாம் எனக் கனவு காணும் இளம் பெண்கள் அனைவரும் பார்க்க வேண்டிய திரைப்படம் இதுவாகும். கூடவே அவர்களைப் பெற்று வளர்க்கும் பெற்றோர்களும் தான்.

மனிதப் பெறுமானங்களுக்கு மதிப்புக் கொடுத்து, தமது சுய ஆற்றல்கள், ஆளுமைகளின் பன்முகப் பரிமானங்களை வெளிப்படுத்தித் தனது இருப்பின் அர்த்தத்தைப் புரிந்த - புரிய -

## POWER OF WOMEN

## கனடாவிலிருந்து ஒரு கதை...

முனைகின்ற பெண்களுக்கு அதற்குரிய சுதந்திரமோ, சாத்தியமோ அற்ற சூழல் கொலைக்கு நிகரானதாகும். அதனால்தான் அவளது மரணம் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. (Mental Torturing) தான் ஒரு பெண்ணுக்கு மிகவும் கொடுமையானது. அவளது உணர்வுச் சிதைவுகளை உள்ளத்தின் காயங்களை ஆத்மா என்ற பாத்திரம் உள்வாங்கும் முறைமை - அதனை உணர்ந்து அனுபவித்து நடித்த ஹரிகரன் சினிமா உலகில் தன்னை மேலும் ஒரு கட்டத்துக்கு உயர்த்தியுள்ளார். கமெரா கட்சிப்படுத்தல் என மிகவும் அக்கறை காட்டப்பட்டுள்ளது. ஒரு பாடகனை இப் பாத்திரத்தில் நடிக்கத் தேர்ந்தெடுத்ததும் மிகப் பொருத்தமான தேர்வாகும். அவரது இயல்பான தோற்றம் குலையாமல் மேலும் உடை, ஒப்பனை யாவும் நடிப்பாக அன்றி இயல்பான வாழ்வாகவே அமைந்திருந்தது.

இவ்வாறு அனைத்திலும் கவனங் கொண்டு உயர்ந்த சிந்தனையும், மனித விழுமியங்களையும் தாங்கிய 'ஆத்மா' என்ற பாத்திரம் அவளது மதிப்புக்கும் நட்புக்கும் உரியவராக ஆதரவு வழங்கி சமூகத்துக்கே எடுத்துக் காட்டாக பார்வையாளர் மனதில் பெற்ற உயர் ஸ்தானத்தை கனவோ அன்றி கணவன் மனத்தின் வக்கிர புத்திக்கு அமைய வரும் காதல் காட்சி அப்பாத்திர பார்ப்பைக் கறைப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. எப்படியோ ஹரிகரனையும் 'டூயட்' பாட வைத்து விட்டார் டைரக்டர். எத்தனை தான் பால் சமத்துவம் பேசினாலும் அடிமன ஆழத்தில் ஆண் - பெண் உறவு பற்றிய விளக்கம் இவ்வாறு தான் உள்ளது என்பதற்கு எடுத்துக் காட்டாகவும் இக்காட்சி உள்ளது.

'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற அற ஒழுக்கங்களுக்கு அப்பால் 'எப்படியும் வசதியாக வாழ்ந்தால் சரி' என்று வாழும் எண்ணிக்கையின் அதிகரிக்கும் நிலையில் மனித விழுமியங்களுள் எவ்வாறு சமூகத்தில் நெரித்துக் சொல்லப்படுகின்றன என்பதற்கு ஜோதி பெரியப்பா நல்ல உதாரணங்கள் ஜனநாயக உலகில் பெரும்பான்மை வெல்லும்ங என்ற தத்துவம் இழையோட , தமிழப்பு சினிமாவின் மூன்றாந்தரக் காட்சிகள் இடம்பெற்றாலும் அவற்றை நீக்கிய ஙசாரம்ங எனக்கு இன்று தேவையானதாகும்.

ஙஇளமை, வெள்ளைத்தோல்ங மட்டுமே வெளிநாட்டு இளைஞர்களின் இன்றைய கருத்துக் நிலையாக இருக்கும். சூழலில் மிகப் பெருந்தொகையான இளம்யுவதிகள் சிந்திக்க வேண்டிய விடயம் மட்டுமல்ல; எதிர்காலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலுமாகும்.

இது பற்றிச் சிந்திக்க வைத்த திரைப்படமாக ( ) காணப்படுகின்றது..

## மலையில் முளைத்த சிலை

விலைபேச முடியாத துறவியவன்
அரசியல் வலையில் வீழ்ந்தனன்
அந்தோ
அலைவேவும் கடல் மடியின் அழகுநகர்
கலைமேவும் காப்பரணாம் கம்பல்துறை
கண்ணீரில் மிதக்குதந்தோ
கதிகலங்கி நிற்குதையோ
நிலையாத வாழ்வியலின் தத்துவத்தை
உணர்த்தியவன்
நிம்மதியின் விலைதேடி நெடுந்தூரம்
சென்றவன்
சிலையாக வந்து எம் தேசத்தை
அழித்திடச்
செய்தவன் யாரோ? அப்பாவி யாரோ?
தமிழன் சளையாத மனத்திடத்தை
சிதைத்திட இதுவுமோர் சதிவலையோ?
சிலையாக நிற்பவன் இன்று
சிலிர்த்தெழுந்தால்
இச்செயல் கண்டு கொதித்திருப்பான்
அக்கணமே அவ்விடத்தே மரித்திருப்பான்
தலையிலே மயிரில்லாச் சண்டாளர்
செய்த செயல்
உழையாமல் ஊர்சுற்றி உண்டு
கொழுத்த திமிர்
எம் தலையாய நகருக்குஉலைவைக்க
விடலாமோ?
மலையில் முளைத்த சிலையால்
நிலைகுலைத்து நிற்கிறது தேசம்
அலையாகத் திரண்டெழுவோம்!
ஆர்ப்பரித்துக் குரல்கொடுப்போம்!
சிலையாக நிற்பவனின் சிரந்தொட்டு
ஆணையிட்டோம்

- யாழ். வதிரிவாசன்

## தலைகட்டல்

தாத்தா......!
நீங்கள் பின்னிய கிடுகுகள் எல்லாம்
'தலைகட்டல்' இன்றி
குழம்பியே போயின.

ஐம்பதுக்கு ஐம்பது என
இருபுற தளிர்களையும்
சமனாகக் கருதியதால்.....!

நெருக்கத்தைத் தவிர்க்க
கள்ளப்பன்னாங்கு வீட்டீர்கள்
வலப்பக்கத் தளிர்கள்
இடப்புறத்தை
அழுத்துவது தெரியாமல்....!

காலத்திற்குக் காலம்
அஹிம்சை தொட்டதால்
கீறல்கள் பட்டு.....
கிடுகுகள் பின்னப்பட்டன
தலைகட்டல் இன்றியே...!!

இனி பின்னல் குழம்பாது
நெருக்கடி தவிர்க்க
விட்டும் பின்னுவோம்!
வெட்டியும் பின்னுவோம்!
தலைகட்டும் தனிப்பெரும்பலம்
எங்களுக்கு இருக்கிறது.

விடிகின்ற பொழுது
தலைகட்டிய 'புதுக்கிடுகு'
நம்மவர் கைகளில்
சுதந்திரமாய் தலைகாட்டும்.

ந.வினோதரன்

## உழுத்த மரம்

மனமென்ற குரங்கிற்கு
அன்புதான் வேலி
உறவென்ற உறவுக்கு
உணர்வுதான் கூலி.

தீண்ட முயலும்
தறிகெட்ட வாழ்வுக்கு
பாசம் முதலுதவி செய்கிறது.
எத்தனை பேதங்கள்
இங்கே
உருமாற்றம் செய்கின்றன...?

பற்பல ஆசைகள்
மேதாவிகளாய் நடக்க
மனித மாண்பு
செத்துப்போகிறது.
சந்தேக விருட்சம்
எள்ளி நகைக்கவைக்கிறது.
உறவை விரிசல்களாக்க
இதுதான் அத்திவாரம்.

கற்பனையான
சாணக் கயிறுகள்
சந்தேகத்தைத் திரிக்க
உறவு ஊசலாடுகிறது.

மனம்
பலவீனம் உள்ளதுதான்
ஆயினும்
சந்தேக விழுதை
வீழ்த்த முடியாவிடின்
உறவென்பது
உழுத்த மரமாகிவிடும்.

அ.சூரியன்

## எமது மனங்கள்..............

சேவை அல்லது பொருள் சிறந்ததாக இருக்கவேண்டுமென்பதும் அத்தியாவசியமான ஒன்றே. அதேவேளை, வாடிக்கையாளருடன் பேசும் விதமும் பழகும் முறையுங் கூட முக்கியமானதென்பது மறுக்கமுடியாததாகும். நல்ல சேவையை நல்கிய பின் வாடிக்கையாளருடன் சுடச்சுடப் பேசிப் பாருங்கள். உங்கள் சேவை பற்றி அவர் மறந்து விடுவார். சொல்லின் சூடுதான் மனதில் வடுவாகப் பதிந்திருக்கும்.

இன்னொரு விடயமும் முக்கியமான ஒன்றாகும். தவறுகள் சுட்டிக் காட்டப்படும் போது, அதனைக் கருத்திலெடுத்துத் திருந்துவது ஆலோசனைகளை வரவேற்க வேண்டும். பொதுவாக மனிதன் தனது குறை சுட்டிக்காட்டப்பட்டால் அதை ஏற்றுக் கொள்வது குறைவு. தான் செய்தது சரியென வாதிடுவான். குறை கூறியவரது குறைகளையோ, வேறொருவரது குறைகளையோ சுட்டிக்காட்டி, தான் செய்தது பெரிய பிழையில்லையென நிறுவ முனைவான். குறையைச் சுட்டிக்காட்டியவரை கிண்டல் செய்யவோ, பழிவாங்கவோ முற்படுவான். நிறுவனங்களை நடத்துவோரும் பணியாற்றுவோருங்கூட மனிதர்கள் தானே. குறைகள் சுட்டிக்காட்டப்படும் போது இதேபோன்று பதில் நடவடிக்கைகள் அமைத்து விடுகின்றன. இது பெருந் தவறாகும். நிறுவனத்தைச் சீரழிக்கும் செயல்களாகும். குறைகளும் திருத்தப்படாது, அவப்பெயர் ஏற்படவும் வழிவகுத்துவிடும்

சுட்டிக் காட்டப்பட்ட குறைகள் உண்மையாக உள்ளனவா? என ஆராயவேண்டும். இருந்தால் அவற்றைத் திருத்த வழிவகை கண்டு திருத்திவிட வேண்டும். குறையைச் சுட்டிக்காட்டியவருக்கு மனப்பூர்வமாக நன்றி கூறி மனமாரப் பாராட்டவேண்டும். 'அவர் எம்மை வேதனைப்படுத்த அதைக் கூறவில்லை. எம் முன்னேற்றத்தின் பொருட்டே கூறியுள்ளார்' என்பதை நிர்வாகியும் பணியாளரும் உணரவேண்டும். அது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு படிக்கல்லாக அமையும்.

இவை தனியார் நிறுவனங்களுக்கு மட்டுமேதேவையான ஆலோசனைகளென்று கருதிவிடக்கூடாது. அரச திணைக்களங்களுக்கும் பொருத்தமானவையே.

இன்று நாம் 'விதியே' என்று எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும் வாடிக்கையாளராக ஆட்டுமந்தைகள் போலிருக்கிறோம். இதற்கு சிறந்த போட்டி நிறுவனங்கள் இல்லாததும் ஒரு காரணமாகும். இதன் காரணமாக 'நாம் எப்படி நடந்து கொண்டாலும் அதிகமானோர் எம்மிடம் வருகிறார்கள் தானே. இதென்ன ஆலோசனைகள் கூற வந்து விட்டார்' என்று நீங்கள் எண்ணி நகைக்கவுங்கூடும்.

காலம் விரைவாக மாறிக் கொண்டிருக்கிறது. எதையும் எப்படியும் செய்யலாமென்ற நிலை போய், பணிக்கு ஏற்றவர்களைத் தெரிவு செய்து, பயிற்சி கொடுத்து, பணியில் ஈடுபடுத்தும் காலம் எப்போதோ வந்து விட்டது. அது எமக்குத்தான் தெரியவில்லை. ஆட்டு மந்தைகள் கூட வேணுகானம் கேட்டால் அதை இசைப்பவனின் பின்னே போய் விடும். எனவே, நாம் இப்பொழுதே எமது நடைமுறைகளைத் திருத்தினால்தான் நவீன உலகில் தொழில்களைச் சிறப்பாக நடத்த முடியும்.

## பண்டார வன்னியனின் கனவை.........

கப்டன் வோன்றிபேக் ஏற்கனவே ஒல்லாந் தர் படையிலிருந்து பின்பு ஆங்கிலேயப் படையுடன் சேர்ந்திருந்தான்.

எட்வேட் மெக்ஸின் தலைமையிலான ஆங்கிலேயப் படையணி மீது குலசேகரம் முதலியார் தலைமையிலான படையணி முல்லைத்தீவில் வைத்து தாக்குதல் தொடுத்தது. ஆனால், கடும் சமரின் பின் ஆங்கிலேயப் படைகளிடம் இவர்கள் தோற்றனர். குலசேகரமுதலியார் இப்போரிலே கொல்லப்பட்டார். குலசேகரமுதலியாரின் இழப்பு பண்டார வன்னியனுக்கு பேரிழப்பாகியது. இத்தகைய சூழலில் 1803ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் நாள் விடியற்காலையில் எதிர்பாரத வகையில் பண்டாரவன்னியனும் அவனது படைகளும் ஆங்கிலேயப் படைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

போரிலே பண்டாரவன்னியன் தன் வீரர்கள் அனைவரையும் இழக்கும் நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயர் கையில் தான் அகப்பட்டு விடக்கூடாது என எண்ணிய அவன் அங்கிருந்து தப்பிச் சென்றான். ஏழு ஆண்டுகள்வரை பனங்காமத்தில் மறைந்திருந்து படை திரட்டினான்.

பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்கு எதிராக படை திரட்டுவதாக மேல் பந்து மூலை முதலியார் கதிர்காமநாயகம் என்பவரினால் ஆங்கிலேய ஆளுநருக்கு தகவல் கொடுக்கப்பட்டதால் பண்டாரவன்னியன்

# அணைபோடுவோம்...! ஏலுமெண்டால் வந்துபார்...!!

அன்று 26.12.2004 உலகையே உலுக்கிய கடல் கோள் அனர்த்தம் இலங்கையின் வடக்கு - கிழக்கையும் சூழ்ந்து கொண்டது. ஓலமும் ஒப்பாரியும் தாயகத்திலும் ஒலித்தது. இவற்றால் அதிர்ச்சியுற்றுப் பயந்து, விரக்தி கொண்டவர்களாக, எதிர்கால நம்பிக்கை அற்றவர்களாக எம்மக்கள் நலன்புரி நிலையங்களில் முடங்கினர்.

இவர்கள் மத்தியில் பல உள்நாட்டு, வெளிநாட்டு உளவளத்



துணையாளர்கள், நிறுவனங்கள் என இவர்களை நோக்கிச் சென்றனர். அதே களங்களில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களாகிய நாம் நலன்புரி நிலையங்களுக்குச் சென்றோம். அரங்கு தந்த சக்தியுடன், வலிமையுடன் அரங்கின் துணை கொண்டு உறவுகளின் மனச்சுமை இறக்கப் புறப்பட்டோம். எமக்கு இங்கு அரங்கினால் பன்முகப்படுத்தப்பட்ட உடம்பும் மனமுமே எம்மை வழிநடத்திச் சென்றது.

நலன்புரி நிலையங்களில் சிறுவர்களுடன் ஆரம்பித்த ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் அவர்களுடைய கிராமங்கள், இடைத்தங்கல் முகாம்கள் வரை நீண்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை 'அவலநீக்க ஆற்றுப்படை அரங்கில்' பங்கு கொண்டனர். தம்மை வெளிக்காட்டினர். பொலிகண்டி முதல் பொற்பதி வரையான கிராமங்கள் தோறும் கடலோர ஆற்றுகைகளை நிகழ்த்தினோம். கரையோரம் எங்கும் அம்பாப்பாடல்கள், வலை இழுத்தல், மீன் பிடித்தல், ஏலம் கூறல் என இடிபாடு நிறைந்த கரையோரங்களில் கலகலப்பும், தொழில் பற்றிய கதைகள், தொழில் ஞாபகங்கள் எல்லாம் மீட்டெடுக்கப்பட்டன. இங்கு பங்குகொண்ட ஐயா ஒருவர் கூறுகையில், 'தம்பி நாங்கள் பழைய மாதிரி நிரந்தரமாய்த் தொழிலுக்குப் போக வேணும்.... - ஒரு துண்டு வலை காணும் நாங்கள் முன்னேறுறதுக்கு.....' இவை எம்மைக் கொடுத்து அரங்கில் நாம் கண்ட வெற்றி. தொடர்ந்தும் அவர்களில் ஒருவராக நின்று அவர்களுக்காக வேலை செய்யக்கூடிய ஆர்வத்தையும் வேகத்தையும் அவர்கள் தந்தனர்.

அரங்க செயற்திட்டம் (Theatre project) எமது பாட அலகில் ஒரு பகுதி. சுனாமியின் தாக்கத்திற்குள்ளான மக்களுடன் செயற்படுத்துவதென தீர்மானித்தோம். எமது படிப்பும் விருப்பமும் சமூக சேவைக்கான ஆர்வமும் ஒன்றாக இணைந்தமையால் அர்ப்பணிப்புக் கொண்டோம்.

அரங்க ஆற்றுகைகளின் பின் அந்த ஊர்களின் இளைஞர்களும் நாமும் ஒன்று கூடி கடற்கரையோர மணல் வெளியில், நிலா ஒளியில் அற்புதமான பொழுதுகள் மலர்ந்தன. எம்மைச் சுற்றி இளைஞர்கள், பெரியவர்கள் கூட்டம் எல்லாரும் இணைந்து ஊர் பற்றிக் கதைத்தோம். ஊர் முன்னேற்றம் பற்றிக் கதைத்தோம், பாடினோம், ஆடினோம். பரவசம் கொண்ட இளைஞர்கள், தம் வாழ்வு இப்படிச் சந்தோஷசமாக இருக்க வேண்டும் என ஆசைப்பட்டனர். எல்லோருடைய ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காகவும் அவர்களின் ஆசைகளை வெளிப்படுத்தும் ஓர் களமாகவும் ஆண்களுக்கான அரங்காலயத்தை ஏற்பாடு செய்தோம்.

நாம் எல்லோரும் ஒன்று கூடி உணர்வுகளை வெளிப்படுத்தி சாதிக்கின்ற சக்தியை பெற்றுச் செயலாளிகளாகச் செயற்பாட்டாளர்கள் ஆவதற்கான ஓர் களம் அரங்காலயம்.

21.05.2005 அன்று கடல்கோள் தாக்கிய அதே கரையோரத்தில், வலை,சங்கு, பானை, கரண்டி, தூண்டி, கட்டுமரம், சிற்பி... என கடல் வளங்களினால் கரையோர மண்டபம் அலங்கரிக்கப்பட்டது.

*கடலிட்ட எடுத்தம்*
*கடலிட்ட குடுத்தம்*
*கடலிட்டையே எடுப்பம் -*

என்ற மகுட வாக்கியத்துடன், கடற்தாயை வணங்கி, மாலையிட்டு, தீபமேற்றி அரங்காலயம் நகர்ந்தது. வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த எல்லா இளைஞர்களும் சங்கமித்திருந்தனர். குறிச்சிக்கு குறிச்சி புதுமுகங்களாக, உரம் தந்த வீரர்களாக அரங்க விளையாட்டுக்கள் ஆரம்ப மானது. முகம் பார்த்து உறவாடி உணர்வு சேர்த்தனர். 'சுனாமிக்கு பிறகு இண்டைக்குத் தான் இவ்வளவு சந்தோஷமாய் இருக்கு. இப்ப நாங்கள் சந்தோஷமாய் இருக்கிற மாதிரித் தொடர்ந்து இருக்கிறது எண்டால் எங்களுக்கு எண்டு ஒரு நிலம் வேணும்' சொந்த இருப்பிடங்களை இழந்த இவர்களினது ஏக்கங்கள் இவை. இருந்த இடங்களை விட்டு நகர்ந்து வீடுகள் அமைக்கும் திட்டம் கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளவை.



தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட இவர்கள் 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும். எங்கள் நிலமே எமக்கு வேண்டும்' எனப் பறை முழங்க வேகங்கொண்டாடினர். வேகத்ினூடே திசைகளிலிருந்து 'சுனாமி' வேடங் கொண்ட கறுத்த உருவம் புகுந்தது. போராடினர் இளைஞர்கள். நெரித்துப் பிடித்து அடித்தனர். 'நீ சுனாமியா? இல்லை ஆமியா? எது வந்தாலும் எங்கட மன உறுதியால் வெல்லுவம்....' என இளைஞர்கள் உடல்வலுக் கொண்டு அணை கட்டினர். சுனாமி அடங்கிக் கொண்டது. எந்த அழிவிலும் இருந்து மீண்டெழுவோம் என்ற கடுகதி வேகத்தினை ஒவ்வொரு முகங்களின் உணர்வுகளிலும் காண முடிந்தது.

ஏனெனில், ஆமியும் அழிவும் எம் மக்களுக்குப் புதியதொன்றல்ல. காலங்காலமாக ஆமியோடும்,நேவியோடும், கடலோடும் போரடியே புது வாழ்வு வாழ்பவர்கள்தான் அவர்கள். நம்பிக்கை உரம்கொண்டு எச்சத்திலும் எழும், உப்புக் காத்துப்பட்டு உரமேறியவர்கள் இவர்கள். சுனாமி கொடுத்த புதிய சூழலை எதிர்கொள்ளக் கூடிய வகையில் இவர்கள் சிந்தனை ரீதியான மாற்றத்துடன் அறிவுரீதியான முன்னேற்றமும் ஏற்படவேண்டும். ஓர் புதிய சமூகம் கட்டமைக்கப்பட வேண்டும். இதற்கான வேகமும் மன உறுதியும் கொண்ட இவர்களோடு தொடர்ந்து செயற்பட யாழ்பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் (நாடகமும் அரங்கியலும்) தயார். இச்செயற்பாட்டில் கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி. க.சிதம்பரநாதன் பொருளியல்துறைத் தலைவர் பேராசியர் ந.வித்தியானந்தன், வணிகத்துறை விரிவுரையாளர் எஸ்.சிவராஜா மற்றும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், அரங்க செயற்பாட்டுக் குழுவினர் எனப் பலரும் இணைந்து, செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் இளைஞர்களினூடே நம்பிக்கைக் கீற்றுக்களுக்குப் பலம் சேர்த்தனர்.

**செல்ரன்**
யாழ்.பல்கலைக்கழக
தெருவெளி அரங்கக்குழு.

# நவாலிப் படுகொலை

நாவலிப்படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு தினம் இந்தவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த கொடுமையான பலியெடுப்பு சர்வதேச சமூகத்தையே மிகவும் மன வருத்தத்திற்கு உள்ளாக்கியது.

கடந்த 09.07.1995 ஆம் ஆண்டு தமிழர் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த ஒரு கோரமான கொடிய நாள். அன்றுதான் நாவலி சென். பீற்றர்ஸ் மற்றும் நவாலி முருகமூர்த்தி ஆலயங்கள் அழிக்கப்பட்டு , அப்பாவியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களை காவுகொண்ட நாள்.

வரலாற்றில் இந்த இரத்தக்கறை படிந்த நாள்களை, நிகழ்வுகளை மறக்க முடியாது. தமிழினம் மறக்காது என்று அன்றைய நிகழ்வையொட்டி லண்டன் பி.பி.சி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

'முன்னேறிப் பாய்தல்' எனப் பெயர் கொண்ட 'லீப்போர்வேர்ட்' இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியில் இருந்தும், அளவெட்டியிலிருந்தும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும், குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென 09.07.1995 அன்று வலிகாகம் தென்மேற்கு, வலி.மேற்கு, வலி.வடக்குப் பகுதிகளிலுள்ள மக்கள்குடியிருப்புக்கள், ஆலயங்கள் அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியிலிருந்து விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் தாறுமாறாகப் பாரிய சத்தங்களுடன் நடத்தப்பட்டன.

அன்றைய தினம் காலை வலிகாமம் பகுதி மக்கள் உடுத்த உடுபுடைவைகளுடன், கைகளில் அகப்பட்ட பொருள்களுடன், கண்ணீரும் கம்பலையுமாக வெளியேறிய காட்சிகள் இன்றும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகத் தமிழர் மனங்களில் வடுவாகப் பதிந்துள்ளன.

கால்நடையாகவும், சைக்கிள்களிலும், தள்ளுவண்டில்களிலும், மாட்டு வண்டில்கள் மூலமாகவும், வழுக்கையாறு வெளி, நவாலி, ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை - மானிப்பாய் பிரதான வீதி வழியாகக் கைக்குழந்தைகள், வயோதிபர்கள், முற்றாக எழுந்து நடக்க முடியாதவர்கள் எனப் பலரும் பல இன்னல்களைச் சுமந்த வண்ணம் சென்றனர்.

அவ்வேளையில் சகல வீதிகளிலும் ஹெலிகொப்டர் தாக்குதல் மற்றும் அகோரமான ஷெல் தாக்குதல்களினால் வீதிக்கு வீதி காயப்பட்டவர்கள், இறந்தவர்கள், காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்கள் காணப்பட்டனர்.

## ஜூலையில் நிகழ்ந்த மற்றொரு கொடூரம்

வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருள்கள் அற்ற பொருளாதாரத் தடையான (Economics Embargo ) மந்தமான காலப்பகுதி அதுவாகும்.

இதே நேரம் காயமடைந்தவர்களை ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் சென்ற போதும் அவர்களைக் காப்பற்ற மருந்தகங்களோ வைத்தியசாலைகளோ இயங்கமுடியாத அவலநிலை.

இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் மறக்க முடியாது.

அன்றைய தினம் பல்வேறு வீதிகளினூடாக வெளியேறியோர் நாவலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமர் முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காகத் தஞ்சமடைந்தனர்.

அவ்வேளையில் யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்துகொண்டிருந்த 'கிபிர்' விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை தான்தோன்றித்தனமாக மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசியது.

அவ்வளவுதான்...!

நவாலிக் கிராமம் ஒருகணம் அதிர்ந்தது. வீதிகள் தடைப்பட்டு, மரங்கள் முறிந்து வீழ்ந்து, வீடுகள் தரைமட்டமாகி, மதில்கள் வீழ்ந்து பாரிய புகை மூட்டம் அந்தப் பிரதேசத்தையே மூடியது.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயமும் நவாலி சின்கக்கதிர்காம முருகன் ஆலயமும் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் அதிர்ந்தன.

சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

பல நூற்றுக்கணக்கானோர் கையிழந்து, காலிழந்து தலையிழந்து, உடல் சிதறிக் குற்றுயிராகக் கிடந்த நிகழ்வுகளை மறந்துவிடமுடியாது.

சுமார் 360இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் பலர் சிகிச்சை அளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி உயிர் இழந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அன்றைய தாக்குதலில் பொதுமக்கள் சேவையில் நேரடியாகப் பங்குகொண்ட வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களான நவாலி வடக்குப் பிரிவு கிராம அலுவலர் செல்வி.ஹேமலதா செல்வராஜா அவர்களும், சில்லாலைப் பிரிவு கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை அவர்களும் பலியான அரச சேவையாளர்கள். இவர்களை எவராலும் மறக்கமுடியாது.

அன்றைய தினம் மக்கள் தொண்டுப்பணியில் ஈடுபட்டு உணவு, குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்த இடத்தில் துடி துடித்து உயிர் இழந்தனர்.

ஜூலை 9ஆம் திகதியான இந்தக் கொடூர நாளன்று நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் வருடா வருடம் நினைவுகளும் வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த இனப்படுகொலை நினைவாக நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயப்பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**செ.ரமேஷ்**